உ

ஸ்ரீசற்குருவே

நவநீதசா

இஃது,

வசனரூபமாய்

சகலவேதாந்தசாஸ்திரார்த்தங்களு மடங்கியிருக்கின்

றமையால் முமூட்சுகளில் கற்றவர்களன்றி

மற்றவர்களும் எளிதிலறிந்து

மோட்சானந்தத்தைப்

பெறும்படியான உபகாரார்த்தத்தைக்

கருதி

சேலஞ்சில்லா சிவில்கோர்ட்டு-வக்கீல்

ம-ா-ா-ஸ்ரீ

அப்பாசுவாமிபிள்ளை

அவர்கள்

வினுவிடைகளாக்கிப் பிழையறப் பரிசோதித்து

அச்சிட்டுத்தருகவெனக் கேட்டுக்கொண்டபடி

பாரிப்பாக்கம்

முனியப்பமுதலியாரால்

புரசபாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தது.

சித்தார்த்தி ஸ்ரீ ஆனிமீ.

1919

பிரகரண அட்டவணை.

பிரகரண அட்டவணை முற்றிற்று.

சேலஞ்சில்லா சிவில்கோர்ட்டு-வக்கீல்

ம-ா-ா-ஸ்ரீ அப்பாசுவாமிபிள்ளையவர்களியற்றியது.

கட்டளைக் கலித்துறைகள்.

திருமேவிநிறைந்துளசென்னைமேவுந்தெருண்மிகுசற் *
குருமேவுமுனிவரப்பக்கோவேமுமூட்சுக்குழாங்கள்பலப் ...*
பெருமேவிலிந்த நவநீதசாரத்தைப் பேசுமஃதிற் ....*
உரிமேவியசிறப்பதுவுறச்செய்தனன்பாகவியம்பே........ *

கற்றவரேயன்றிமற்றெம்மனோருக்கரியடைய......... .....*
முற்றறிவாளன்முனிவப்பன்றனன் மோகவிருட்.........*
குற்றங்கெடிய நவநீதசாரத்தைக் கூறமகப் .. ..*
பெற்றவர்புகழ் மெய்ஞ்ஞானவச்சிற் பதித்தனனே .....*

சிறப்புப்பாயிரம்.

ஆசிரியப்பா.

மலர்தலையுலகின் மன்னுயிரனைத்தும்
அலர்தருவெம்மணலகப்பட்டுழலும்
கிருமியேபோலக்கிடந்தாணவமுதல்
திருமுதலில்லாத் தீயமும்மலத்தளைப்
பட்டுமூர்ச்சித்த பல்வகைத்துயரம்
விட்டுயவமுதசஞ்சீவமேயென்னச்
சிறந்துளவடலூற் செப்பிலெண்ணிலதா
நிறைந்தவாரியர்கணிகழ்த்தினவற்றுள்
ருசிபரானவமாம் பொருளமைந்து
போகியும்புகன்றிடப்பொருந்தாச்சிறப்புறு
நவநீதசாரமா நானிலத்ததனை
உவமறவிளங்கவைத்தருளுதியென்னக்
கங்காகுலமாங் கலசவாரிதியில்
மங்காமதியென வந்தவதரித்தோன்
நலமிகுசப்ப சாயநமோத்திரன்
குலவுமாதவத்திற்குமாரனென்றுதித்தோன்
பல்லாண்டிங்கள்வியோர்பயிறருசேலஞ்
ஜில்லாசீயில் கோர்ட்டினில்வக்கீலெனும்
அப்பசுவாமிபாமபிதானத்தோன்
செப்பார்தமிழ்ப்பிருசேர்தடந்தோளினன்
புகன்றனனாசப்புகாறக்களைந்து
நிகரிலாவவதாரிகைமுதனிறீஇ
ஏழுசாவெழுத்திலியைபிதனவெளிர்
செழுமாமறையினந்தம்மார்பொருளை
அம்பேயாலியாயமைதரல்போல
இம்பர்நாட்டுள்ளவெம்போலியரும்
எளிதினிமுத்திலெய்யவுநப்புணஇ
வெளியந்தாண்டருண்மெய்க்குருமூர்த்தி
அருத்திபோடன்பசகமகிழ்ந்திறைஞ்சத்
திருத்திருத்திவெதுநற்செய்யப்பதியுமுற

இந்திரபீடத்திறைகரபாத்திர
எந்தையலர்ப்பதமேத்துமன்பகலாத்
தேசிகன்றெத்தாத் திரயயோகேசன்
வாசமார்மலரடி வணங்குசெங்கமல
நாதனடிருடிநண்ணிடப்பெற்றேன்
கோதமாரிச்சிறுலவிவாழ்நாகை
அருணாசலகுமாரியனிணையடி
தெருளார்மனத்திற்றிகழ்வுறக்கொண்டோன்
கட்சொரியலரிக்கடைவரிக்கடையிசை
பெட்புறவிளக்கும்பிறைசைவாழருணை
சலகுருசிரோமணி தலைமைசேர்பொற்கழல்
மலமயக்கறமகிழ்ந்துளங்கொள்வோன்
உறுபசுங்கதிர்வயலலவிடுமள்ளர்தம்
சிறுமியர்வரிவிழிச்சிறந்ததம்பெடையென
முன்னிவாழளிக்குலமுழக்கிடுதழனியும்
கன்னியர்வதுவையிற்கடிப்படுமுரசின்
அதிர்குரலொலியுமறத்தவர்தம்மை
எதிர்ந்தோரிறைஞ்சிநின்றேத்திடுமோதையும்
[illegible]யுயராவஞ்ச
செந்தமிழார்பரன்றிருவடிபழிச்சும்
ஆம்பியூரமான்றியாயிரமப்பகல்
மேம்படுமூர்த்தியின்மிகுமெய்யடக்கும்
பாவிப்பாலையான்பல்வேதாந்த
வாரிடையுண்டுவளமுறுமன்பராம்
பைங்கூழ்தழைப்பப்பகருமனுபவத்
துங்கமாமழைபொழி தூமுகிலுள்ளம்
களிப்பப்பருகுவோர்க்கருளும்
மூனியப்பநாமமுறுதவத்தோனே

இங்ஙனம் - காஞ்சீபுரம் - இராமசாமிநாயகர் இயற்றியது.

உ

ஸ்ரீசற்குருவேநமா.

நவநீதசாரம்.

காப்பு-பாயிரம்,

(விநாயகர் வணக்கம்.)

ஆரணமுதலாய்ச்சொல்லு மாகமமனைத்துந்தோற்றும்.. *
வாரணமுகவன்றனை வணங்கின்றோக்கரணத்தாலும் ......*
காரணவறிவின்கலையாய்க் கற்பனைகடந்தஞான ....*
பூரணசுகவதீத போதமங்கருளுந்தானே ....*

அருளிறைவணக்கம். [னத்

நிட்பிரகாசவகண்டிதநிசமாஞ்சோதியாய்நிறைந்——ஞ்ஞா
நற்பரமானசிவமெனுமிரதந்தானுமேகத்தண்டாய்ச் செனித்
யுற்பவமானசுகதுக்கத்தமிழாதொருப்பமோறெனக் களித்த ..*
சிற்பரமானயாங்கதேசிகன்றன்றிருவடிசென்னியிற்சேர்ப்பாம்*

நூல்வரலாறு.

(வேறு.)

கடைந்தவேதாந்தவெண்ணெய்க்கட்டியாய்த்திரட்டிமுன்னோர்*
திடம்படவைத்தாரத்தைச் சேரவேயுருக்கிநன்று..............*
யிடம்படநவநீதத்தின் சாரமாய்வகுத்தேனிக்கதை.. ... .*
யடைந்தவர்மடமைநீக்கி யல்லலற்றினிதுவாழ்வார்............(௧)

அவையடக்கம்.

நானுமொன்றுந்தானுநா நானுவானவொருபொருளைத்... ......*
தானுமாளக்கண்ணதனாலத் தன்மையுணர்ந்தோர்க்கிடைபுகலல்.*
மானுக்குத்தான்மணிப்படத்தால்லவயஞ்சுமப்பமற்றநன்றன்...*
புதாகத்தான்சுமப்பவிலதும்புன்மையறிவைமிக்குமால் ... (௨)

பாயிரமுற்றிற்று.

முதலாவது

வயிராக்கியப்பிரகரணம்.

நூல்.

(அவதாரிகை.)

இந்நூலாசிரியர் தாமடைந்த நிரதிசயானந்த சாட்சாத்கார வாநுபூதிப் பிரத்தியட்சத்தை முமுட்சுக்கள் வினிதுணர்ந்து நித்திய திருப்தியாதற்பொருட்டுக் கிருபைகூர்ந்து வயிராக்கியப்பிரகரணம் - முமுட்சுப்பிரகரணம் - உற்பத்திப்பிரகரணம்- திதிப்பிரகரணம் - உபசாந்திப் பிரகரணம் - நிருவாணப் பிரகரணம் என்னும் அறுவகைப்பிரகரணங்களால் இந்நூலினிது முடிக்கத் தொடங்கி பூர்வஜன்ம சமஸ்காரபலத்தினால் சஞ்சித்த ஆவரணவிலட்சணைப்பட்ட ஆத்மானாத்மவிவேகப்பண்ணவந்த சீடனுக்குப் பிரபஞ்சவைராக்கியமுண்டாகும்படி முந்தி வயிராக்கியப்பிரகரணங்கூறுகின்றார்.

(கவி.)

தேகமேயான்மாப்போகஞ்சேர்ந்திடன்முத்தியாமென்.. *
தேகமின்முடிவாய்த்திந் திறந்தவர்பிறவாமான்ற..... ....*
மோகங்களைத்துறந்து முத்திநிலையடைவதற்கே .... .. *
நாகமாய்க்குருவுமுத்தர் நாளுமேயதேவராவார........... (க)

தேகமானிடர்க்குத்தாஞ்செனித்திடல்வளர்தல்மாய்தல்...*
மோகமையிடத்துந்தன்பமாதலால் மோகமென்றுஞ் ....*
வேறுபற்றைநீக்கச்சிந்தித்தெந்திறத்தாலுமேந்... .... . *
தாவுமல்துடைத்தல்வேண்டுஞ்சந்ததந்தருமமாயதன்றே (உ)

இதன்பொருள்.

வினா. தேகமேயான்மாவல்லாமல் உள்ளேயாகிலும் வெளியேயாகிலும் ஆன்மாவேறில்லையென்னில்.

விடை. காணக்கிறபடியா லப்படிசொல்லக்கூடாது.

வினா. மனம் ஒன்றேயன்றி வேறுகாரணங்களுமில்லை- போகத்தில் விருப்பமே மோட்சமே முத்தி-அவர்களிச்சதாகாலமும்

நினைத்திருப்பதே கல்வி-சதாகாலமும் அவர்கள் விசார
தந்துணுற் சரீரமிளைப்பதே தவம் - மார்வரா அவர்களுட
ன் சரசவுல்லாசமாய் வசனித்திருப்பதே சீவன்முத்தி-எப்
போதும் அவர்களது ஸ்தனங்களிற்கூடிச் லயசம்யாகவி
ன்பத்திலமிழ்ந்தயிருப்பதே விதேகமுத்தி-அவர்களணிந்
துள்ள புஷ்பசந்தனாதிகளின் மணங்களை ஆக்கிராணித்தி
ருப்பதே சுவர்க்கம்டாகம் - அவர்களதரபானமே தேவா
மிர்தம் - இப்படிப்பட்ட மாதலைதவிட்டுப் பிரிந்தவனே
நரகத்தையடைவன் - இறந்தவர்களொருகாலத்தும்பிற
ப்பதேயில்லை - அப்படிபிறப்பதுண்டானால் முன்னுள்ள
வறிவு இப்போதிருக்கவேண்டும் - அப்படிகாணமையால்
தேகமேயான்மா - போகமே மோக்ஷம் - இறந்தவர்கள்
திரும்பவும் பிறவார்களென்பது நிச்சயமென்னில்.

விடை. இப்படியுணர்க்கொண்டு மிருகபட்சிகளைப்போல வறிவி
ல்லாதவர்களாய் அருந்தல் பொருந்தல்மாத்திரமாய் வீ
ண்காலம்போக்குவார்களாகில் அவர்களுக்குநரகமேயன்
றிமோட்சமில்லை-மேலும் நாமிறந்தால் நமக்கிருப்பிட
மெங்கே - நாமெங்கேயிருந்து வந்தோம் நமக்குக் கதி
யேதென்றுவிசாரித்தறியவொட்டாமல் அவர்கள்புத்தியை
மறைத்திருப்பது அஞ்ஞான காரியமல்லாமல் வேறல்ல

வினா. அஃதெப்படியென்னில்.

விடை. தேகமே அறிவாகிய வான்மாவென்றால், தேகமிருக்குங்
காலமெல்லாம் அறிவிருக்கவேண்டுமே அப்படிகாணாத
படியினால் தேகம் பிணமாய்க் கிடக்கும்போது அவ்வா
கியவுயிர்போய்விட்டதனால் தேகத்தினுள் அறிவாகியதேகி
யொருவனுண்டு - அவன் இத்தேகத்தைவிட்டுமறுதேகத்
திற்போனதால் இத்தேகம் பிணமாய்கிடக்கின்றது-ஆ
கையினால் வேறேதேகியொருவனுண்டென்றும் தேகம்
ஆன்மாவல்ல ஜடமென்றுந்தள்ளப்பட்டது.

வினா. ஸ்திரீபோகமே மோட்சமல்லவென்பதெப்படியெனில்.

விடை. மலங்களைப் புசிக்கவேண்டுமென்றிச்சித்துத்திரிகின்றவூ
ர்ப்பன்றியானது அன்னியரால்விடப்பட்ட அசுத்தமான
மலங்களைப்புசித்துக் கோடையானவெய்யிலால் தவித்து
ச் சூடுகொண்டு வரும்வழியில் அசுத்தமாகியசாக்கடைச்

சேற்றைக்கண்டு அதில்போய் விழுந்து புரண்டு அவ்வசுத்தத்தைக்குடித்துக் களிப்பாகிய தாகசோகந்தணிந்து சுகித்திருப்பதுபோல மூடனானவன் ரத்தமாங்கிஷமலமூத்திரமிட்டான துர்க்கந்தங்க ணிறைந்து அனேக ஜென்மங்களிற்செய்துள்ள பஞ்சமாபாதகங்களனைத்தையுமொன்றாககூட்டிப் பிரமன் ஒருபெண்வடிவாகச் சிருஷ்டிக்கவந்த மாயாரூபத்தைக்கண்டு சுகமென்றிச்சித்து அவர்கள் கச்சிலாகிய வாய்நீராயுண்டு தனங்களாகிய மாமிசக்கட்டிகளிலழுந்தி அசுத்தமாகிய கால்களையெடுத்துக்கண்களிலொத்திக்கொண்டு யோனியாகிய வப்பளத்தில் விழுந்து சதாகாலமுமதுவேயின்பமென்று சுகித்திருப்பன்- இந்தமூடனும் அந்தச்சாக்கடைச்சேற்றில்விழுந்துபுரளுகின்ற ஊர்ப்பன்றியுஞ்சரியாம்- ஆகையால் பரிசுத்தமாகிய மோட்சவிருப்பமுடையவர்கள் சுத்தநிஷ்டராயிருக்கின்ற ஈஸ்வரானுக்கிரகம்பெற்று அடிமைத்திறஞ்செய்கின்றபெரியோர்களைக்கண்டு பூசித்து அவர்களால் நித்தியசுகமாயிருக்கப்பட்ட மோட்சத்தைப்பெறுவார்கள்- அங்ஙனமிருக்கப் போகமேமோட்சமென்பது கூடாது இறந்தவர்கள் பிறப்பார்களென்பதெங்ஙனே.

௭. இறந்தவர் பிறப்பாரென்பதெப்படியென்னில்.

விடை. சாக்கிரத்தில் பரோக்ஷியம் பண்ணும்போது சீவன் ஆசக்தியாய்நினைத்தபொருள்களை ஸ்தூலதேகத்தைவிட்ட சொப்பனாவஸ்தையில் சத்தியமாய்க்கண்டனுபவிப்பதுபோல இந்தப்பிறப்பில் ஆசக்தியோடிருந்த வாசனையின மரணமடையும்போது மறுபிறப்புக்கு வித்தாகி அந்தப்போகங்களை யெடுத்தனுபவிப்பனென்பதே துணிவு.

௮. இறந்தவர்கள் மீண்டும்பிறப்பது பொய்யாகும் முன்னான நினைவுகள் தோற்றவேண்டுமேயென்னில்.

விடை. நித்திரைபோன பக்கிரமித்திராதிகாரத்தைப்பற்றிச் சொப்பனாவஸ்தையில் மெய்யாகவந்திருக்கக்கண்டனுபவிக்கும்போது இது பொய்யென்று ஒருவருமெண்ணுவதில்லை முன்னமே இவர்களிருந்தபோதும் என்று சாக்கிரத்திலிருந்தது சிலர்க்கே இப்போதுஞ் சொப்பனங்கள

னுகிறான் இவனுக்கேன் முன்னுள்ள நினைவுகள் தோற்ற
வில்லை - ஆதலா லிறந்தவர்கள் பிறந்தாலு முன்னிருந்த
நினைவுகள் தோற்றுமென்பதே துணிவு.

விறு. அப்படி தோற்றாமைக்குக் காரணமேதென்னில்,

விடை. இந்தச் சீவன் தூலதேகத்துடன் கூடி இந்திரிய வியகார
மான சாக்கிரத்திருந்து பிறகு ஸ்தூலதேகத்தைக் கைவி
ட்டுச் சூட்சுமதேகத்தை யபிமானித்ததினால் முன்னுள்
ள நினைவுகள் தோற்றவில்லை இப்படியே எழுவகைப்பிற
ப்பிலு முண்டான நினைவுகளு மந்தந்தத் தூலத்தைவிட்டு
மறுபிறப்பாகிய வேறொரு தேகத்திற்புகும்போது இந்
தச்சீவன் மரணாவஸ்தையிற் பட்டதுன்பத்தினு லறியவி
ல்லை ஆதலால் இறந்தவர் பிறவாரென்ற வினா தள்ளப்ப
ட்டு இறந்தவர் பிறப்பாரென்ற சித்தாந்தமே கொள்ளப்
பட்டது.

விறு. ஆனால் சிலர் தேவபோகத்தைக்குறித்து யாகாதிகருமங்
களைச் செய்கின்றார்களே அதனாலின்பமில்லையோவெனில்,

விடை. அந்தத்தேவப்பிறப்பிலு மின்பமில்லை - எப்படியென்றா
ல் தேவயோனிகளிற் பிறக்கின்றகாலத்திலுந் துக்கம் நிற்
காலத்திலும் பிரமாதிதேவர்களாலும் ரிஷிமீஸ்வரர்களாலும் ஒரு
வர்கொருவரால் நேரிடும் அன்னியோன்னியசாபத்தினாலும் ஒரு
வர்பெண்சாதி தனங்களை யொருவரபகரிப்பதினாலும் ராக்ஷசர்கள்
தங்கள் போகபூமியைப் பிடுங்கிக்கொண்டு அடித்துத் துரத்திவிடு
வார்களென்கிறபயத்தினாலுந் துன்பமேயல்லாம லெள்ளளவுமின்
பமில்லை-மரணகாலத்திலும் முன்செய்துள்ள யாகாதிகர்மபலத்தி
னால் எழுபத்தொரு சதுர்யுகம் ஆனந்தபோக மநுபவித்துத் தீர்
ந்தவுடன் அங்குள்ளதேவதைகளால் பிடித்துத்தள்ளப்பட்டு நட்ச
த்திரங்களாகித் தலைகீழாய்ப் பூமியிலெரிந்துவிழும்போது அவ்வா
னந்த மறந் தனித்தியமாய்ப் போவதினாலும் மீண்டுந்தவிக்குங்
காலத்திலும் முன்பு பசுபந்தனம்பண்ணின பாவகர்மத்தினால் பூ
மியில் நாக்குப்பூச்சிபுருமிகளாய்ச் செனிப்பதினாலுந் துன்பமெ
ன்பதே துணிவு.

விறு. ஆனாலிந்தமானிடப்பிறப்பில்தானின்பமில்லையோவெனில்.

விடை. இந்தமானிடயோனிகளிற் பிறக்கின்றகாலத்திலும் மாதா
வின் கருப்பப்பையிற் கட்டுண்டு அவளது மலமூத்திரக்
கிருமிகளினாலும் ஜடராக்கினியினாலும் வெதும்பி அவள் அன்னபா
னாதிகளை நிறையவுண்டபோது உடல் நெருக்கத்தினால் மூச்சுவிடு

தற்பிடமின்றிப வருத்தத்தினாலும் அவளுண்ணும்போது எழுகி
ன்றவுதராக்கினியினால் சுடப்படுகிறபிரயாசையினாலும் பிறவிநோ
க்குங்கால் பிரசூதவாயுவினால் மோதுண்டு ஆலையிற்பட்டகரும்
பைப்போலும் செக்கிலிட்ட எள்ளுப்போலும் யோனித்துவாரத்தி
னெருக்குண்டு மலமேலின்றனைத் தலைகீழாய்த் தள்ளுவதுபோ
ல் பூமியிற் பிள்ளையாய் விழுகின்றதினாலுந் துன்பம் - திரிகாலத்
திலும் சைசவப் பருவத்தில் கணங்கள் பறவையாதிகளால்வருத்
தப்படுகிறதினாலும், பாலப்பருவத்தில் காதுகுத்தல்சுரமுதலிய ப
லவியாதிகளாற்படும் பிரயாசத்தினாலும், வாசித்தல் முதலியகரு
மங்களால் உபாத்தியாயர் முதலானவர்களாலுண்டாகும் வருத்தத்
தினாலும், குமாரப்பருவத்தில் தனதானியங்களைச் சம்பாதிக்கவே
ண்டிவருகிறதாகமோகங்களினாலும், அதற்கிடையூறுவருவதினாலு
ம், விஷயபோகவிச்சையினாலும், அகங்காரமிருப்பதினாலும், படி
யாமற்போனதினாலும், படித்துந் தர்க்கங்கள்பேசவருவதினாலுந்
துன்பம் - விருத்தப்பருவத்திலோவென்றால் ஆசைமிகுவதினாலும்,
நரைதிரையுண்டாகையினாலும், பலவியாதிகளுண்டாதலினாலும் மனை
வி முதலியோர்களுக்கு வியாதி வருதலினாலுந் துன்பம் ஒருவனுக்
குப்பிராணதாரகமாயிருந்தபிள்ளைசாகவும், அந்நேரம்வீடிடிந்து
விழவும், உழுதமாடுசாகவும், கடன்காரர்வந்துமறிக்கவும், அடி
மையூர்மதிக்கவும் வராவிருந்துவரவும் வீட்டில்தனக்காசளவி
ல்லாமல் அயல்வீட்டில்கடன்கேட்க, அவர்களைக்கொடுக்கவொட்
டாமல் முன்கடன்காரர்மறிக்கவும், இப்படி நானாவிததுன்பங்களி
னால் காற்றலைக்கவான சலத்தில் பிரதிபிம்பித்த சந்திரன்போற் கல
ங்கப்படுகிற வருத்தமுண்டாவதினாலுந் துன்பம் - மரணகாலத்
திலும் வாத பித்த சிலேஷ்ம குன்ம சூலைமுதலான பலரோகங்கள்
மேலிட்டுச் சேதனமும் பெற்றிருக்கிறபோது நமனைக் கண்ட
துபோல் பயங்களினாலும், நரகங்களினாலும், ஊர்த்தசுவா
சத்தினாலும் வருத்தச் சிலேத்துமத்தினாற் கட்டுண்டு வேதனையான
பிராணப்பிரயாணகாலத்திற் காண்கிறதுக்கங்களினாலும், அப்படி
பிராணனை விட்டின்போது மெருட்பாதத்திலும் கும்பிபாகமான நர
கத்திலும் சம்மிதேசனத்திலும் அசிபத்திரவனத்திலும் விழுந்திய
மபடர் தண்டிக்கப்பட்ட யாதனைகளினாலுந் துன்பம் - இப்படி
தேவர் மனிடரென்னு மிருவகைப் பிறவிகளே துன்பமானால் எ
னையதிர்யக்காகிய மிருகபட்சி தாவராதிகளெல்லாம் துக்க சமு
த்திரமுந்திப் பாவமான நரகங்களிற் பங்கியாகிகளைவெல்லாமி
ப்படி வெளிவிட்டுச் சொல்லமுடியாது ஆகையினாலிந்தப்பிற
விகளிலுண்டாகிறதுக்கத்தையெல்லாம் விசாரித்தறியவேண்டும்.

வினா. விசாரித்தறியுமார்க்கமெப்படியென்னில்.

விடை. யானெனதென்னும் பற்றுக்களொழிந்தால் சீவத்துவங் கெடும் இந்த யானெனதென்னும் பற்றுகளே சீவசொரூபம் இவ்விருவகைப் பற்றுகளில் முந்தி எனதென்னும் பற்றைவிடவேண்டும்.

வினா. அஃதேதெனென்னில்.

விடை. பெண்சாதிபிள்ளைகள் கிரகம் பூமி தனதானியாதிகளை யென்னதென்றபிமானிப்பது ஆன்மாவுக்குச் சுபாவமல்ல- அது அறியாமையான மோகாந்தகார மூட புத்தியினால்வந்தது.

வினா. அதற்குவிவரமெப்படியென்னில்.

விடை. பெண்சாதியானவள் ஒரு தாய்தகப்பனுக்கு மகளாயிருப்பதினாலும் நீஒருதாய்தகப்பனுக்குமகனாயிருப்பதினாலும் அவளெந்தவூர் நீஎந்தவூர் இப்படி புறம்பாயிருக்க அவளென்பெண்சாதியென்றுனக்குச் சத்தியபுத்தி வரலாகுமா- உன்னைவிட்டு அவள்பிரிந்துபோய்விடுகிறாள் அவளைவிட்டு நீபிரிந்துபோய்விடுகிறாயாகையாலுனக்கவள் சொந்தமல்ல அவளை என்னதென்பதகூடாது- பின்னும்பிள்ளையை என்னதென்கிறாயே அந்தப்பிள்ளையை நீயாயுண்டாக்கினையா அல்லது உன்பெண்சாதியாலுண்டாகப்பட்டதா அல்லது அன்னியர்களாலுண்டானதா இப்படியுங்களொருவராலு மூண்டாக்கப்படாதிருக்க வீணாக மயங்குவது பிராந்தியே மேலும் சொப்பனத்தில் மலடிபிள்ளைபெற்றதும்போலும் இந்திரசாலவித்தையால் வல்லவன் வித்தை காட்டுவதும்போலும் பிரமசிருட்டியினா லிருவருக்குநடுவே ஓர்பிள்ளையெனத்தோற்றியது இதை எப்படி என்பிள்ளையென்று சொல்லுவது தெருவிற்கண்டபிள்ளையை என்பிள்ளையென்றெவன்சொல்லுவான் அதுபோலப் பிரமசிருஷ்டியால் வந்தபிள்ளை பிரமன்பிள்ளையல்லாமல் உன்பிள்ளையல்லவாதலால் பிள்ளையை என்னதென்பதகூடாது - அப்படியேயிந்தவீடுவாசல் பூமிதனதானியாதி சம்பத்துகளெல்லாம் உன்தகப்பனாலார்ச்சிக்கப்பட்ட படியினாலும் அறிவைநோக்கி விசாரிக்குமிடத்து நீயவனுக்குப் பிள்ளையாகாமற்போகிறபடியினாலும் நீ இதுகளையும் என்னதென்பதகூடாது.

வினா அப்படிக்கல்ல நானே கஷ்டப்பட்டுத் திரவியங்களைச் சம்பாதித்து அதனால் வீடுவாசல் பூமியாதிகளைச் சேகரித்தேனே யென்னில்

விடை. அப்படியானாலுமந்தத்திரவியங்களுன்னதல்ல,

வினா. அதுவெப்படியென்னில்;

விடை. திரவியங்களெல்லாம ராஜாக்களுக்குச் சொந்தமானதால்

இந்தத் திரவியங்களையுமென்னதென்பதுகூடாது.

வினா. ஆனால் பெண்பிள்ளை திரவியமென்கிற ஈஷணாத்திரயங்களென்னதல்லவென்று போனாலும் இந்தத் தேகமான நான் இருக்கிறேனே யென்னில்,

விடை. தேகமுமுன்னதல்ல நீயொருவரிடத்தி லிரவல்வாங்கினது.

வினா. அதெப்படியென்னில்.

விடை. நெடுங்காலமாய்ப் பிறப்பிறப்புகளாகிய துக்கங்களிற்பட்டு திரியக்சாதி தாவரங்களாய்ப் பிறந்தலுத்து அந்தப்பிரயாசையெல்லாஞ் சிஞ்சித்து விவேகத்தினாலறிந்து நீயீசுவரனைநோக்கி இந்தச்செனம சாபல்லியமாய்க்கரையேறும்படி எனக்கோர் மானிடசரீரங் கொடுத்தருளுமென்று பிறவிகள்தோறும் வேண்டினபடியால் ஈசுவரன் கிருபைகூர்ந்து நீ இந்தமானிடசரீரத்தைப் பெற்று நம்மைவேண்டி நிஷ்காமியதவஞ்செய்து நமது திருவடிசுகத்தைப் பெறுவாயென்றிரவலாகக் கொடுத்தருளினார்.

வினா. அப்படியானால் அந்தக்காரணத்தை ஒருவருமேனறியவில்லையென்னில்,

விடை. கருப்பாசயத்திற் கட்டுண்டிருந்ததினாலும் பிறவிநோக்குங்கால் பிரசூதவாய்வு முரித்துத்தள்ளுகலினாலும் யோனித்துவாரநெருக்கமுதலிய யாதனைகளாலும் முன்னுள்ளதினைவுகளெல்லாம் இந்தச்சீவன் மறந்து விட்டுப் பஞ்சபூத பௌதிகமாகிய இரவலான இச்சரீரத்தையுந் தானென்று சத்தியபுத்தி பண்ணிக்கொண்டபடியால் ஒருவருக்குங் காரணந்தோற்றவில்லை.

வினா. ஆனாலிரவலென்பதற்கு உவமானமெப்படியென்னில்,

விடை. ஒருபுருடன் ஒருதொழில்செய்யக்கருதி அடுத்தவீட்டுக்காரனிடத்தில் ஒருகத்தியை யிரவலாகவாங்கிவந்து உடனே அந்தக் கத்தியின்மேல்வைத்த பிரியமோதப் பிரமோதங்கொண்டிரவலென்பதுமறந்து சொந்தம்போல வைத்துக்கொண்டு அதனால்தானினைத்தகருமத்தைநிறைவேற்றிக்கொள்ளாமலிருந்து விட்டான் அப்படியிருக்கச் சிலநாளைக்குப்பிறகு கத்திகொடுத்தவன் சந்நிதியில்வந்து என்கத்தியைக்கொடுவென்றுகேட்க இவன் அவனுடையகத்தியென்பதுந் தானிரவல் வாங்கிவந்ததுமறந்து வழக்குப்பேசுமளவில் அவன் கோபங்கொண்டு இவனையடித்துவருத்திக் கத்தியைப் பிடுங்கிக்கொண்டு போவானேயல்லாமல் கத்தியைவிட்டுப் போகமாட்டான்-அதுபோல நீயும் ஈஸ்வரனிடத்தில் அனந்தஜென்மங்கடோறும் வருந்திக்கேட்டு இரவலாக வாங்கிவந்த இந்தச்சரீரத்தை இப்போதுபட்ட பிறவிமூர்ச்சையினு

ல் மறந்து யானெனதென்று சத்தியபுத்திபண்ணிக்கொண்டிருக்கிறாய் இனி நியமப்படி இரவல்கொடுத்தவர்வந்து பறித்துக்கொண்டுபோய்விடுவார் அப்போது முன்போலத் திரியக்காதிதாவரங்களாய்ப்பிறந்திளைத்து ஐயையோ நாம்முன்சரீரமிருக்கும்போதே நல்லதவத்தைப்பண்ணி மோட்சமடையாமற் போனோமே யென்று புலம்பித்திரிக்கவேண்டுமேல்லாமல் வேறில்லை.

வினா. ஆனால் முன்போலவே யிரவல்வாங்கிவந்து மறவாமல்நல்லதவஞ்செய்து மோட்சத்தைப்பெறுவோமென்னில்.

விடை. திரும்பவும் இந்தமானிடசரீரம் பெறுவதரிது.

வினா. அதெப்படியென்னில்

விடை. முன்கத்தியை யிரவல்வாங்கிவந்து தானினைத்த கருமமுமுடிக்காமல் கத்திகொடுத்தவன்வந்து கேட்டவிடத்தில் தன்சொந்தமென்று வழக்கிட்டதை மறந்து பின்னுமவனிடத்திற்போய்க்கேட்டால் புளிக்காரனென்றடித்துத் தள்ளிவிடுவானேயன்றி ஒருபோதுங்கத்தியிரவல்கொடுக்கமாட்டான் அதுபோல ஈசுவரனிரவலாகக்கொடுத்ததேகத்தை நீ யானெனதென்றபிமானித்து அறியாமையினால் பொய் கொலை களவு கட்காமமாகிய பஞ்சமகாபாதகங்களையே நடப்பித்து வழக்கிட்டுநின்றதால் இனிமேல் நல்லவுயிர்தச்சரீரங்கிடைக்கமாட்டாது - ஆகலாலிந்தச்சரீரமு[illegible]வே கழுமிருக்கும்பொழுதே யிரவலுடைமை யென்றறிந்து தேகாதிப்பிரபஞ்சங்களிலுள்ள அபிமானமெல்லாம் விட்டு நிஷ்காமிய தவம்பண்ணி மோட்சத்தைப் பெறவேண்டுமென்றறியாயாக.

வினா. ஆனால் யானெனதென்னுமபிமானமில்லாவிட்டால் வியவகாரங்களெல்லாம் தூங்கினவன் கைப்பொருள் நழுவினாற்போல நழுவிவிடுமே யன்றித் திடமாய் நடக்கமாட்டாது - ஆசையாலபிமானமிருக்கட்டுமே அதனாலாமியேதென்னில்.

விடை. ஓர்கிரகஸ்தனான பிராமணன் தன்பெண்சாதியோடு கங்காயாத்திரைபோகக் கருதி மறுவளவிற் குடியிருந்த ஓர் ஏழைப்பிராமணனையழைத்து நாங்கள்காசியாத்திரைபோய் வருமளவும் நீர் குடிக்கூலியின்றிக் குடும்பத்துடன் எங்கள்வீட்டில் குடியிருந்துகொண்டு எங்கள்வீடுவாசல்மாடுமனை முதலானசகலவண்டபதார்த்தங்களையும் பதனமாகக் காப்பாற்றி நாங்கள் வந்தவுடன் எங்களிடத்தில் ஒப்புவித்தால்மாதம் ஒன்றுக்கு ஒருவராகன் சம்பளந்தருவேனென்று சொல்லி அந்தவேழைப்பிராமணனைக் குடிவைத்துவிட்டு யாத்திரைபோய் காசிமுதல் கன்னியாகுமரியவரையிலுள்ள மூர்த்திதலம் தீர்த்தங்களை முறைப்படி தரிசித்துக்கொ

ண்டு சிலநாட்களிருந்தபின் தன்வீட்டுக்குத் தன்கிரஹணியோடு உ
ந்துசேர்ந்தான் - அந்தப் பிராமணனைப்பார்த்து குடியிருந்தவ
னாப்பிராமணன் நீங்களாரென்றுகேட்க, நாங்களுன்னை இந்தவீ
ட்டிற் குடிவைத்துவிட்டுக் காசியாத்திரை போனவர்களல்லவா இ
ப்போது நாங்கள் திரும்பிவந்து சேர்ந்தோமாதலால் எங்கள்
வீடுவாசல்முதலிய வெல்லாம் ஒப்பித்துப்போட்டு உன்சம்பளத்
தை வாங்கிக்கொண்டு போவென்றுசொல்ல அந்தவசனத்தைக்கே
ட்டு கோபங்கொண்டு வீடாவதேது வாசலாவதேது குடிக்கூலிக்
கு வைத்துப்போவதாவதேது உனக்கேதாவது பயித்தியம் பிடித்
ததோவென்றுகூவி நீ முன்புதானே இந்த வீடுவாசல்களை விற்ப
னைசெய்துவிட்டுப் போயினையே அதற்கு விக்கிரயசாதன மிருக்
கிறதென்று அபிமானித்து வழக்குப்பேச அதுகேட்ட காசிவாசி
யும் நியாயஸ்தலத்திற்போய் கூகூ வென்று முறையிட அம்மு
றையீட்டதைக்கேட்ட நியாயாதிபதிகள் வஞ்சகனான ஏழைப் பிரா
மணனைப் பிடித்துவரச்சொல்லி விசாரிக்க அவன் அந்தநியாயாதி
பதிகளைப்பார்த்து இவர்கள்யாத்திரை போகிறபோது விற்றுவிட்
டுப்போனார்களன்றி என்னைக்குடிவைத்துப் போகவில்லையென்று
பொய்ச்சாதன மொன்றெடுத்துக்காட்ட அதுகண்ட நியாயாதிப
திகள் இதைச்சாட்சிமுகாவலியா லறியவேண்டுமென்று அந்த
வீட்டிலுள்ளவர்களையழைப்பித்து நீங்களிந்தச்சேதி யறிவீர்களா
வென்றுகேட்க அவர்கள் நியாயாதிபதிகளைப்பார்த்து இவனைக்கு
டிவைத்துப் போனதேயல்லாமல் வீடுவாசல்களை விற்றுப் போ
கவில்லையென்று சொன்னார்கள்-அதுகேட்டநியாயாதிபதிகள் அந்
தக்கபடப் பிராமணனைப் பிடித்துக்காவல்பண்ணி நீதிரோதகமா
ய் ஒருவன் சொத்துகளை யபகரிக்கும்படி பொய்ச்சாதன மேற்ப
டுத்தினபடியால் உனக்குயிருந்த அபராதம் விதிக்கப்பட்டது இ
ந்த அபராதம் விதித்த முதம்பொருள்சேருமளவும் நீ காராகிரகமா
யிக்காவலிலிருந் தூழியஞ் செய்யவேண்டும் நீ அவன் சொத்துக
ளெல்லா மபகரித்துக் கொண்டபடியால் உன்சொத்துகளெல்லா
ம் ஏலம்போடுவித்து வட்டிக்காகச்சேர்க்கப் படுமென்று நியாயத்
தீர்த்தார்கள் அதுபோலத்தகாதிப்பிரபஞ்ச விவகாரத்தில் ஒருவ
னுக்கு நானெனதென்று மபிமான மேலிடுமாகில் முதலாகிய
மோட்சபலமுங்கெட்டு வட்டியாகிய நித்திய சுவானுபவ மும்
போய் சதாதுக்கத்திலேயே அழுந்திவிடுவான்.

வினா. ஆதலால் அபிமான நீங்கும் வழியேதென்னில்.

விடை. சரீரமுதலாயுள்ள வகைப்பற்றுக்களையும் சவிஜாத்திரங்களான
புறப் பற்றையு மன்னியமென்றறிந்து அதுகளிற்றானே

னதென்று வருமபிமானங்களைவிட்டு இதுகளை நமக்குக் கூட்டிவைத்தவினையானது நியமப்படிபிரித்துவிடுமென்பதிற்சந்தேகமில்லை இதுவெல்லாங் கனவிற்கண்ட பொருள்போலாகுமென்றுணருதி அவற்றில் ஆச்சரியமெழவொட்டாமல் பிரமத்தியானத்திலனுதினமும் பழகுவதே அபிமான நீங்கும் வழி.

வினா. அபிமானமற் றனுபவிப்ப தெப்படியென்னில்,

விடை. புளியம்பழத்தோடும்போலுந் தாமரையிலையிற் றண்ணீர் போலும் சேற்றிற்பிள்ளைப்பூச்சிபோலும் யாமெனதென் னும்பற்றுகளிற் பற்றியும் பற்றறிருந்து சற்குரு சாஸ்திர முன்னிலையில் சிரவணாதிகளையவசியம்பண்ணவேண்டியதுசித்தம்.

வயிராக்கியப்பிரகரணமுற்றிற்று.

இரண்டாவது

முமுட்சுப்பிரகரணம்.

(அவதாரிகை.)

முற்பிரகரணத்தால் பிரபஞ்ச வயிராக்கியந்தோன்றி தேகாதிப்பிரபஞ்சங்களநித்தியமென்றும், தேகியொருவனே நித்தியமென்றும், ஒருவாற்றானுணர்ந்த சீடனுக்கு மோட்ச தாகமுண்டாகும்படி மேல்முமுட்சுப்பிரகரணங்கூறுகின்றார்.

(கவி.)

சற்குருசாத்திரத்தாற்சவணமாதிகளுண்டாக... ....*
நற்றுணைசகாயமான வனுபந்தநான்குமுண்டாய் ....*
முற்படுசாதனத்தின் மோட்சதாகத்தினாலே... ... .*
சிற்பரகுருவைத்தேடித் திகைத்திடுவோன்முன்கண்டான் .....(௧)
கண்டவனாசான்பாதங் கருத்துறவணங்கியெந்தாய்... ....*
பண்டைமாயையினூன்றும் பஞ்சகோசத்தைநீக்கித்...........*
தொண்டனேற்குபதேசந்தான் சொல்லுமென்றவனைவத்தங். *
குண்டெனுந்திகைசெய்தங்கொருப்படுஞ்சாத்தஞ்செய்தான் (௨)

இதன்பொருள்.

வினா. சற்குருசாஸ்திர முன்னிலையிற் சிரவணாதிகளுண்டாவதற்குமுன்புசெய்காரியமேதென்னில்.

விடை. அனுபந்தசதுஷ்டயங்களையனுசரிக்கவேண்டும்.

வினா. அனுபந்தசதுஷ்டயமாவதேதெனில்.

விடை. அதிகாரி விஷயம் சம்பந்தம் பிரயோசன மென்னுமிந்த நான்கும் சாஸ்திராரம்பத்திற்குப்பலம் ஆதலா லிந்தநான்கும்வேண்டும்.

வினா. அதெப்படியென்னில்.

விடை. சாஸ்திராரம்பஞ் செய்கிறபுருடனுக்குப் பலலக்ஷணமாயிருப்பதே பிரயோசனம் அப்படிப்பிரயோசனமில்லாவிட்டால் மூடனுக்குக்கூட வொன்றிலும்பிரவிர்த்தி வரமாட்டாது,

வினா. இந்தச் சாஸ்திரத்திற் கதிகாரியெவனென்னில்.

விடை. சாதன சதுட்டய சம்பத்தியுடையவனும் யத்திசாமர்த்தியனும் வித்துவானும் மேதாவியுமாயிருக்கிற புருடனே யதிகாரி.

வினா. விஷயமாவதே தென்னில்.

விடை. ஜீவப்பிரமைக்கியமாயிருக்கிற சைதன்னியமே விஷயம். இன்னம் அந்தசொரூபத்திற் சகலவேதவுபநிஷதார்த்தங்களுங்கூடியிருக்குமோ அதுவே விஷயமென்றுஞ்சொல்லப்படும்.

வினா. சம்பந்தமாவதே தென்னில்.

விடை. இப்போதுசொன்ன ஜீவப்பிரமமாயிக்கமான வஸ்துவுக்கு [illegible] மே அந்தவஸ்துவைப் பிரமாணமாக [illegible] சித்திக்கும் போதபோத்திய லக்ஷணமாயிருப்பதே சம்பந்தம்.

வினா. பிரயோசனமாவதேதென்னில்.

விடை. பிரத்தியேகான்மாவும் பிரமமும் அயிக்கியானுபவம் பெறுவதே யானந்தம் அவ்வானந்தானுபவத்தினாற் சகல சங்காரபந்தங்களுமொழிந்து நிற்பதே பிரயோசனம் எவனொருவனுக்குச் சாதனசதுட்டயம் பொருந்தியிருக்கின்றதோ அவனுக்கே இந்தப் பிரயோசனமுஞ் சித்திக்கும் - நான்குசாதனத்திலொன்று குறைந்தாலுஞ் சித்திக்காது இந்நான்கு சாதனமுமுடையவனே வேதாந்த விசாரத்திற் கதிகாரியாவன்.

வினா. இந்தச் சாதனசதுட்டயமெப்போது சம்பாதிக்கவேண்டுமென்னில்.

விடை. சிரவணத்திற்கு முன்பே சம்பாதித்துக்கொண்டு பிறகு சிரவணத்திலிறங்கவேண்டும் இல்லாவிட்டால் ஞானமுண்டாகமாட்டாது.

வினா. சாதன சதுட்டயமாவதேதென்னில்.

விடை. நித்தியா நித்தியவஸ்து விவேகம் - இகமுத்திரார்த்த பலபோகவிராகம் சமாதிசட்கசம்பத்தி முமுட்சுத்துவம் இந்நான்குமாம்.

வினா. இந்தநான்கு சாதனங்களில் நித்தியா நித்தியவஸ்துவி

வேகம் ஒன்றிருந்தாற் போதாதா நான்கு சாதனமுஞ் சம்பாதிக்கவேண்டுமென்பதேதென்னில்.

விடை. ஒன்று போதாது இந்தலோகத்திற் சாஸ்திரியாருக்கு நித்தியாநித்தியவஸ்து விவேகமுண்டாயிருந்தும் அவர்கள் விஷயாசத்தியுடையவர்களாய் காமியகன்மங்களைத் தாமே செய்து வருகிறார்கள் ஆகையினாலவர்களுக்கு அதிகாரத்துவங்காணேம் ஆதலாலிரண்டாஞ் சாதனமும் வேண்டும்.

வினா. ஆனாலதிகாரிக்கிவ்விரண்டும் போதுமேயென்னில்.

விடை. போதாது சிலரிஷீஸ்வரர்களுக்கு இவ்விரண்டு சாதனங்களுமுண்டாயிருந்தும் அவர்களுக்குக் கோபதாபமே விட்டுப்பிறரைச்சபிக்கப்படுகின்றமையால் அவர்கட்கு அதிகாரத்துவங்காணேம் ஆதலால் மூன்றாஞ்சாதனமும் வேண்டும்.

வினா. அதிகாரிக்கு இம்மூன்றும் போதுமேயென்னில்.

விடை. போதாது சிலபேர்சடைமுடி முடித்துக்கிருஷ்ணாலங்காரத்திலிருந்துகொண்டு யோகீஸ்வரரென்னும் பெயரையுடையவர்களாய்ச் சமுசாரத்தினின்றும் புறப்பட்டு விரத்தர்களாய் உபசாந்தர்களாயிருக்கும் பெரியோர்களுக்கு இம்மூன்று சாதனங்களுமுண்டாயிருந்தும் சிரவணமனமுதல் எழுந்துபோய் விடுகிறபடியால் அவர்கட்கு அதிகாரத்துவங் காணேம் ஆதலால் நான்காஞ்சாதனமும்வேண்டும் இந்நான்கு சாதனமுமுடையனேயதிகாரி அவனுக்கேமுத்தி அதிலொன்று குறையாயிருந்தாலுமுத்தியுண்டாகாது.

வினா. நித்தியாநித்தியவஸ்து விவேகலக்ஷணமாவதேதென்னில்

விடை. பிரமமேநித்தியம் தேகாதிப்பிரபஞ்சமெல்லாமநித்தியமென்று சுருதியுத்தி அனுபவப்பிரமாணங்களாற்கண்டறிவது.

வினா. அநித்தியமென்பதில் சுருதிப்பிரமாணமேதென்னில்.

விடை. பிரளயகாலத்தில் தேகாதிப்பிரபஞ்சமான சகலமும்பிருதிவியிலொடுங்கி அந்தப் பிருதிவியும் அதற்குப் பற்றுக்கொண்ட அப்புவிலொடுங்கி அப்புவும் பற்றுக்கொண்ட தேயுவிலொடுங்கித் தேயுவும் பற்றுக்கொண்ட வாயுவிலொடுங்கி வாயுவும் பற்றுக்கொண்ட ஆகாயத்திலொடுங்கி ஆகாசமும் அஞ்ஞானத்திலொடுங்கி அஞ்ஞானமும் பிரமத்திலொடுங்குமென்பதைக் கண்டறிவதே சுருதிப்பிரமாணம்.

வினா. யுத்திப்பிரமாணமேதென்னில்.

விடை. பஞ்சபூதங்களை அடித்துப் பௌதிகமாய் நாள்தோறும் கெடுகிறதென்று கருத்திற்கண்டறிவதே யுத்திப்பிரமாணம்.

வினா. அநுபவப்பிரமாண மெப்படியென்னில்.

விடை. சாக்கிரத்திருந்த பாகியமான நாமரூபப் பிரபஞ்சங்கள் சொப்பனமான அந்தர் மனோசங்கற்பத்திலில்லை-சொப் பனத்திருந்த அந்தர்மனோசங்கற்பங்கள் சுழுத்தியான அவித்தை யிலில்லை - சுழுத்தியிலிருந்த அறியாமையும் ஆனந்தமுஞ் சாக்கி ரசொப்பனத்திலில்லையென்று கண்டறிவதே யநுபவப்பிரமாணம்

வினா இனிபிரமம் நித்தியமென்பதற்குச் சுருதிப்பிரமாணமேதெனில்

விடை. பிரளயத்திற் பஞ்சபூதமும் அதன் காரணமான அஞ்ஞா னமும் பிரமத்திலொடுங்கிப் பிரமமாத்திரமிச்சமாய்ச் சே டித்திருக்குமென்றறிவதே சுருதிப்பிரமாணம்.

வினா. யுக்திப்பிரமாணமேதென்னில்.

விடை. இந்தப் பூதபௌதிகங்களெல்லாம் நாடோறு நசித்து மீளவும் உற்பத்தியாகிறதற்குக் காரணமான பிரமமொ ன்றிருக்குமென்றறிவதே யுக்திப்பிரமாணம்.

வினா. அநுபவப்பிரமாணமேதென்னில்.

விடை. நித்தியத்துவமான பிரமமே பூதபௌதிகங்களாகத்தோ ற்றுமென்று கண்டறிவதே யநுபவப் பிரமாணம் இது வேமுதற்சாதனம்.

வினா. இகாமுத்திரார்த்தபலபோகவிராகலட்சணமாவதேதெனில்

விடை. இச்சரீரமுண்டான தாரபுத்திர தனதானியாதிகளினும் ரா ஜ்யபோகத்திலும் பாத்திரமுண்டான யக்ஷஸ்திரீகளிடத்து ம் அமிர்தாதிசொர்க்கபோகத்தினிடத்தும் மலமூத்திர வாந்தியசு த்தங்களிலெப்படி ஒருவருக்குமாசையிறவாதோ அப்படியே நிரா சையிருத்திருக்கவேண்டுமென்று சுருதியுத்தி யநுபவப்பிரமாண க்களாற்கண்டறிவது.

வினா. இகலோகபோகங்கள் அசுத்தமென்பதற்குச் சுருதிப்பிர மாணமேதென்னில்.

விடை. தாரபுத்திராதிகளுடைய சரீரங்களெல்லாம் எச்சில் தீட்டு சுக்கிலசோணிதமலமூத்திரங்கள் கூடி ஒருவடிவமாக நிருமி க்கப்பட்டிருக்கிறதென்று கண்டறிவதே சுருதிப்பிரமாணம்.

வினா, யுக்திப்பிரமாணமேதென்னில்,

விடை, சித்திரக்கனி பார்க்கிறகண்களுக்குச் சுத்தமாகவும் அதைப் பிட்டுப்பார்த்தால் அசுத்தமான கிருமிகளிறைந்து அசங் கிதமாகவுமிருப்பதுபோல தாரபுத்திராதிகளும் பார்க்கிறகண்களு க்குச் சுத்தமான ரூபலாவண்ணியமாகவும் உள்ளேமலமூத்திராதி அசுத்தங்களிறைந்திருக்கிறதென்று விசாரிக்குமளவில் அசுத்த மாகவுமிருப்பதினால் இவர்களைத் தொட்டாலு முழுகிசுத்திசெ

யித்துக்கொள்ளவேண்டுமென்று கண்டறிவதே யுத்திப்பிரமாணம்.

வினா. அனுபவப்பிரமாணமேதென்னில்,

விடை, அவர்களுக்கு வியாதிமுடைக ணேரிட்டவிடத்தும் எச்சில் நீட்டு மலம் சீழ் இரத்தமாங்கிஷங்கள் காணப்பட்டவிடத்தும் அவர்களைத்தொட அசங்கிதமாயிருப்பதினாலும் அவர்களிறந்துபோனவிடத்தும் அரைநாழிகையாவது வீட்டில்வைக்காமல் சூதகமென்றுடனே யெடுத்துக்கொண்டுபோய் மயானத்திற்போட்டு வருதலினாலும் அசுத்தமென்று கண்டறிவது அனுபவப்பிரமாணம்.

வினா, திரவிய மசுத்தமென்பதற்குச் சுருதிப்பிரமாண மேதென்னில்,

விடை, திரவியந்தேடுங்காலத்தில் சுத்தமின்றி அசுத்தமான தொழில்களிலு முபதும்படி மன முண்டாகுமென்பதைக் கண்டறிவதே சுருதிப்பிரமாணம்.

வினா. யுத்திப்பிரமாணமாவதேதெனில்,

விடை, திரவியங்கிடைத்தகாலத்தும் மனைவிமக்கள் கிரகபூமிகளைத் தேடுகின்ற பாசபந்தத்திற் கட்டுண்டழுந்தி நிற்குமென்பதைக் கண்டறிவதே யுத்திப்பிரமாணம்.

வினா. அனுபவப்பிரமாணமாவதேதென்னில்,

விடை, திரவியமதிகரித்தவிடத்து ஆசை குரோத லோப மதங்களால்மூடப்பட்டு முன்பின் தோற்றாது அஞ்ஞானாந்தகாரகூபத்தில்விழுந்து பலவிகாரங்களை யடையுமென்று கண்டறிவதே யனுபவப்பிரமாணம்.

வினா, பரலோகபோகங்கள் அசுத்தமென்பதற்குச் சுருதிப்பிரமாணமேதென்னில்,

விடை, மானிடசரீரத்திற்பொருந்துந் தாபத்திரயங்களுந் தேவசரீரங்களுக்கு முண்டென்றறிகிறதே சுருதிப்பிரமாணம்,

விடை, தேவபோகத்திலும் மனுஷபோகத்தைப்போலவே துக்கமென்பதைக் கண்டறிவதே யுத்திப்பிரமாணம்,

வினா. அனுபவப்பிரமாணமேதென்னில்.

விடை. தேவர்களும் புண்ணியமுடிந்தவிடத்தில் அதோமுகப்பட்டு தலைகீழாய்ப் பூமியில் விழுகிறபடியால் அசுத்தமென்றுகண்டறிவதே யனுபவப்பிரமாணம் இதுவே யிரண்டாஞ்சாதனம்.

வினா. சமாதிஷட்கசம்பத்தி லட்சணமாவதேதென்னில்,

விடை, சமம் தமம் உபாதி திதீட்சை சமாதானம் சிரத்தையென்றறுவகைகளாம்,

வினா, சமமாவதேதென்னில்,
விடை, இறந்தகாலத்திற்கழிந்தபொருளையும் வருகாலத்தில் வரும்பொருளையுங் குறித்துச் சிந்திப்பதுமனம் - அம்மனத்தைநோக்கி அவற்றைச்சிந்திக்கவொட்டாது நிறுத்தினால் நிகழ்காலத்திலுள்ளபொருள்களில் மமதைகொள்ளும் - இப்படிமமகரித்தபொருளுக்கொருவிக்கினநேரிட்டால் உடனே துக்கம்வரும் - ஆதலால் அதுகளிலொன்றையுநினைக்கவொட்டாமல் மனோநிக்கிரகம்பண்ணுவதே சமம்,
வினா. தமமாவதேதென்னில்-
விடை. ஞானேந்திரியகன்மேந்திரியங்களை விஷயங்களிற்செல்லவொட்டாமற் றடுப்பதே தமம்.
வினா. உபரதியாவதேதென்னில்,
விடை. செய்யப்பட்ட சகலகன்மங்களிலும் பலனைநாடிச்செய்தால் மீண்டும்பிறந்து அக்கன்மபலன்களையநுபவிக்கவேண்டிவருமாதலால் அதுகளையென்றுதள்ளிவிட்டு தான் செய்யுஞ்சகலகன்மங்களிலும் பலனைநாடாது ஈசுரார்ப்பணமாகச் செய்வதேயுபரதி.
வினா. திதிக்ஷையாவதேதென்னில்.
விடை. சுகதுக்கங்கள்வந்தபோது அதுகள் தேகேந்திரியாதியத்தத்துக்களுக்குச் சுபாவமென்று சமஞ்செய்துகொண்டு தன்னையொருவர்பாதித்தவிடத்தில் அவர்களைத் தண்டிக்கு மதிகாரவல்லமைத் தனக்குண்டாயிருந்தும்பொறுத்திருக்குந்தன்மையே திதிக்ஷை.
வினா. சமாதானமாவதேதென்னில்
விடை. பெரியோர்களிடத்திலிருந்து சிரவணம்பண்ணுங்காலத்தில் இந்திரியாதியந்தக்கரணங்களை அந்நியமாகிய விஷயங்களிற்போய் விழவொட்டாமற் றடுத்துச் சிரவணத்திலிருத்துவதேசமாதானம் - இந்தச்சமாதானமில்லாவிட்டால் உபயப்பிரஷ்டனாவன்,
வினா, சிரத்தையாவதேதென்னில்,
விடை, குருவினிடத்தும் வேதாந்தசாஸ்திரத்தினிடத்தும் ஈஸ்வரனிடத்தும் நியமமாய் பயபக்திவிசுவாசமுந்துறச் சித்தத்திலுண்டாயிருப்பதே சிரத்தை - இவைமூன்றுஞ்சாதனம்.
வினா, முமுக்ஷுத்துவவிலக்கணமாவதேதென்னில்,
விடை. இந்தஜனனமரணரூபமான சம்சாரப்பிரவாகத்திலடிபட்டு ஆத்தியாத்மிக ஆதிபௌதிக ஆதிதெய்விகமென்னுந் தாபத்திரயங்களால் வருந்தி இந்தச்சம்சாரதுக்கத்திலொருநிமிஷமாகிலு மிருக்கப்படாதென்று மகாபயங்கொண்டு இந்தப்பிரமமை

லைய எந்தப்பெரியோர்கள்போக்குவார்களோ சற்குருவாயிருக்கிற மகாத்மாக்களெங்கே யிருப்பார்களோவென்று சுட்டசட்டியைவிட்டதுபோல சகலபோகங்களையுங் கைவிட்டுத்துறந்து புறப்பட்டு மகா தீவிரதாபக்ருவத்துடன் பகலெல்லாம் ஆசிரியரெங்குளரோவென்றுந்தேடியும் இராமுழுதும் நித்திரைவராமல் துக்கமேலிட்டு வேர்த்தன்முதலிய எண்குணங்களுடன் தேசாந்தரங்களிலும் வனாந்தரங்களிலும் பர்வதாந்தரங்களிலுந் தேடியலைந்து திரிகின்றதே முமூட்சுத்துவம் இதுவே நான்காஞ்சாதனம்.

வினா, இப்படியுள்ள முமூட்சுவுக்குக் குருதரிசனமெப்படிகிடைக்குமென்னில்.

விடை. இவன் அனேகஜென்மங்களிற் செய்துள்ள நிஷ்காமியபுண்ணியபலத்தினால் அவாங்மனோகோசரமாயிருக்கப்பட்டபிரமந்தானே கிருபைகூர்ந்து ஆலியாலாங்கட்டியாய்த் தடித்ததுபோல மானிடச்சட்டைசாத்தி பாற்கடல்பெருகிவந்ததுபோல இவன் தாகந்தணிக்கும்பொருட்டு ஒரு குரு மூர்த்தமாயெழுந்தருளிவரும்.

வினா. அங்ஙனம்வந்தகுருவைக்கண்டிவன்செய்காரியமேதென்னில்.

விடை. அங்ஙன [illegible] ண்டு சலந்தேடுகிறவனுக்குமுன் கங்காநதி யெதிர்ப்பட்டதுபோலும் ஓர்மகாதரித்திரனுக்குமுன் உலவாக்கிழியெதிர்ப்பட்டதுபோலு மகா சந்தோஷமாய்க்கண்டு சற்பாவகங்கொண்டு அடியற்றமரம்போல் அவரதுபாதகமலங்களில்விழுந்து திரிகரணசுத்தியாய் ஏகாங்க துவிதாங்க திரியாங்க பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரங்கள்செய்து இரண்டுகைகளாலும் பாதத்தைப்பற்றிக்கொண்டு சுவாமீ அடியேன்நெடுங்காலமாய் ஜெனனமரணமென்னும்பாலைவனத்திற்புகுந்து மாயாமோகமென்னு மிருளினான்மறைப்புண்டு பஞ்சகோசங்களென்னும் பாசவலையிற்சிக்கிக்கொண்டு தாபத்திரயாக்கினியினால் தகிக்கப்பட்டு நிற்கிறேன் ஆதலாற்கிருபாமூர்த்தியாகியதேவரீர் அவைகளெல்லாம் சூரியனைக்கண்டபனிபோனீங்கும்படி கிருபாகடாட்சம்வைத்து என்மனவெப்பந்தீர்ந்து குளிர்ச்சியாகும்பொருட்டு, அனுக்கிரகஞ்செய்தருளுமென்று விண்ணப்பஞ்செய்வது.

வினா. அங்ஙனஞ்செய்தகாலையிலாசிரியர்செய்காரியமேதென்னில்

விடை, அப்படிசரணாகதியடைந்த சீடனைச்சமீபத்தி லிருக்கவைத்து தமதுபரிபூரண திருஷ்டியினாற்பார்த்து அவனைப்ப

யப்படாதேயென்றடயாஸ்தங்கொடுத்து அவனையொருபோதும் அகங்காரமதயானைவந்தடராமலும் மாயாமோகப்பற்றுமலும் சித்தமென்னுநாய்ப்பரிசம்படாமலும் நிசானந்தானுபூதி யுண்டாகும்படி வேதாந்தவிசாரமென்னுஞ் சிம்மாசனத்தில் தாமெழுந்தருளியிருந்து முற்சொல்லிய அகங்காராதிமிருகங்கள் அந்தந்தானியிலடங்கும்படிசெய்து பிறகு நிச்சயாத்மகமானசூட்சுமபுத்தியுள்ளசீடன் மஸ்தகத்தில் அஸ்தத்தைவைத்துப் பிரமோபதேசமான ஞானதீக்ஷைசெய்தருளுவார்.

வினா. தீக்ஷையென்பதற்கருத்தமேதென்னில்.

விடை. தீயென்றும் க்ஷயென்றும் இருவகை - அவற்றுள் தீயென்பது அக்கரணமானமனமகங்காரசித்தநிற்கப்புத்தியே அவயவத்தேகாவதான நிச்சயம்பண்ணுவது அதெப்படியென்றால், பாம்பானது ருபந்தஜசானகணைகளால் மந்திரங்களாகிய சத்தத்தைக்கிரகிக்கப்போகாதென்றறியாமல் அந்தமந்திரசத்தத்தைக்கிரகித்து அதன்வசத்திற் கட்டுப்பட்டதுபோல புத்தியும் தான் ஞானதேஜசென்றறியாமல் அவயவத்தேகாவதான நிச்சயபுத்திபண்ணுமென்றபோதிப்பது க்ஷயென்பது சகலகன்மங்களுநசிப்பித்து ஆகாசம்போல நின்மலமாக்குவது - இந்தப்படிநிலைத்தமேத பிரமோபதேசமான ஞானதீக்ஷையென்றறியவேண்டியது சித்தம்.

வேர்த்தன் முதலியவெண்குணங்களென்றதற்குப்பிரமாணம்

ஒழிவிலொடுக்கம்.

வேர்க்குங்கண்ணீர்ததும்பங்கம்பிக்குமெய்ந்நடுங்கும்...........*
வார்த்தைதழுவு மனம்பதறுங்-கார்க்கதமாய்க்..................*
காந்தமுரோமாஞ்சலியாகுங்காதலித்தார்க் ....*
கேய்ந்தகுணைக்காணிவையெட்டும்...........................*

சாங்கதுவிதாங்கரமஷ்காரமென்பதற்குப் பிரமாணம்.

சிவபுண்ணியத்தெளிவு.

சிரமேதாங்கப்லக்கரத்தைச்சிரத்திற்குவித்தல்துவிதாங்கஞ்...*
சிரமேல்வாமகரத்தினையுஞ்சேர்த்தல்திரியாங்கமதாகுஞ்..... ...*
சிரநீள்காஞ்சானுக்கணிலந் தீண்டிற்பஞ்சாங்கமதாகுஞ்.., ...*
சிரமோவாய்காதுகைசானுமெய்கத்திற்படிதலட்டாங்கம்..... ...*

இரண்டாவது முமுக்ஷுப்பிரகரணமுற்றிற்று.

மூன்றாவது

உற்பத்திப் பிரகரணம்.

அவதாரிகை.

முற்பிரகரணங்களிரண்டினாலும் மோட்சதாகம்பிறந்து சற்குருலாபமுண்டாகிச் சிரவணாதிகம்பெற்றவிடைனாருக்கு மேல் அபரோட்சாத்மானுபவமாகி ஞானமுண்டாகும்பொருட்டு உற்பத்திப் பிரகரணங்கூறுகின்றார்.

(கவி)

சுத்தமாம்பிரமந்தன்னிற்றோற்றுமாயையின் குணத்தாற் *
பற்றுருவீசன்சீவன்பஞ்சபூதங்களுண்டாய் *
மற்றுமாம்பூதந்தானேமருவிச்சூக்குமங்களாகி *
நித்தலுந்தூலபஞ்சீகரணமாய்நிகழுங்காணே (க)

இதன்பொருள்.

வினா. அகண்டபரிபூரணசொரூப வியாபகத்தில் ஜெகஜீவபரந் தோற்றியதெப்படியென்னில்.

விடை. சுத்தப்பிரமமாகிய சர்வசாட்சியினிடத்து அக்கினியிற்சூடு [illegible] மாக வொருசுற்றுயுண்மை அத்தீத அதீதப்பிரமத்திலடங்கிநிற்கும்போது ; அவ்வகண்டசொரூப வியாபகத்திற்குச்சுத்தப்பிரமமென்றுபெயர் அப்படியபின்னமானசிற்சத்தி பின்னமாய்விசிரிம்பித்துச் சுத்தப்பிரமத்தை வியாபிக்கும்போது பராசத்தியென்றுபெயராயிற்று அப்பராசத்தியாகியமகாகாரணசரீரத்துடன்கூடி அகண்டாதீதஸ்தானமாகிய துரியாவஸ்தைக்கபிமானியாயிருந்து தற்பிரகாசமாய் விளங்குகையால்பரவியாபகத்திற்குள்ளான சுத்தப்பிரமத்திற்குப் பரப்பிரமமென்றும் குருவென்றுஞ் சிவமென்றும்பெயர்வந்தது இது சாமவேதமகாவாக்கியமான தத்வமசிவாக்கியத்திற்சொல்லும் இது அசிபதார்த்தமான சிவதுரியம் - இப்படி அவயவாதீதமாயிருக்கின்ற பராசத்தியினிடத்தில் பிரமசந்நிதானவிசேஷத்தால் சத்துவ ரஜசு தமசென்னும் அவிகிர்தநிரிகுணங்களுண்டாயின.

வினா. அக்குணங்களுக்கு நாமமேதென்னில்.

விடை. சத்துவத்திற்கு ஆனந்தரூபசத்தியென்றும் ரஜசுக்குச்சித்ரூபசத்தியென்றும் தமசுக்குச்சத்ரூபசத்தியென்றும்பெயராயின.

வினா. அந்தப்பரப்பிரமம் சத்துவத்திற்பிரதிபலித்தபோது நாமமேதென்னில்.

விடை. ஆனந்தரூபசத்தியாகிய காரணசரீரத்துடன் கூடி உபசாந்தஸ்தானமாகிய சர்வானந்த சுழுத்தியவஸ்தைக்கபிமானியாயிருந்து சர்வமுந்தானாய் விளங்குகிறோமென்பது மறந்து உபசமனமாயதீதப்பட்டுநிற்பதால் அப்பாரப்பிரமத்திற்குப் பரமானந்தனென்றும் பொற்புவிசாந்தனென்றும் பெயராயின இதுவே அசிபதார்த்தமான சிவசுழுத்தி,

வினு, பரமானந்தர் ரஜசிற்பிரதிபலித்தபோது நாமமேதெனில்,

விடை, சித்ரூபசத்தியாகிய சூக்ஷமசரீரத்துடன் கூடிவிஸ்வக்கிராசஸ்தானமாகிய சர்வப்பிரகாச சொப்பனவவஸ்தைக் கபிமானியாயிருந்து சகல புவனசராசரப்பிரபஞ்சங்களையும் விழுங்கித் தானேஜகசொரூபமாகப் பிரகாசித்துநிற்பதால் அப்பரமானந்தருக்குத் தேஜோமயனென்றும் பிரஜாபத்தியனென்றும் பெயராயின இதுவே அசிபதார்த்தமான சிவசொப்பனம்.

வினு. தேஜோமயர் தமசிற்பிரதிபலித்தபோது நாமமேதெனில்

விடை. சத்ரூபசத்தியாகிய ஸ்தூலசரீரத்துடன் கூடிச்சம்பூரணஸ்தானமாகிய சர்வவியாபக ஜாக்கிராவஸ்தைக் கபிமானியாயிருந்து சர்வசராசரப்பிரபஞ்சங்களுள்ளுந்தானேதானாய் விளங்கிநிற்பதால் அந்தத்தேஜோமயருக்குப் பரிபூரணனென்றும் [illegible] பெயராயின இதுவே அசிபதார்த்தமான சி[illegible]ஜாக்கிரம்.

அசிபதமுற்றும்-இனிதற்பதம்:

வினு அந்தப்பரிபூரணப் பிரமசந்நிதானத்திற் சேஷ்டித்ததெங்ஙனமெனில்.

விடை. சுத்தியில் ரஜிதப்பிராந்தி தோன்றியதுபோல மூலப்பிரகிருதியென்றொருசத்தி விவர்த்தமாகச்சேஷ்டித்தது அந்தச்சத்தியைப் பரிபூரணர்வியாபித்திருந்தபடியால் அந்தமூலப்பிரகிருதியிற் பிரமசந்நிதானவிசேஷத்தால் சத்துவ ரஜஸ தமசென்னும் விசித்திரகுணங்களுண்டாயின.

வினு. அவைகளிருமமேதென்னில்.

விடை. மாயையென்றும் அவித்தையென்றும் பிரகிருதியென்று சொல்லப்படும் அவற்றுள் மாயையினிடத்து நிருமலமானகண்ணாடியிற் சூரியன்பிரதிபலித்ததுபோலப் பரிபூரணப்பிரமம் சலட்சணமாகப் பிரதிபலிக்கும் அந்தப்பிரதிவிம்ப லைதன்னியத்திற்கு ஈஸ்வரனென்றபெயர் அந்தமாயையாகிய மகாகாரணசரீரத்துடன்கூடிப் பிரமாண்டஸ்தானமாகிய துரியாவஸ்தைக்கபிமானியாயிருந்து சகலசராசரப்பிரபஞ்சத்துடனுங் கலந்துநிற்பதால் அப்பரிபூரணப்பிரமத்திற்கு ஈஸ்வரசாட்சியாகிய பிர

மமென்றுஞ் சர்வஞ்ஞனென்றும் பெயராயின இதற்குஞானசத்தி சகுணஐசுவரியசம்பன்னத்துவபோகம் ஓங்காரஅட்சரம் இவ்வட்சரத்திற் சகலமுமடங்கியிருக்கையால் இதையதிஷ்டித்திருந்த பிரமசைதன்னியத்திற்கு ஏகாத்மாவென்று மொருபெயராயின இதுவே தற்பதார்த்தமான பரதுரியம்.

வினா. ஆனால்மும்மூர்த்திகளானதெப்படியென்னில்.

விடை. சத்துவகுணமாயையில் சத்துவம் ரஜச தமமென்னுமூன்று குணங்களுண்டாயின அவற்றுள் தாமதகுணப் பிரதானமாக அவ்வியாகிருதமாகிய காரணசரீரத்துடன்கூடி அக்கினிஸ்தானமான சுழுத்தியவஸ்தைக் கபிமானியாயிருந்து சகலபிரபஞ்சங்களையும் சங்காரம்பண்ணிநிற்பதால் அந்த அபிமானிக்கு அவ்வியாகிருதனென்றும் உருத்திரனென்றும் பெயராயின - இதற்குத் திரோதாயிசத்தி சர்வசங்காரபோகம் மகாரஅட்சரம் இவ்வட்சரத்தி லித்தனையுமடங்கி யிருக்கிறபடியால் இதையதிஷ்டித் திருந்த ஈஸ்வரனுக்குச் சுத்தாத்மாவென்று மொருபெயர்வந்தது- இதுவே தற்பதார்த்தமான பரசுழுத்தி - சத்துவகுணப் பிரதானமாக இரணியகருப்பமாகிய சூட்சுமசரீரத்துடன்கூடிச் சந்திரஸ்தானமான சொப்பனாவஸ்தைக் கபிமானியாயிருந்து சகலபிரபஞ்சங்களையு மரட்சித்துநிற்கையால் அவ்வபிமானிக்கு இரணியகருப்பனென்றும் விஷ்ணுவென்றும்பெயர் இதற்குஇச்சாசத்தி சர்வபாலகர்த்துருத்வபோகம் உகாரஅட்சரம் இவ்வட்சரத்திலித்தனையுமடங்கியிருக்கிறபடியால் இதையதிஷ்டித்திருந்த ஈஸ்வரனுக்குச் சூத்திராத்மாவென்று மொருபெயர்வந்தது-இதுவே தற்பதார்த்தமான பரசொப்பனம் - இராசதகுணப்பிரதானமாக விராட்டாகியஸ்தூலசரீரத்துடன் கூடிச் சூரியஸ்தானமான ஜாக்கிராவஸ்தைக்கபிமானியாயிருந்து சகலசராசரப் பிரபஞ்சங்களையும் சிருஷ்டிபண்ணி நிற்பதால் அவ்வபிமானிக்கு விராட்டென்றும் பிரமாவென்றும்பெயர் இதற்கு கிரியாசத்தி சர்வகர்த்துருத்வபோகம் அகாரவட்சரம் இவ்வட்சரத்திலித்தனையு மடங்கியிருக்கிறபடியால் இதை யதிஷ்டித்திருந்த ஈஸ்வரனுக்குச் சர்வ பூதாத்மாவென்றுமொரு பெயர்வந்தது - இதுவே தற்பதார்த்தமானபரசாக்கிரம்.

தற்பதமுற்றும் - இனித்தொம்பதம்.

வினா. இராசதகுண அவித்தையின்காரியமெப்படியென்னில்.

விடை. அவித்தையிலிருந்து மலினசலத்திற் சூரியன் பிரதிபலித்ததுபோலப் பிரமசைதன்னியம் பிரதிபலிக்கும் - அந்த

ட்பிரதிபலனத்தினாற் சிவனென்றுபெயர் - அவ்வவித்தையாகிய மகாகாரணசரீரத்துடன்கூடி லலாடஸ்தானமாகிய துரியாவஸ்தைக்கபிமானியாயிருந்து அவஸ்தாத்திரயவிலட்சண ஞானசொரூபியாயிருக்கிறபடியால் அபிமானியைத் துரியத்தினாற் சிவசாட்சியாகிய கூடஸ்தனென்றும் பிரத்தியகாத்மாவென்றும்பெயராயின. இதற்கு ஞானசத்தி ஆனந்தபாவகம்பாகம் ஓங்கார அட்சரம் இவ்வட்சரத்தி லித்தனையுமடங்கியிருக்கிறபடியால் அவ்வாத்மாவுக்கு நிர்மலாத்மாவென்றமொருபெயர்வந்தது இதுவே தொம்பதார்த்தமான சொரூபம்.

வினா. இந்த மூவகையான்மாக்க ளுண்டானதெப்படியெனில்.

விடை. இராசதகுணமாவித்தையில் சத்வ ரஜஸ தமசென்னு மூக்குணங்களுண்டாயின - அவற்றுள் தாமதகுணப்பிராதான்மாக ஆனந்தமயகோசமாகிய காரணசரீரத்துடன்கூடி இருதயஸ்தானமான சுழுத்தியவஸ்தைக் கபிமானியாயிருந்து சுழுத்தி சைதன்ய னுபவித்திருத்தலால் அவ்வபிமானிக்குப் பிராஞ்ஞனென்றும் பாரமார்த்திகனென்றும் அவிச்சின்னனென்றும் பெயராயின - இதற்குத் திரவியசத்தி ஆனந்தபாவகம் மகாரஅட்சரம் இவ்வட்சரத்தி லித்தனையுமடங்கியிருக்கிறபடியால் இதையதிஷ்டித்திருந்த ஆத்மாவுக்குப் பரமாத்மாவென்றமொருபெயர்வந்தது இதுவே தொம்பதார்த்தமான சுழுத்தி.

சத்துவகுணப்பிரதானமாகப்பிராணாதிகோசத்திரயங்களாகிய சூட்சுமசரீரத்துடன்கூடிக் கண்டஸ்தானமான சொப்பனாவஸ்தைக் கபிமானியாயிருந்து சொப்பனப்பிரபஞ்சங்களிற்கூடியுங்கூடாதிருத்தலால் அவ்வபிமானிக்குத் தைசதனென்றும் பிரதிபாசிகனென்றும் சொப்பனகற்பிதனென்றும் பெயராயின - இதற்கு இச்சாசத்தி அபத்தபாகம் ஏவெயென்றுல் பேதாபேதமின்றி யனுபவிப்பன் - உகாரஅட்சரம் இவ்வட்சரத்தி லித்தனையுமடங்கியிருக்கிறபடியால் இதையதிஷ்டித்திருந்த ஆத்மாவுக்கு அந்தராத்மாவென்ற மொருபெயர்வந்தது இதுவே தொம்பதார்த்தமான சொப்பனம்.

இராசதகுணப்பிரதானமாக அன்னமயகோசமாகிய ஸ்தூலசரீரத்துடன்கூடி நேத்திரஸ்தானமான ஜாக்கிராவஸ்தைக் கபிமானியாயிருந்து பிரபஞ்ச விவகாரங்களில் முயன்றிருப்பதால் அவ்வபிமானிக்கு விசுவனென்றும் வியவகாரிகனென்றும் சிதாபாசனென்றும் பெயராயின - இதற்குக் கிரியாசத்தி சொல்லாதிகளைத்தன்னுள்ளடக்கித் தனுபவிப்ப துசுத்துபாவனம் அகாரவட்சரம் இவ்வட்சரத்தி லித்தனையுமட

டங்கியிருக்கிறபடியால் இதையதிஷ்டித்திருந்த ஆத்மாவுக்குச் சீ
வாத்மாவென்றுமொருபெயர்வந்தது - இதுவே தொம்பதார்த்
தமானசீவசாக்ஷியாம்.

தொம்பதமுற்றிற்று.

வினா. தாமதகுணப் பிரகிருதியின்காரியமெப்படியென்னில்.

விடை. பிரகிருதியினிடத்து ஆவரணவிட்சேபமென்கிற இரண்டுசத்திகளுண்டு அதில் ஆவரணமானது தத்துவஞானிகளையுமீஸ்வரனையுந்தவிர மற்றைச் சீவர்களுக்கெல்லாம் சரீரத்திரயம் சீவன்சாட்சிசைதன்னியம் இதுகளில்பேதந் தெரியவொட்டாமல் மறைத்து நிற்கும் இவ்வாவரணை நீங்குவதே முத்தி தமோகுணப் பிரதானமான விக்ஷேபசத்தியே மகாகாரணப் பிரபஞ்சமாய் நின்றது விக்ஷேபசத்தியும் சத்வ ரஜ தமமென்னும் முக்குணசமமாகிநிற்கும் அவற்றுள் தமசு பிரதானமாகும்போது காரணப்பிரபஞ்சமும் சத்வம்பிரதானமாகும்போது சூட்சமப்பிரபஞ்சமும் ரஜசுபிரதானமாகும்போது ஸ்தூலப்பிரபஞ்சங்களுமுண்டாயின.

வினா. அதற்குவிவரமெப்படியென்னில்.

விடை. சத்துவகுணமாயையிற் பிரதிபிம்பித்த ஈஸ்வரன் நிருமலசலத்திற் பிரதிபிம்பித்த சூரியன்போல் ஏகராகியும்சர்வஞ்ஞராகியுமிருப்பர் இராசதகுண அவித்தையிற் பிரதிபிம்பித்த சீவர்கள் அவித்தையுமநேகமாகையால் மலினகடசலத்திற்பிரதிபிம்பித்த அநேகசூரியர்போல் அநேகராகியுங் கிஞ்சிஞ்ஞராகியுமிருப்பார்கள் அங்ஙனமவித்தையாற் பிரதிபிம்பரான சீவர்களுக்குச் சர்வக்ஞனான ஈஸ்வரன் கிருபைகூர்ந்து சரீரத்திரயங்கள் கொடுத்து முத்தியடைவிக்கும்படி கருதி தமோகுணமயமானபிரகிருதியை இரண்டுபங்காக்கி முதற்பங்கில ஆவரணசத்தியையும்இரண்டாம்பங்கில் விக்ஷேபசத்தியையுமுண்டாக்கினார் அப்பிரகிருதியினதிவேமகாகாரணசரீரம் அதிற்பிரதிபிம்பித்தசீவனே பிராஞ்ஞன் அஞ்ஞானியாகையே ஆனந்தமயகோசமான காரணசரீரம் இப்படிப்பட்ட வாவரணசத்தியானது சீவசூரியத்திருந்த கூடஸ்தனையும் ஈஸ்வரனையுந்தவிர மற்றைச்சீவர்களுக்கெல்லாம் ஸ்தூலசூட்சுமகாரண சரீரபேதங்களையு மவற்றி னபிமானிகளையுஞ் சாட்சிசைதன்னியங்களையு மொன்றுக்கொன்றும்பேதந்தெரியவொட்டாமல் மறைக்கும் ஆதலால்மறைபட்டசீவர்களிந்த விருபத்தினான்பது தத்துவங்களையும் நானென்றபிமானிப்பார்கள் அவ்வபிமானத்தை அகங்காரக்கிரந்தியென்றுஞ் சம்சாரபந்தமென்றுஞ் சொல்லுவார்கள்.

வினா. இதற்குமுத்திகூடுவதெப்படியென்னில்.

விடை. சற்குருகடாட்சத்தினால் ஆவரணநீங்கி இருபத்தொன்பது தத்துவங்களினும் வேறாகக்கொண்டுள்ள பேதங்களைக் கண்டறிவதே முத்திகூடுமுபாயம்.

வினா. ஆனால் விட்சேபசத்தியின் காரியமேதென்னில்.

விடை. விட்சேபசத்தியும் சத்வ ரஜசு தமசென்னும் திரிகுணசகிதமாயிருக்கும் அந்தச்சத்தியில் சத்ததன்மாத்திரையான வாகாசமும் ஆகாசத்தில் ஸ்பரிசதன்மாத்திரையான வாயுவும் வாயுவில் ரூபதன்மாத்திரையான தேயுவும் தேயுவில் ரசதன்மாத்திரையான அப்புவும் அப்புவில் கந்ததன்மாத்திரையான பிருதிவியும் உண்டாயின இந்தப்பஞ்சதன்மாத்திரைகளுக்கு அபஞ்சீகிருதபஞ்சபூதங்களென்றுஞ் சூட்சுமபூதங்களென்றுஞ்சொல்லப்படும் இந்தச்சூட்சுமபூதங்களினின்று சூட்சும சரீரங்களும் ஸ்தூலசரீரங்களுமுண்டாயின.

வினா. எப்படியென்னில்.

விடை. இந்த ஆகாசமுதலான சூட்சுமபூதங்களில் முக்குணமுந்தொடர்ந்திருக்கும் அதில் சத்துவாமிசத்தில் பூதத்திற்கொவ்வொருமாத்திரையெடுத்துச் சமஷ்டியாயொன்றாகக்கூட்டினது அந்தக்கரணங்களாம்.

வினா. [illegible]

வினா. அந்தக்கரணத்தில் ஆகாசங்கூடினதற்கடையாளமேதென்னில்.

விடை. அந்தக்கரணமுமாகாசம்போல் சகலசத்தத்திற்குமிடங்கொடுத்துத் தரிப்பதே யடையாளம் அப்படிதரிக்கின்றவிருத்திக்கு ஞானஅறிவென்றுபெயர்.

வினா. வாயுவினமிசங்கூடினதற்கடையாளமேதென்னில்.

விடை. வாயுவைப்போலசலிக்கின்றதே யடையாளம் இப்படிசலிக்கின்றவிருத்திக்குமனமென்றுபெயர்.

வினா. தேயுவினமிசங்கூடினதற்கடையாளமேதென்னில்.

விடை. தேயுவைப்போலவிடயங்களை இன்னதின்னதென்றுவிளக்கி வைக்கின்றதே யடையாளம் இப்படிவிளக்கி வைக்கின்றவிருத்திக்குப்புத்தியென்றுபெயர்.

வினா. அப்புவினமிசங்கூடினதற்கடையாளமேதென்னில்.

விடை. அப்புவைப்போல் சகலவிடயங்களிலும் பற்றிநிற்கிறதே யடையாளம் இப்படிபற்றிநிற்கும்விருத்திக்குச்சித்தமென்றுபெயர்.

வினா. பிருதிவியினமிசங்கூடினதற்கடையாளமேதென்னில்.

விடை. பிருதிவியைப்போலச் சகலவிடயங்களிலும் கடினமாயபிமானித்திருப்பதே யடையாளம் இப்படியபிமானித்திருக்கும் விருத்திக்கு அகங்காரமென்றுபெயர் இப்படிப்பட்ட அந்தச்,

சூட்சுமபூதங்களின் சத்துவாமிசத்தில் பூதத்திற்கொவ்வொருமாத்
திரமாயெடுத்து வியஷ்டியாய்த் தனித்தனியேயவைத்தது ஞானேந்
திரியங்களாம்.

வினா. ஞானேந்திரியங்களின் குணமேதென்னில்.

விடை. சுரோத்திரமாகாசத்தி னமிசமாகையால் ஆகாசகுணமா
னசத்தமாத்திரமறியும் தொக்கு வாயுவினமிசமாகையா
ல் வாயுவின்குணமான பரிசமாத்திரமறியும் சட்சு தேயுவினமிச
மாகையால் தேயுவின்குணமான ரூபமாத்திர மறியும் சிங்குவை
அப்புவினமிசமாகையா லப்புவின்குணமான ரசமாத்திர மறியும்
கிராணம் பிருதிவியினமிசமாகையாற் பிருதிவியின் குணமான க
ந்தமாத்திரமறியும் இவ்வைந் திந்திரியங்களுமொன்றோடொன்றுகூ
டாதபடியினால் இதரபூதங்களைக்கிரகித் தறியமாட்டாது அந்தக்க
ரணத்தில் ஐந்துமாத்திரமாயுமொன்றாய்க்கூடினதுகொண்டு ஐந்தி
ந்திரியத்தினாலும் ஐந்து விடயங்களையுமறிகின்றது இந்தச்சத்துவா
மிசசமஷ்டியிலுண்டான அந்தக்கரணம் ஐந்து வியஷ்டியிலுண்
டான ஞானேந்திரியம் ஐந்து ஆக பத்தும் ஞானசாதனமாகையா
ல் அறிகருவிகளாம் இப்படியே அந்தச்சூட்சுமபூதங்களில் இரா
சதாமிசத்திற் பூதத்திற்கொவ்வொருமாத்திரமாயெடுத்துச் சமஷ்
டியாயொன்றாகக்கூட்டினது பிராணாதிபஞ்சவாயுக்களாம்.

வினா. பிராணாதிபஞ்சவாயுக்களின் குணமேதென்னில்.

விடை. வியானவாயு ஆகாசத்தினமிசமாகையால் ஆகாசம்போ
ற்சர்வசரீரமும் வியாபித்திருக்கும் பிராணவாயு வாயுவி
னமிசமாகையால் வாயுவைப்போ லிருதயஸ்தானத்திலிருந்து நா
சிகாபரியந்தமலைந்து நிற்கும் அபானவாயு அக்கினியி னமிசமா
கையால் அக்கினியைப்போல ஜாடராக்கினியாகஜ்ஜுவலித்து குதஸ்
தானத்தினின்று அன்னபானாதிகளைச்சீரணிப்பிக்கும் சமானவாய்
வு அப்புவினமிசமாகையாலப்புவைப்போல் மீ நாபிஸ்
தானத்தினின்று அன்னபானரசங்களைச் சகலநாடிகளிலும் நிரப்பிநிற்
கும் உதானவாயு பிருதிவியி னமிசமாகையால் பிருதிவியைப்
போல்கடினமாகக்கண்டத்திலிருக்கும்.

வினா. இந்தப் பஞ்சவாயுக்களல்லாமல்வேறுவாயுக்களுண்டோ
வென்னில்.

விடை. வாந்திபண்ணுகிறது நாகனென்றும் இமைத்தலைமிழிக்கின்
றதுகூர்மனென்றும் தும்முகிறது கிரிகரனென்றும் கொ
ட்டாவிகொள்ளுகிறது தேவதத்தனென்றும் வீங்குகிறது தனஞ்
செயனென்றுமைந்துவாயுக்களுண்டென்று சிலர்சொல்லுவாக

ள் இவ்வைந்தும் பிராணவாயுவின் றொழிலேயாம் பிறிதொன்றல்ல அந்தச்சூக்ஷுமபூதங்களின் இராசதாமிசத்தில் பூதந்தோறும் ஒவ்வொருமாத்திரையெடுத்து வியஷ்டியாய்த் தனித்தனியே வைத்தது கன்மேந்திரியங்களாம்.

வினா. கன்மேந்திரியங்களின் குணமேதென்னில்.

விடை. வாக்கு ஆகாசத்தினமிசமாகையால் ஆகாசத்தினிடமாய் நின்று வசனிக்கும் பாணி வாயுவினமிசமாகையால் வாயுவினிடமாய்நின்று ஏற்றலிடுதல்செய்யும் பாதம் அக்கினியினமிசமாகையால் அக்கினியினிடமாய்நின்று நடக்கும் உபஸ்தம் அப்புவினமிசமாகையால் அப்புவினிடமாய்நின்று ஆனந்திக்கும் பாயுரு பிருதிவியினமிசமாகையாற் பிருதிவியினிடமாய்நின்று மலவிசர்க்கம்பண்ணும் இவ்வைந்துமொன்றோடொன்று கூடாதபடியிலும் வேறுதொழில் செய்யமாட்டாது வாயுவில் ஐந்துமாத்திரையுமொன்றாய்க் கூடினதுகொண்டு கன்மேந்திரியமைந்திலுமமைந்து தொழில் செய்கிறது இந்த இராசதசமஷ்டியிலுண்டான வாக்குகளைந்தும் இராசதவியஷ்டியிலுண்டான கன்மேந்திரியமைந்தும் ஆகபத்தும ஞானசாதனமாகையால் தொழிற்கருவிகளாம் இவ்விருபத்தைந்து தத்துவங்களே சூக்ஷுமசரீரம் இதுசமயமாயாப்பிரதிபிம்பமாக ஈசுவரன் அவித்தையாப் பிரதிபிம்பமான சீவர்களுக்குச் சிருஷ்டிசெய்கிறபொழுது சூக்ஷுமசரீரங் கொடுத்துவருவர் இப்படிச் சூக்ஷுமசரீரம் பெற்றுக்கொள்ளாத சீவர்களுக்கு மற்றசிருஷ்டியிற் கொடுத்தருளுவார் இச்சூக்ஷுமசரீரமே இவனுக்குத் தைசதனென்றும்பா... பஞ்சபூதங்களின் சத்துவாமிசமும் இராசதாமிசமுங்கழிந்த தாமதாமிசமாத்திரம் மிஞ்சிநிற்கிறது இதுவே சூக்ஷுமசரீரோற்பத்தி.

வினா. ஸ்தூலசரீரவுற்பத்தியாவதேதென்னில்.

விடை. மிஞ்சிநின்ற தாமதாமிசத்திலுள்ள ஐந்துபூதத்தையுமொவ்வொன்றையிரண்டாய்ப்பகுத்து முதற்பாதியைந்தையு மொன்றை நான்காக்கி இரண்டாம்பாதியைத் தானதன்னமிசத்துடன்கூட்டாமல்மற்ற நாலுபூதத்துடனும் பூதத்திற் காற்காலாகச்சேர்த்தல்மாத்திரையாகக்கொட்டப்படுவதே பஞ்சீகரணம்.

வினா. இப்படி பஞ்சீகரணப் படுத்தியதற்குப் பிரயோசனமேதென்னில்.

விடை. பஞ்சீகரித்த ஐந்துபூதங்களில் ஆகாசத்திற் பரிசரூபரசகந்தங்களாகிய நான்குகுணமும் வியாப்பியமாகையால் அதிசயமாய்ப்போக நிற்குணமான சத்தம் திரிசயமாகும் வாயுவிற்கு ரூபரசகந்தங்களாகிய மூன்றுகுணமும் வியாப்பியமாகையால் அதிச

யமாய்ப்போக காரணகுணமானசத்தமும் நிசகுணமான பரிசமு ம் நிரிசயமாகும் தேயுவில் ரசகந்தங்களாகிய இருகுணமும் வியா ப்பியமாகையால் அநிரிசயமாய்ப்போக காரணகுணமான சத்தப ரிசங்களும் நிசகுணமானரூபமும் நிரிசயமாகும் அப்புவில்கந்த குணம்வியாப்பியமாகையால் அநிரிசயமாய்ப்போக காரண குண மான சத்தபரிசரூபங்களும் நிசகுணமான ரசமும் நிரிசயமாகும் பிருதிவியில் சத்தபரிசரூபரசகந்தங்களும் நிசகுணமாகையால் நி ரிசயமாகும் இதுவேஸ்தூலபஞ்சபூதங்களாம்

வினா. இந்தஸ்தூலபூதங்களினாலுண்டாகியதெல்லையெனில்.

விடை. ஆறுதத்துவமாய் நால்வகையோனியாய் எழுவகைப்பிறவி களாயுள்ளஸ்தூலசரீரங்களுண்டாயின.

வினா. ஆறுதத்துவமேதெனில்

விடை. சர்மம் உதிரம் மாமிசம் சளுப்பு அஸ்திமச்சை இவைகளாம்

வினா. நால்வகையோனியாவதேதன்னில்.

விடை. அண்டசம் உற்பீசம் சுவேதசம் சராயுசம் இவைகளாம்.

வினா. எழுவகைப்பிறவிகளாவதேதென்னில்.

விடை. தேவர் மக்கள் புள் விலங்கு நிலத்திலூர்வன ஜலத்திலூர் வன ஸ்தாவரம் இவை எண்பத்துநான்கு லட்ச பேதங்க ளாயிருக்கும் ஈஸ்வரன் சீவர்களுக்கிந்தஸ்தூலசரீரத்தை யுண்டு பண்ணினார் இந்தவியஷ்டிஸ்தூலசரீரத்தையபிமானித்த சீவனுக் கு விசுவனென்றும் சமஷ்டிஸ்தூலவிராட்டையபிமானித்தஈஸ்வ ரனுக்குப்பிரமனென்றும்பெயர் வியஷ்டிசூட்சுமசரீரத்தையபிமா னித்தசீவனுக்குத் தைசதனென்றும் சமஷ்டிசூட்சும இரணியகர் ப்பசரீரத்தையபிமானித்த ஈஸ்வரனுக்குவிஷ்ணுவென்றும்பெயர் வியஷ்டிகாரணசரீரத்தை யபிமானித்த சீவனுக்குப்பிராஞ்ஞனெ ன்றும் சமஷ்டி காரண அவ்வியாகிருதசரீரத்தையபிமானித்தஈஸ் வரனுக்குருத்திரனென்றும்பெயர் இதுகளே சீவஈசுர சரீரத்திரய ங்களுண்டாயினமார்க்கமென்றுசொல்லப்படும் - இனி விசாரஞா னத்தினால் சரீரத்திரயங்களையும் வெளிப்படுத்திசாட்சியாகிய தன்னை யுள்ளபடி யறியவேண்டியது.

வினா. சற்குரு சாஸ்திரமுன்னிலையில் சீவாதி சரீரத்திரயங்களை விசாரிக்கிறபுருடனெவனெனில்.

விடை. இந்த விசுவ தைசத பிராஞ்ஞனென்றுமிவர்களால் விசா ரிப்பதென்றால் அந்தந்த அவஸ்தைகளுடன் அந்தந்த வபிமானிகளு மழிந்துபோவதா லவர்களால் விசாரிக்க ப்படுகிறஞானத்திற்கு அநித்தியம்வரும் ஆதலால் வேது ரியத்திலிருக்கின்றகூடஸ்தரோ விசாரிக்கிறபுருடன்.

வினா. அவ்விசாரணையின்வகை யெப்படியென்னில்.

விடை. ஜீவனுக்கு வாச்சியலட்சியார்த்தமான அசுத்தசுத்தங்களை யும் ஈஸ்வரனுக்கு வாச்சியலட்சியார்த்தமான அசுத்தசுத்தங்களையும் பகுத்தறிகிறதேயாம்.

வினா. ஜீவனுக்கு வாச்சியார்த்தமான வசுத்தமேதென்னில்.

விடை. ஸ்தூலசரீரத்தில் ஞானேந்திரியபஞ்சகம் ஒன்று கன்மேந்திரியபஞ்சகம் ஒன்று இவற்றைப் பகுத்தறிகிற அந்தக்கரணங்கள் நாலு இவைக்கெல்லாஞ் சேர்க்கைகொடுப்பதான பிராணாதிபஞ்சகம் ஒன்று இவ்வேழுமே காரியவுபாதி இவ்வேழுபாதிகளையுந் தானென்று ஜீவனபிமானித்ததே தொம்பதவசுத்தம்.

வினா. ஜீவனுக்கு லட்சியார்த்தமான சுத்தமேதென்னில்

விடை. இவ்வேழுபாதியுந் தானல்லவென்று கழித்து அவைகளுக்குச் சாட்சியாயிருப்பதே தொம்பதசுத்தம்.

வினா. ஈஸ்வரனுக்கு வாச்சியார்த்தமான வசுத்தமேதென்னில்.

விடை. சர்வஞ்ஞன் சர்வகாரணன் சர்வேந்திரியாமி சர்வேசுரன் சர்வசிருஷ்டி சர்வஸ்திதி சர்வசங்காரன் என்னு மிவ்வேழுங்காரணவுபாதி இவ்வேழுபாதிகளையுந் தானென்று ஈஸ்வரனபிமானித்ததே தற்பதவசுத்தம்.

வினா. சர்வஞ்ஞனென்பதேதென்னில்.

விடை. சகலபிரபஞ்சங்களிலும் வியாபகமான செயல்களெல்லாம் அறிந்துநிற்பது.

வினா. சர்வகாரணனென்பதேதென்னில்.

விடை. சர்வசகங்களு மழிந்தவிடத்துந் தானழிவற்று நித்தியனாயிருப்பது.

வினா. சர்வேந்திரியாமி யென்பதேதென்னில்.

விடை. சர்வஜகவிசாலமாகிய தேகேந்திரியாதிகளுக்கு முள்ளீடாயிநிறைந்துநிற்பது.

வினா. சர்வேசுரனென்பதேதென்னில்.

விடை. சகலபிரபஞ்சங்களுக்குங் கர்த்தாவாய் விளங்கிநிற்பது.

வினா. சர்வசிருஷ்டியென்பதேதென்னில்.

விடை. சர்வசராசரப்பிரபஞ்சங்களையுஞ் சிருஷ்டித்துநிற்பது.

வினா. சர்வஸ்திதி யென்பதேதென்னில்.

விடை. சர்வஜகங்களையும் பரிபாலனம்பண்ணிநிற்பது.

வினா. சர்வசங்காரனென்பதேதென்னில்.

விடை. சர்வஜகவிலாசங்களையுந் தனக்குளொடுக்கிநிற்பது.

வினா. ஈஸ்வரனுக்கு லட்சியார்த்தமான சுத்தமேதென்னில்.

விடை. இவ்வேழுபாதியுந் தானல்லவென்றகழித்து அவைகளுக்குச் சாட்சி சைதன்னியமாயிருப்பதே தற்பதசுத்தம்.

வினா. தீர்த்தநிலையாவதேதென்னில்.

விடை. தொம்பதசுத்தமான சீவதுரியமும் தற்பதசுத்தமானபரதுரியமுமயிக்கியமான சிவதுரியத்தையறிந்து நிற்பதே தீர்த்தநிலை - மேலும் தற்பததொம்பதவசுத்தத்தை வாச்சியப்பொருளென்றும் தற்பததொம்பதசுத்தத்தை இலக்கியப்பொருளென்றுஞ்சிலநூல்களிற் சொல்லப்படும்.

வினா. இதற்கு லட்சணாவாக்கியமெப்படியென்னில்.

விடை. விட்டலட்சணைக்குச்சங்கர்க்கவாக்கியமென்றும் விடாதலட்சணைக்கு விசிஷ்டவாக்கியமென்றும் விட்டுவிடாதலட்சணைக்கு அகண்டவாக்கியமென்றும் வாக்கியத்திரயங்களுண்டு இவ்வாக்கியார்த்தப்படி சிந்தித்து அசனுவுண்டாகுமனுபவத்தைச்சொல்லுவாயாகவென்றனுக்கிரகஞ்செய்து ஆசிரியர் மவுனமாந்தமாயிருந்தவளவில் சீடன் அகமுகப்பட்டு சொரூபசமாதிகூடி அபரோக்ஷஞானமான நிர்வாணபூமியைப்பெற்று அகங்காமகிழ்ச்சியுடன் எழுந்துநின்று அவ்வாசிரியருக்குப் பிரதக்ஷிணநமஸ்காரங்கள்செய்து துதித்துவிநயமுடனெதிர்நிற்க அவ்வாசிரியருந்தமது பரிபூரணதிருஷ்டியினால் சற்சீடனைப்பார்த்து ஆதரணைபண்ணி அவனையருகிலழைத்துசுவானுபவம்வினவுகின்றனர் அஃதெவ்வாறெனில்.

வினா. அப்பா உனது சுவானுபவமென்னவெனில்.

விடை. சுவாமீ சீவேழ்பாதியான காரியவுபாதியேழுடன்கூடி நின்றுஸ்தூலதேகத்தை யபிமானித்தவன் விசுவனென்றும் இதுவே சீவசாக்கிரமென்றுங்கண்டேன் — இந்தவேழுபாதியிலிருவகையிந்திரியமான விசுவோபாதிநீங்கி காணம்நாலு பிராணனொன்றுமான ஐந்துபாதியோடுகூடின சூட்சுமதேகத்தை யபிமானித்தவன் தைசதனென்றும் இதுவே சீவசொப்பனமென்றுங்கண்டேன் — இவ்வைந்துபாதியில் கரணம்நாலுநீங்கி பிராணனியாகிய ஒருபாதியுடனின்றகாரணசரீரத்தை யபிமானித்தவன் பிராஞ்ஞனென்றும் இதுவே சீவசுழுத்தியென்றுங்கண்டேன் — இவ்வேழுபாதிகளுமிறந்து சீவசாட்சிமாத்திரமாய்ச் சேடித்துநின்ற சீவதுரியமுங்கண்டேன் — துரியமாகியபோதருமிறந்து விஸ்வரூபமான சர்வசாட்சியாயிருக்கும் பரசாக்கிரமுங்கண்டேன் — சங்கேபித்தொடர்பாகிய சகலபிரபஞ்சங்களையும் வேறறக்கண்ட வறிவுமாத்திரமேதானாயிருக்கும் பரசொப்பனமுங்கண்டேன் காண்டாலுங்காட்சி

யும் விடுபட்டு சர்வமுந்தோன்றாமலிருக்கும் பரசுழுத்தியுங்கண்டேன் — அந்தச்சுழுத்தியையறிந்த வறிவாகிய பரதுரியமுங் கண்டேன் கூடஸ்தரும் பிரமமுமொன்றென் றுணர்ந்த சிவசாக்கிரமுங்கண்டேன் அறுதியாய் சகலசெகத்துந்தானா யிருந்ததும் இருந்தோமென் றும்வாசனையும்விடுபட்டிருந்தசாட்சியே தானென் றுணர்ந்த சிவசொப்பனமுங் கண்டேன் — காணப்பட்ட ஜெகமெல்லாமறிவு ருபமென்றறிந்து அவ்வறிவும் விடுபட்டு மனோலயமாகுமிடமாகிய சிவசுழுத்தியுங்கண்டேன் இந்தச்சுழுத்தியையறிந்தவறிவாகிய சர்வசாட்சியே தானாகக்கண்டனுபவிக்குஞ்சிவதுரியமுங்கண்டேன் — இந்தத்துரியமே சச்சிதானந்தமும் விடுபட்ட பரமாகிய மகாகாரணசரீரமென்றும் இந்தத் துரியமு மிறந்தவிடம் அதீதமாகிய சுத்தப்பிரமமென்றுங் கண்டேன் என்றுவிண்ணப்பஞ்செய்தசீடனை அவ்வாசிரியர் ஆதரணைபண்ணி அப்பாசகலவேதவுபநிடதார்த்தங்களிற்கூறப்படும்பொருளும் நம்முடையவனுபவமுமிதுவேயாதலால் இதிற்சந்தேகவிபரீதம்வராமல் தேகபதனபரியந்தமும் அனுசந்தானம்பண்ணி முடிவில்விதேககைவல்யத்தைப்பெறுவாயாகவென் றருளினார்.

மூன்றாவது உற்பத்திப்பிரகரணமுற்றிற்று.

நான்காவது

திதிப்பிரகரணம்.

அவதாரிகை.

முற்பிரகரணங்கள் மூன்றிலும் சமாதியில் அபரோட்சவாத்மானந்தவனுபவம் பெற்ற தேகாதிப் பிரபஞ்சங்க ளனைத்துஞ் சொப்பனத்திற் கண்டபொருள்போலாகிச் சுவானுபூதிமாத்திரமாய்விளங்குஞ் சீடனுக்குமேல் சகல விவகாரங்களுஞ் சுழுத்திபோலாகிச் சத்தாமாத்திரமான பிரமானந்தானுபவ சாட்சாத்காரமுதயமாகும்பொருட்டுத் திதிப்பிரகரணங்கூறுகின்றார்.

(கலி)

நீசமுஞ்சாத்விகமாய்நின்றே யிராசதமத்தைநீக்கித் *
திகழுஞ்சாத்விகத்தாற்செய்யு மிகத்தொழில்செய்திட்டாலும் *
புகழுமானந்தான்சட்டை போக்கல்போலாசாபாசத் *
துகளறமுமேலாங்குணங்களைத் தொடர்ந்துநிற்பார் (க)

தொடர்வருச்சமாதிதன்னைத் தொடர்பவரிருவராலும் *
படர்வுறுநாமரூப பவபர்தத்துறவைவிட்டுத் *
திடமுறச்சதாசமாதி செய்பவனொருவனந்த *
மடமையோடிருந்துமுள்ளின் மதித்திடாச்சமாதிசெய்வான் (௨)

இதன்பொருள்.

வினா. சொரூபசமாதியினின்று சச்சிதானந்தசுவானுபூதிமாத்திரமாக வெளிப்பட்டசீவன் முத்தர்கள்திரும்பவும்விவகாரம்பண்ணுவார்களோவென்னில்.

விடை. பண்ணுவார்கள் அதனாலானியில்லை.

வினா. எப்படியென்னில்.

விடை. சீவன்முத்தர்கள் புனர்ஜென்மத்துக் கேதுவாயிருக்கின்றாஜோ தமகுணங்களை விடுத்து முத்திக்கேதுவாகியசத்துவகுணமாத்திரமாயிருந்து வர்த்தமானகாலத்தில் நேரிடுமனேகந்தொழில்களைச் செய்தாலும் அதனால்வரும்விகாரங்களொன்று மவர்களைத்தகிக்கமாட்டாது.

வினா. அதெப்படியென்னில்.

விடை. சூரியாஸ்தமனமாகி அந்தகாரணமான ராத்திரிவந்தபோதிலும் பொற்றாமரையானது சற்றுகிலும்வாய் குவியாது மற்றைத் தாமரைகளெல்லாம் வாய் குவிந்துவிடும் அதுபோல அறிஞர்களும் மாயாகாரியமான நாமரூபப் பிரபஞ்சவிவகாரங்களிற் கூடியுங்கூடாத சுகதுக்கவிலட்சணராகி எந்தவிடத்திலும் அகண்டவியாபக சின்மாத்திரமாய் நிறைந்த இதமகிதங்களில்சமதிருஷ்டியுடையவர்களாயிருப்பார்கள் அவர்களையே நல்வழியி னடப்பவர்களென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

வினா. ஆனாலவர்களொருவரோடுங்கூடாரோவென்னில்.

விடை. சாந்தி, விசாரம், சந்தோடம், சாதுசங்கமென்னுஞ்சற்புருடர்களுடனேகூடி அவற்றினையே யாபரணமாகக்கொண்டிருப்பார்கள்.

வினா. அவர்கள் தமக்குக்கிடையாத போகங்களிலிச்சைகொள்ளாரோவென்னில்.

விடை. சமுத்திரமானது தனக்குள்ளகரையைக் கடவாமலு மேலொன்றை நாடாமலுமிருப்பதுபோலச் சீவன்முத்தர்களுந் தனக்குள்ளபோகத்தைப் பொசிப்பதன்றி வேறு போகங்களையிச்சித்துநாடமாட்டார்கள்.

வினா. ஆதித்தன்போல இச்சாயெத்தினமின்றி நிகழ்காலத்துவருந்தொழில்களைப் பற்றியும் பற்றாமனத்தோடிருந்து

நடத்திவருங்காலத்து அந்தச் சீவன்முத்தர்களிருக்குந்த
ன்மையெதென்னில்.

விடை. விடப்படாமை விடப்படல் விசாரம் தெளிவு வருந்தல்
திருந்தல் திருத்தங்கூடுதல் யோசித்தல் தீர்த்தல் பார்த்
தல் நிச்சயித்தலாகிய தன்மைகளுடனேயிருப்பார்கள்.

வினு. விடப்படாமை யேதென்னில்.

விடை. துயாமற்றநிலையிலிருக்கிற பெரியோர்களுடைய சற்
சங்கம்

வினு. விடப்படலேதென்னில்.

விடை. ரஜோ தமோகுணங்களைப்பொருந்திய துஷ்டர்களுடை
ய துச்சங்கம்.

வினு, விசாரமேதென்னில்,

விடை, யானுலகமோவென்றுபகுத்தறிவது,

வினு, தெளிவாவதேதென்னில்,

விடை, குருசாஸ்திரங்களினாலும் அறிவினாலுந் தீர்ந்தநிலை;

வினு, வருந்தலாவதேதென்னில்,

விடை. தவ்வினையறியும்வழியில் வருந்துவது;

வினு, திருந்தலாவதேதென்னில்,

விடை, சகலசன்மங்களிலும் யானெனதென் றழுந்தாமுயலு
வினு, திருத்தங் கூடுதலேதென்னில், [வது

விடை, நல்லோர்களாகிய மெய்ஞ்ஞானவான்களோடு கூடுவது,

வினு. யோசித்தலேதென்னில்,

விடை, சாவுறுந் தன்னைக்கருதுவது,

வினு, தீர்த்தலேதென்னில்,

விடை, சரீரத்தில்வருஞ் சோபதாபங்கள்,

வினு, பார்த்தலேதென்னில்,

விடை, சர்வசராசரப்பிரபஞ்சங்களினுமுள் வீடாய்நிறைந்து வி
யாபகப்பட்டிருக்குந் தனது சொரூபத்தையே கண்டறி
தப்பது,

வினு. நிச்சயித்தலேதென்னில்,

விடை, பிரமாதி ஸ்தம்பபரியந்தமு நிறைந்துள்ளது சித்தென்
றும் அதுகளெல்லாந் தன் வியாபகமேயென்றும் நிச்ச
யிப்பது இப்படிப்பட்ட தன்மைகளோடு சீவன்முத்தர்
களிருப்பார்கள்,

வினு, சத்துவப்பிறவி எதினால் வருமென்னில்.

விடை, முற்பிறவிகளிற்செய்த தபோபல முயற்சியினால் வந்து
பொருந்துமேயன்றி வேறொருகருமத்தினாலும்வராமற்

டாது - ஆகையால் சத்துவகுணமே மோட்சத்தைக்கொடுக்கும் மற்றஇரண்டுகுணமும மாயாகாரியமான ஜனனமரண சம்சாரதுக்கத்தைக்கொடுக்கும்;

வினு, இந்தச் சத்துவகுணத்தை எவர்களடைந்திருப்பார்களென்னில்,

விடை, இனிப்பிறவாத முடிந்தபிறப்பை யுடையவர்களடைந்திருப்பார்கள்,

வினு, ரஜோ தமகுணங்களை எவர்கள் கொண்டிருப்பார்களென்னில்;

விடை, மண்டபத்தைத் தூண்கள்தாங்குவதுபோல சகலஜீவர்களும் அவ்விருகுணமயப்பட்டுத் தாங்கிநிற்பார்கள் - ஆகையால் சத்துவத்தைக்கைப்பற்றி ராசத தாமதங்களைக் கைவிட்டவர்கள் சனனமரணப்பிரவாகத்தினின்று கரையேறினவர்கள்.

வினு. எப்படிகைவிடுவார்களென்னில்.

விடை. சத்துவத்தைப் பூண்டுகொண்டு ராசத தாமதங்களையும் தனுல்வரும் பாசபந்தங்களையும் பாம்புசட்டை தோலுரித்ததுபோல நழுகவிடுவார்கள்.

வினு. அதெப்படியென்னில்.

விடை. சர்வமுந்தானுய் விளங்குகிறபடியால் தான்வேறு உலகம் வேறென்னுந் துவிதமயக்கமொழிந்து பிரமமாகிய சித்தினிடத்துண்டான நாமரூப கற்பனைகளெல்லாம் சமுத்திரசலமே அலையாதிகளாகக்காணப்படுதல்போல் மித்தையேயல்லாமற் சத்தியமல்ல சோகமோகங்களும் பிறப்பிறப்புகளும் பிறப்பிறப்பித் தப்பித்தெறவர்களுமில்லை வந்ததும் போனதும் நினைந்ததுமா... வொன்றுமில்லை ஏகமாகியுமனேகமாகியும் எனைறைக்குமுள்ள ...பொருளே எந்தவிடத்திலும் சர்வவியாபகமாய் விபாபித்து ச...த்தாமாத்திரமாய் விளங்குவதென்று சஞ்சலரகிதமான பூகபுத்தியினாலறிந்து சகலதுக்கங்களும்விடுபட்டு சத்துவமாத்திரமாய்மிஞ்சியிருப்பார்கள்.

வினு. இன்னுமெப்படியிருப்பார்களென்னில்.

விடை. சொரூபவியாபகத்தில் நின்று பூரணச் சந்திரப்பிரகாசம் போற்சாந்தியடைந்து மவுனுனந்தமாய் மணிப்பிரபைபோற்றெளிந்து நிருமலமாய் திரிகாலத்துவரும் விவகாரங்களைச்சமதிருஷ்டியாய்க்கண்டு பந்தியும் பற்றுதலின்றிச்செய்து இதுநமக்கு ஆமென்னும் விருப்பும் ஆகாதென்னும் வெறுப்புமற்று உதாசீனமாத்திரமாயிருப்பார்கள்,

வினா. சத்துவகுணத்தின் மாத்திரம் ஞானவெளியிலுண்டாயெழு ம்பதெப்படியென்னில்.

விடை. உத்தமமானமூங்கிலில விழுந்தபனிச்சுடரானது முத்து களானதுபோலச் சத்துவகுணத்திற்ஜெனித்தவர்களே மேலோர் நல்லோர் மித்திரர் தெளிந்தோர் அநித்தியங்களைத்து றந்த நித்தியமுத்தர் ஞானிகளென்னும் விசிஷ்டநாமங்களைப் பெ றுவார்கள் அவர்களுக்கே ஞானமுமெளிதில்வரும்,

வினா. அவர்கள்பற்றியும்பற்றறுதொழில்செய்வதெப்படியெனில்

விடை. சூரியன் இச்சையின்றிக் கிரணங்களாற் பிரகாசித்திருக்க அந்தச்சந்நிதானபலத்தினால் கணம் நாழிகை சாமம்நா ள் நட்சத்திரம் வாரம் பக்ஷம் மாசம் ருது அயனம் வருடமுதலா னதுகளுந் தோன்றுவதுபோல் ஜீவன்முத்தர்களும் செல்காலம் வருகாலங்களி லுள்ளபொருள்களைச்சிந்தியாமல் நிகழ்காலத்துவ ருங்கருமமாத்திரந்தமதுசுவானுபூதியாகக்கண்டுவிவகரிப்பார்கள்.

வினா. இப்படிவிசாரஞானபலத்தினால் துவிதபுத்திநீங்கி அத்து விதானந்தசொரூபமாத்திரமான ஞானிகளைக் காமாதிக ள்தொடர்ந்து வருத்தாதோவென்னில்.

விடை. இருப்புச்சட்டைதரித்தபுருடனை ஆயுதங்கள் வருத்தாத துபோல் சின்மாத்திரமாய் விளங்குஞ்ஞானியையுங்காமா திகள் தொடர்ந்து வருத்தாதென்பதே துணிவு.

வினா. மோகமாகிய வற்சநாபிக்கொடிமுளைப்பதற்குமூலமாகி யுஞ் சோகமாகியசாட்டமிருந்த ரசாளுமிடமாகியுமுள்ள தேகத்தைநானென்னுஞ் சத்தியபுத்தி பண்ணுவிக்குமஞ்ஞான மூலமானது ஏகமாகியும் நித்தியமாகியுமிருக்கிற சொரூபசுபா வந்தோன்றின மாத்திரத்தில் வேரோடேநாசமாமென்று கூறிய சுருதியுத்திப்பிரமாணங்களிருக்கச் ஜீவன்முத்தர்கள் நான்போ னேன் வந்தேன் தூங்கினேன் விழித்தேனென்றுசொல்லலாமோ வென்னில்.

விடை. அவர்களெப்படிசொன்னாலும் கமலபத்திரோதகம்போற் பற்றற்றேயிருப்பார்கள் அவர்கள்சித்தஞ் சென்றவிட மெல்லாஞ்சிதானந்தமாய் ரமித்திருக்கும் அதனால் வாதையில்லை அப்படியின்றி நாமரூபங்களிற்சித்தமானது பறந்துபோய்விழு மானால் மனமுங்கெடாது பற்றும்போகாது ஆதலால்காணும் பொருளெயில்லையென்ற சர்வமுஞ்சித்தாய்க்கண்டால் மனமெ ன்பதுவும்போய்விடும் அதுவேமோட்சமாகும்.

வினா. இந்தப்பிரபஞ்சவிவகாரத்தை ஞானிகளெப்படிகண்டிரு ப்பார்களென்னில்.

விடை. நானுமில்லை நீயென்னும் விடயமுமில்லையென்றும் உருவமில்லாதவெளிபோல் நான்பரிபூரண சொரூபமென்றும் தனது சொரூபவியாபகத்தில் காணப்பட்ட நாமரூபங்கள்விளங்குகின்றதென்றும் தனது சச்சிதானந்த சொரூபத்தை யன்றி நாமரூபத்திற் காதாரமில்லையென்றும் சச்சிதானந்த மூன்றும் சொரூப சம்பந்தம் நாமரூபமிரண்டு மாயாசம்பந்தமென்றுங் கண்டு மாயாசம்பந்தத்தைவிட்டுச் சர்வமும் சத்தாமாத்திரமான சொரூபமேயென்று திடமாய்ப்பார்த்திருப்பார்கள் அங்ஙனமான பெரியோர்கள் ஆசையாகியகட்டெல்லாம் அசங்கற்பமாகியவாளாலறுத்து நானென்னுந் தேகபாவனையை நானென்னுதலொட்டியினாற்குத்தி எல்லாமிறந்தசொரூபசுபாவமே நானென்று பாவித்த பாவனையிருஞ் ஜெனனமரணமில்லாத முத்திசொரூபமாவார்கள்.

வினா. இந்தச்சீவன் முத்தர்களுக்கு வசத்தமயமாய்இன்பமானசுகம்வந்தாலும் துக்கம்வந்தாலும் அந்தச்சுகத்தில் ரமித்தலும் துக்கத்தில் வருந்தியுமிரார்களோவென்னில்.

விடை. அப்படியிரார்கள் சுகம் பயம் கோபம் துக்கம் பொறுமைமுதலிய வினைகள் வந்தவிடத்து மிதுகளை ஒருபொருளாய்க்காணாது சத்தாமாத்திரமாய்க்கண்டு சுழுத்திபோல் விசுராந்தியடைந்து சொரூபபாவனைநீங்கா திருப்பார்கள் இதுவே சிவசாக்கிரம் இந்தச்சாக்கிரத்தினின்று ஒருநிமிஷமாகிலும் பிரியாதவர்களே சீவன்முத்தர்கள்.

வினா. சகலவாசனைகளுஞ் சுழுத்திபோலாகி விஸ்ராந்தியாய்த் தெளிந்த பூரணதிருஷ்டி யிமைக்காமல் சீவன்முத்தியடைந்த பெரியோர்கள் திரும்பவும் இந்தவுலகத்தில் வசிப்பார்களோவென்னில்.

விடை. மாயாமயமான ஆசாபாசங்களற்றுச் சகலவாசனைகளுநீங்கி அகத்திற் சின்மாத்திரமாகியும் புறத்திற் சகலஆசாரக்கிரியைகள்செய்து மிருப்பார்கள் அன்றியும் புறத்தொழில்கள் ஆரம்பித்துச் செய்கிறவர்கள்போற்காட்டி அகத்திலொருதொழிலுஞ் செய்யாதவர்களாய் அகங்காரரகிதராய் நிடசித்தரா யிருப்பார்கள் அல்லாமலும் ஆகாசம்போலருவமாய் ஆவரணநீங்கிச்சகலநாமரூப அடையாளங்களும் விடுபட்டு வேண்டியவண்ணமுலகத்தின்கண்விளையாடுவார்கள்.

வினா. இப்படிச்சத்துவகுணத்தோடிருந்தாலுஞ் சென்மமில்லையென்பதெப்படியென்னில்.

விடை. வறுத்தவிதையானது தீனிக்குதவியாகுமல்லாமல் முளைப்பதற்குக் காரணமாகாததுபோல சத்துவகுணமுஞ்சாத்

தவாசனைக்குக் காரணமானவுதவியாய் சீவன்முத்தர்களி
டத்திருக்கிறபடியால்செனனமில்லை.

வினா. சுத்தவாசனையாவதேதென்னில்.

விடை. சத்துவத்தைவிடாமல் ஒன்றான ஆத்மநிஷ்டையான மாத்திரமாய்நிருவிகற்பமாயிருப்பதேசுத்தவாசனை இதுசுகமாத்திரமாயிருப்பதால் இதில் சதாகாலமும் சுழுத்திபோல் லயப்பட்டிருப்பவர்களே சதாசமாதியடைந்திருப்பவர்களாம்

வினா. சொரூபசமாதியடைந்தவர்களெத்தனைவிதமாயிருப்பார்களென்னில்.

விடை. இரண்டுவிதமாயிருப்பார்கள்.

வினா. எப்படியென்னில்

விடை. நாமரூபவியவகாரத்தொழில்களோடேகூடிச் சமாதிசெய்பவர்களும் அவைகளிற் பயனில்லையென்று துறந்து ஏகாந்தமாய் தனியிடத்திருந்து சமாதிசெய்பவர்களுமாயிருப்பார்கள் அங்ஙனமானாலும் இருவர்களுக்குமோட்சபலமொன்றேயாகும்

வினா. அதெப்படியென்னில்.

விடை. இரண்டும்பரிதயங்களுஞ் சீதளமாத்திரமாயிருக்கும் அச்சீதளமே அவர்களனைத்தநெய்யடுங்களிற்செய்துள்ளது போலவென்று சொல்லுவார்கள் - அவ்வனுபூதியிற் சதாகால நிச்சிந்திருப்பவனுடைய மனமான்து எங்கேசு காரியங்களிற் பிரவேசித்துச் சலனமடைந்தாலும் அதனால்வருங்கவலைகளால்அவனுக்கொரு ஆனிவிருத்தியுமில்லை - அவன் சமதிஷ்டியாயிருந்து உன்மத்தனைபோலும் கூத்தாடி பாசாங்கழிப்பதுபோலும் ஒருவருத்தருமின்றிச் சகசமாதியிலிருப்பன்-ஆதலாலறிஞர்கள் வியவகாரங்களைச்செய்தாலும் அதினின்றுநீங்கிச் சதாநிஷ்டையாய்சொரூபசமாதியிலிருந்தாலும் இருவருக்கு மோட்சபலஞ் சமனாயிருக்குமன்றி உயர்வு தாழ்வுஇல்லையென்று சுருதியுமிருதிகளிற்சொல்லப்படுகின்றது.

வினா. வியவகாரநீக்கிச் சதாநிஷ்டராயிருப்பவர்கள் எவிடத்தில் வசிப்பார்களென்னில்.

விடை. அங்ஙனமானபரமயோகிகள் தூங்கினாலும் விழித்தாலும் வியவகாரங்கள்செய்தாலும் செய்யாதிருந்தாலும் சதா அந்தர்முகதிருஷ்டியாயிருப்பதால் வீடு நாடு காடெல்லாஞ் சமமாய்க்கண்டிருப்பார்கள் அவர்கள்மனம் எப்போதும் விஸ்தாரத்திலேபரந்திருப்பதினுற் சீதளமாகவேயிருக்கும் - அதனால்தேகத்தோடிருந்தாலும் அச்சீதளமான சொரூபமாகவேவிளக்கும்- இப்படிப்பட்ட அந்தர்முகநிஷ்டையில்லாதவர்கள் வனங்களிற் குகை

ஞானிலாசனங் கட்டிக்கொண்டிருந்தபோதிலும் மனம் பகிர்முகப் பட்டிருப்பதினால் அந்தவனங்கள் குகைகளெல்லாம் வீடு நாடுகளாகவே தோற்றிக்கொண்டிருக்கும் - ஆகையினால் ஒரு தொழில்களைச்செய்தாலும்தொழில்களைநீத்துச் சுகசமாதியிலிருந்தாலும் அந்தர் முகதிருஷ்டியையுடைய அறிஞர்கள் மனம்விப்பராந்தியடைந்து அதிசீதளமாய் சொரூபசமாதியிற் றிளைசுகித்திருக்கும் அவர்களுக்குச் சுருதிமயக்கமுமில்லையென்று சுருதிஸ்மிருதிகளிற் சொல்லப்படுகின்றது சித்தம்.

நான்காவது - திதிப்பிரகரணமுற்றிற்று.

ஐந்தாவது

உபசாந்திப் பிரகரணம்.

அவதாரிகை.

முற்பிரகரணங்கள் நான்கினாலும் சொரூபசமாதியடைந்த நிஷ்டாபரனான சீடனுக்கு மேல்சென்றவிடமெல்லாஞ் சிதானந்தமாகவிளங்கும் சகானந்தானுபவ முண்டமாகும்பொருட்டு உபசாந்திப்பிரகரணங் கூறுகின்றார்,

(கவி.)

வானதாமனுடபோனிவந்திடலரிதுவந்து ....*
மானவேதங்கள்கற்ப தரிதநுவத்தற்று ....*
ஞானசாதகங்களெய்த லரிதது நன்னிலுறு....................*
மௌனவேற்று ஞானமின்றி யிருத்தலிற்சரிதானன்னை ....(௧)
விபரீதசம்சயங்கள் விலகியெதிர்த்திட்டாலு.........*
மபரோட்சந்தனிலஞ்ஞானமகன்றிடாதிருக்குமென்னிற்*
றவமெனுங்குருவந்தாலுஞ்சாத்திரங்களினுநீங்காத் ....*
அவந்தவமுடையோனுமதமோகியென்றறையும்வேதம்

இதன்பொருள்,

வினா: சகலசந்தேகவிட்சேபங்களும் விடுபட்டுப் பிரபஞ்சவியவகாரங்களனைத்துஞ் சுழுத்திபோலாகிச் சதாநிஷ்டானாய் விப்பராந்திபெற்றிருக்கும் அறிஞர்களதுமனத்தில் ஒருவேளா ஏகதேசமாய்க் கன்மவசத்தினாற் சமதிருஷ்டிநீங்கி அஞ்ஞானமான அசம்பாவனை தோற்றுமானால் அவர்களுக்கு முத்தியில்லையோ வென்னில்.

விடை. அக்ஞானமான பெரியோர்களுள்ளத்தில் அசம்பாவனை வ
ரக்கடவதில்லை - அவர்களுக்குக் கன்மமுமில்லை - அப்படி
யின்றி ஒருபோது சம்சயந்தி யுண்டாகுமாறு லவர்க
ளுக்குக் கதியுமில்லை.

வினா. அதெப்படியென்னில்.

விடை. இந்தப்பூமியின்கண் உற்பவிக்குங்காலத்தில் மானிடயோ
னியிற்பிறப்பரிது பிறந்தாலும் வேதாத்தியயனத்திற்
குரியபிராமணகுலத்திற் பிறப்பரிது பிறந்தாலும் ஊமை செவிடு
குருடு நீக்கிப்பிறப்பரிது பிறந்தாலும் பேடுநீக்கிப் பிறப்பரி
து பிறந்தாலும் வித்தியாப்பியாசம் பண்ணுவதரிது பண்ணினு
ம் வேதாத்தியயனம் பண்ணுவதரிது பண்ணினும் அவற்றில்நிரு
பிதமான கன்மங்களைச்செய்வதரிது

வினா. அந்தக்கருமங்களாவதேதென்னில்.

விடை. நித்தியம் நைமித்தியம் காமியம் நிஷேதம் பிராயச்சித்தம்
என ஐந்துவகையாயிருக்கும்.

வினா. நித்தியகன்மமாவதேதென்னில்.

விடை. வைதானமான சந்தியாவந்தன ஜெபவோமதேவ தர்ப்ப
ண வைசுவதேவ பலிவந்தனமுதலானதுகளாம்.

வினா. நைமித்தியகன்மமாவதேதென்னில்,

விடை. சங்கிராந்திபர்வம் அர்த்தோதயம் மஹோதயமுதலிய பு
ண்ணியதினங்களில்நீராடல்முதலானதுகளாம்.

வினா, காமியகன்மமாவதேதென்னில்,

விடை, அசுவமேத ராஜசூய பவுண்டரிகமுதலான யாகங்கள்செ
ய்தல் சோமவாரவிரதமாதிகள் இதுகளைச் செய்தலாம்,

வினா. நிஷேதகன்மமாவதேதென்னில்,

விடை, பிறனில்விழையாமை கள்ளாமை கொல்லாமை கள்ளுண்
ணாமை பொய்யாமை முதலியநியமங்களைக் கொண்டிருத்தலாம்,

வினா, பிராயச்சித்தகன்மமாவதேதென்னில்,

விடை. சாந்திராயணம் கிரிச்சிரம் சலபக்ஷணம் வாயுபக்ஷணம் தீ
ர்த்தயாத்திரைமுதலான கருமங்கள் செய்தலாம்,

வினா, இந்தகன்மங்களினாற் பயனென்னவென்னில்,

விடை, தேகமிருக்குமட்டும் நித்தியநைமித்திய கன்மங்களைச்
செய்துவந்தால் பிராரத்தப்போகும் காமிய கன்மத்தை
ச்செய்துவந்தால் சொர்க்கபோகமுண்டாகும் நிஷேத பிராயச்சித்
தகன்மங்களைப் பண்ணிவந்தால் சஞ்சிதம் விடபடும் அதனால்மு
த்திவருமென்று சிலர்சொல்லுவார்கள் அதுமுத்தியல்லை,

வினா, அதெப்படியென்னில்,

விடை. காமியகன்மத்தினுல் ஞானம்வரமாட்டாது சொர்க்கபலமாத்திரம் வரும் - அதை யடைந்தாலு மீண்டும் ஜெனனமரணம்வருமேயல்லாமல் முத்திவராது - நிஷேதகன்மமும்பிராச்சித்தகன்மமும்புருஷனுக்குக்கன்மத்திலதிகாரத்தையுண்டுபண்ணி பிரத்தியவாயத்தைப் போக்காநிற்கும் - இந்தப்படி மூவிதகன்மமும் ஞானசாதனமன்றாகும், மேல்நித்தியநைமித்தியமான இரண்டுகன்மமு மூவிதப்பட்டிருக்கும்.

வினு, அதெவ்வாறெனில்,

விடை, சத்துவகன்மம் ராசதகன்மம் தாமதகன்மமெனமூவகை அவற்றுள் ராசத தாமதமான இரண்டுகன்மங்கள் ஜெனனமரணதுக்கத்தை விருத்தியாக்கும் அதனாலும் ஞானம்வராது சத்துவகன்மமாத்திரமே சித்தசுத்தி யுண்டாக்குவதினுல் ஞானசாதனமாம் - இப்படி கன்மத்தினுல் ஏகதேசமாயுண்டாகுஞ்சித்தசுத்தியைக்குறித்து சிலர் ஞானபரம்பரையென்று சொல்லுவார்கள் ஆனாலும் இந்தச்சத்துவகன்மம் பண்ணும்போதும் ஈஸ்வரார்ப்பணமாகப் பண்ணவேண்டும்.

இதற்குதாரணம் பிரபோதசந்திரோதயம்.

புறவைவரிச்சிறுதுயிரண்டாற் பலியிலக்கித்துபூர்வநூற்போற் பயனென்றும — விறைவனுக்கர்ப்பிதமாகி டெமு நருவேதாகமங்கூளியம்பாநின்ற — பெறலருநற்கருமமுமே லவணடச்சிதானந்தபிரமஞானத் — துறநியுமாமிரண்டாலு முயிர்களின்டலியபுகுந்துறையுமென்றான். — என்று முன்னோர் வாக்கியமிருப்பதினுல் நிஷ்காமியமாகச்செய்யுஞ் சத்துவகன்மமுஞ் சித்தசுத்திக்குக் காரணமேயன்றி மோட்சகாரணமல்ல.

இதற்குதாரணம் ஞானசித்தி.

சவமாமண்ணறக்கமுவிருநன்டெனல்சுக்கிலவழிதன்னைத் — தமெருஞானம்விட்டருச்சனைமுதலிபதவங்களிற்பிறப்பற்று — ருவரிசூழ்நிலத்துதித்திடமாந்தரிலுண்டெனுமுனாயந்தோ — கவருமையறிவகற்றிடுங்குருபரன் கழலடைந்தவரல்லால். — என்று கூறியதினுல் நிஷ்காமியகன்மத்தினுற் சித்தசுத்தியுண்டாய் அதனுல்சற்குருலாபமுண்டாய் அதனுல் சிரவணாதிகமுண்டாய் அதனுல் ஞானமுண்டாகும்.

இதற்குதாரணம் பிரபோதசந்திரோதயம்.

ஆற்றம்பயன்வேண்டாக்கருமமந்தக்கரணசுத்திதரும் — போதம்அஞ்சுத்திதருப்போதம் போதம்பிரமமென்று — மூன்றந்தருநானுதித்ததுமே யுயர்வான்மதிநீர்த் துளக்கமெனத் — தோற்றத்

தருமாலையிற் றன்னைத் துளக்கமின்றிக் காணுவானால்—என்று கூறப்பட்டிருக்கின்றது.

வினா, ஈசுவரார்ப்பணஞ்செய்வதில் சித்தசுத்திவருமானால் ஞானம் எதினால் வருமென்னில்..

விடை, சற்குருசாஸ்திரமுன்னிலையாகவே வரவேண்டும்.

இதற்குதாரணம் சிவஞானசித்தியார்.

ஞானநூறனையோதலோதுவித்த னற்பொருளைக்கேட்பித்தறன் கேட்டனன்றா—மீனமிலாப்பொருளதனைச்சிந்தித்தலைந்துமிறைவனடியடைவிக்குமெழின்ஞானபூசை—யூனமிலாக்கன்மங்கடபஞ்செபத்தியான மொன்றைக்கொண்டயருமிவையூட்டுவதுபோக-மானவையால்மேலான ஞானத்தாலவனை யருச்சிப்பர் வீடெய்த நிற்போரெல்லாம்.

அபரோட்சாத்மாநுபவதீபிகை,

சித்திபெறவேண்டுமென்ற திடமுளோன்விசாரப்பண்ண—லற்ற மிக்பரிதிமிற்றேடக்கிவிட்பிரகாசக்கண்—மற்றவைவிடப்பதார்த்தஞானமில்லாதுபோல—நத்திபவிசாரஞான மன்னவிட்டான் ஞானமுண்டோ—என்றுங் கூறியிருப்பதால் விசாரஞானமுண்டாகும்பொருட்டு சகலகன்மங்களையும் ஈசுவரார்ப்பணமாகச்செய்யவேண்டும். அந்தபலத்தினால் சிவனே கிருபைகூர்ந்து சிவஞானன்னியம் ஈசுரபத்தி பாசவைராக்கியம் பிரமஞானமென்னுநான்குமே ஒரு திருமேனியாகக்கொண்டருளிய சற்குருலாபமுண்டாம், அதனால் சிரவணமுண்டாம், அதனால் மனனமுண்டாம், அதனால் நிதித்தியாசனமுண்டாம், அதனால் விவேகஞானமுண்டாம், அதனால் தன்னைத்தலைவனைப் பார்த்தறியவரும்,

இதற்குதாரணம் கைவல்யநவநீதம்.

வாசமெல்லமகவைகன்னைமறந்தவன் பிறந்திறந்து—தீராதுழல்வர்த்தமந்தமெத்தைபோற்சுத்திச்சுற்றி—ஷோரதாலமேமிட்டிறங்கிப்பிறகிரம்போத—மாராயுந்தன்னைத்தானென் றறியுமவ்வளவுந்தானே * தன்னையுந்தனக்கோராத் தலைவனையுங்கண்டானேற—பின்னைத்தலைவன்றானும் பிரமமாய்ப் பிறப்பிலா—ஞானனேதியம்வாயமி ஒருக்கொரு கேடுமில்லை—யென்னைநீ கேட்டையாகேவீ தம்மிதமிக்கிறனே;

சிவபோகசாரம்,

தன்னைப்பிரியாத்தலைவன் றானைப்பிரியார்—முன்னைவினையின் முடிவறிவார்-பின்னைப்-பிறக்கவிரைந்து போசீர்க்கு மொன்னார்களையோ டுருக்கவிலேசிற்றுமிலர்—என்றுங்கூறப்பட்டிருக்கின்றது,

வினா, தன்னையறியும்விதமெப்படியென்னில்,

விடை. பிரபஞ்சத்திற் சத்தாதிவிடயங்களாகத் தோற்றும் இந்திரியவறிவெல்லாம் சீவன்றானேயநுபவிப்பதாக அறியாமையினாற் கொள்ளுமிடத்து இந்தப்பொறிவழிபார்க்கானும் நாமரூபங்களெல்லாம் இந்திரியங்கட்குத் தோற்றமேயன்றிச் சிதாபாசனென்ற சீவனுக்கில்லையென்பது அநுபவமாகும் எப்படியென்றால் நற்சத்தந் துற்சத்தங்களென்றறிவது சுரோத்திரேந்திரியவறிவல்லாமல் சீவவறிவல்ல,

விஞ, அதெப்படியென்னில்,

விடை, செவிடர்களுக்குஞ் சீவனிருக்கிறபடியினால் அந்தச்சீவன் சத்தத்தையறியவேண்டும் அப்படிகாணாமையால் சத்தத்தையறிகிறவறிவு சுரோத்திரேந்திரியமே அதைச் சீவனறியாமையால் தன்மேலாரோபித்துக்கொண்டு நானே சத்தமறிகிறவனென்றதல்லாமல் சீவனுக்கு இந்தப்பின்னையறிவு காலத்திரயத்திலுமில்லை, தொக்கிந்திரியவறிவான பரிசமுஞ் சீவனேயறிவதானால் திமிர்நோய் கொண்டவர்களிடத்துஞ் சீவனிருக்கிறபடியினால் அந்தச்சீவன் சீதோஷ்ணபரிசத்தையறியவேண்டும் அப்படிகாணாமையால் பரிசத்தையறிகிறவறிவு தொக்கிந்திரியமே அதைச்சீவனறியாமையால் தன்மேலாரோபித்துக்கொண்டு நானே பரிசமறிகிறவனென்றதல்லாமல் சீவனுக்குப்பின்னையறிவு காலத்திரயத்திலுமில்லை, நேத்திரேந்திரியவறிவான ரூபமுஞ் சீவனேயறிவதானால் குருடர்களுக்குஞ் சீவனிருக்கிறபடியால் அந்தச்சீவன் பஞ்சவர்ணங்களையறியவேண்டும் அப்படிகாணாமையால் ரூபத்தையறிகிறவறிவு நேத்திரேந்திரியமே அதைச்சீவனறியாமையால் தன்மேலாரோபித்துக்கொண்டு நானே ரூபமறிகிறவனென்றதல்லாமல் சீவனுக்குப்பின்னையறிவு காலத்திரயத்திலுமில்லை, சிங்குவேந்திரியவறிவான ரசமுஞ் சீவனேயறிவதானால் தோஷம்பிடித்தவர்களிடத்துஞ் சீவனிருக்கிறபடியினால் அந்தச்சீவன் ஷட்வகைருசிகளைப்பகுத்தறியவேண்டும் அப்படிகாணாமையால் ரசத்தையறிகிறவறிவு சிங்குவேந்திரியமே அதைச்சீவனறியாமையால் தன்மேலாரோபித்துக்கொண்டு நானே ருசியறிகிறவனென்றதல்லாமல் சீவனுக்குப்பின்னையறிவு காலத்திரயத்திலுமில்லை, கிராணேந்திரியவறிவான கந்தமுஞ் சீவனேயறிவதானால் மூக்கிந்திரியமில்லாதவர்களுக்குஞ் சீவனிருக்கிறபடியால் அந்தச்சீவன் நற்கந்தந் துற்கந்தங்களைப்பகுத்தறியவேண்டும் அப்படிகாணாமையால் கந்தத்தையறிகிறவறிவு கிராணேந்திரியமே அதைச்சீவனறியாமையினால் தன்மேலாரோபித்துக்கொண்டு நானே வாசனையறிகிறவனென்றத

ல்லாமல் வேறுச்சுட்டின்னறிவு காலத்திரயத்திலுமில்லை இப்படியிருக்க இந்திரிய அறிவுகளையெல்லாம் தன்னிடத்திலாரோபித்துக்கொண்ட ஆவாணமுழுதும் ஞானதிருஷ்டியினால் விடுபட்டு இந்தப்பொறிப்புலன்களாலார்ச்சிக்கப்பட்ட புண்ணியபாவங்கள் தனக்கில்லையென்று கண்டு நிர்ந்நிமிபனாய் நிர்த்தேகனாயிருக்குங் கூடஸ்தசொரூபமே தானென்பது விசாரித்தறியவேண்டும் இந்தப்படியே வசனாதிவிடயங்களாகத்தோற்றும் கன்மேந்திரியவறிவெல்லாஞ் சிவன் தன்னிடத்திலாரோபித்துக் கொண்டதுல்லாமல் வேறுக்கில்லை.

வினா, அதெப்படியென்னில்,

விடை, வாயைகளுக்குஞ் சிவனிருக்கிறபடியால் அந்தச்சிவன்வசனிக்கவேண்டும் அப்படிகாணுமையால் வசனிப்பது வாக்கிந்திரியமே - கையில்லாதமுடவனுக்குஞ் சிவனிருக்கிறபடியால அந்தச்சிவன் ஏற்றலிடுதல் செய்யவேண்டும் அப்படிகாணுமையால் ஏற்றலிடுதல் செய்வது பாணிந்திரியமே—காலில்லாத முடவனுக்குஞ் சிவனிருக்கிறபடியால் அந்தச்சிவன் நடக்கவேண்டும் அப்படிகாணுமையால் நடப்பது பாதேந்திரியமே லிங்கமேயில்லாதவர்களுக்குஞ் சிவனிருக்கிறபடியால் அந்தச்சிவன் போகிக்கவேண்டும் அப்படிகாணுமையால் போகிப்பது உபஸ்தேந்திரியமே—மலத்துவாரத்தடைந்து கருப்பலானவர்களுக்குஞ் சிவனிருக்கிறபடியினால் அந்தச் சிவன் மலவிசர்க்கஞ் செய்யவேண்டும் அப்படி காணுமையால் மலவிசர்க்கஞ்செய்வது பாயுவிந்திரியமே—இப்படியிருக்க இந்தக்கன்மேந்திரிய வறிவுகளையெல்லாந் தன்னதாகக்கொண்ட ஆவாணம்விட்டுப்பட்டு இவைகளாலார்ச்சிக்கப்பட்ட புண்ணியபாவங்களெல்லாந் தனக்கில்லையென்று ஞானதிருஷ்டியாற்கண்டு அசங்கனாகிய கூடஸ்த சொரூபமே தானென்பது விசாரித்தறியவேண்டும்— இந்தப்படியே பஞ்சகோசங்களையுஞ் சிவன்தானென்று ஆரோபிதமாய்க் கொண்டதுல்லாமல் வேறுக்கில்லை,

வினா, அதெப்படியென்னில்,

விடை, பருத்தேகமிதுத்தேனென்பது ஆரதத்துவமான அன்னமயகோசதாதாத்மியமன்றிச் சிவனுக்கில்லை—உசுவாசித்தேன் நிசுவாசித்தேனென்பது பிராணமயகோசதாதாத்மியமன்றிச் சிவனுக்கில்லை— சங்கற்பித்தேன் விகற்பித்தேனென்பது மனோமயகோசதாதாத்மியமன்றிச் சிவனுக்கில்லை — நான்கர்த்தா போக்தாவென்பது விஞ்ஞானமய கோசதாதாத்மிய மன்றிச்

சிவனுக்கில்லை— நான் அஞ்ஞானிமூடனென்பது ஆனந்தமயகோசதாதாத்மியமன்றிச் சிவனுக்கில்லை.

வினா. அதெப்படியென்னில்.

விடை. என்சரீரமென்னும்போது தான்வேறு சரீரம்வேறென்றும் என் இந்திரியமென்னும்போது தான்வேறு இந்திரியம்வேறென்றும், என்பிராணனென்னும்போது தான்வேறு பிராணன்வேறென்றும் என்மனமென்னும்போது தான்வேறு மனம்வேறென்றும், என்புத்தியென்னும்போது தான்வேறு புத்திவேறென்றும், என்சித்தமென்னும்போது தான்வேறு சித்தம்வேறென்றும், என்அகங்காரமென்னும்போது தான்வேறு அகங்காரம்வேறென்றும், என் அஞ்ஞானமென்னும்போது தான்வேறு அஞ்ஞானம்வேறென்றும், வருகிற அனுபவத்தினால் தனக்கன்னியமாகக்கண்டு சாட்சியாகிய தன்னிடத்தில் ஆரோபிதமாய் விவகாரதசையில் மாத்திரமிருக்கிறதென்று விசாரித்தறியவேண்டும்.

வினா. இப்படியறிந்தவர்களுக்கு ஆரோபிதமில்லையாவெனில்.

விடை. இப்படி சாட்சிமாத்திரமா யிருப்பவர்களுக்குச் சத்தமறிவதாகிய சுரோத்திரமும், பரிசமறிவதாகிய த்வக்கும் ரூபமறிவதாகிய சட்சுவும், ரசமறிவதாகிய ஜிஹ்வையும் கந்தமறிவதாகிய கிராணமும், வசனிப்பதாகிய வாக்கும், ஏற்றலிடுதலாகிய பாணியும், கமனம்பண்ணுவதாகிய பாதமும், ஆனந்திப்பதாகிய உபஸ்தமும், மலவிசர்க்கம்பண்ணுவதாகிய பாயுரும், உச்வாச நிசவாசம்பண்ணுவதாகிய பிராணாதிவாயுக்களும், சங்கல்பவிகல்பஞ்செய்வதாகியமனமும், நிச்சயிப்பதாகிய புத்தியும், அஞ்ஞானமாகிய அவித்தையும் பின்னமின்றி யபின்னமான அறிவுசொரூபமாய்க்கண்டிருப்பதால் விசாரித்தறிந்தவர்களுக் காரோபிதமேயில்லை இப்படி ஒருவிகாரமின்றி நிருவிகாரமாயிருக்க அவாந்தர கற்பனையான மனமடக்கத்தினால் ஜெனனமரணங்களு முண்டானது போற்றோற்றியது.

வினா. அப்படியானால் ஜெனனமரண நரகசொர்க்கங்களனுபவித்ததாரென்னில்.

விடை. கன்மகாண்டத்தில் விதியாகச்சொன்ன புண்ணியகன்மங்களைத் தேகேந்திரியங்களாற்செய்து அதற்குத்தக்கதேவபோகங்களையும் தேகேந்திரியங்களே யநுபவித்தது - நிஷேதமாகச்சொன்ன பாவகன்மங்களைத் தேகேந்திரியங்களாற்செய்து அதற்குத்தக்க திரியக்காதிஸ்தாவர சரீரங்களெடுத்து துக்கரூபமான நரகங்களையுந் தேகேந்திரியாதிகளே யநுபவித்தது-இந்தத்தேகேந்திரியாதிகளையே நானென்றும் இதுகளாலசிக்கிறதப்ப

ளும் புண்ணியபாபகன்மங்களைத் தன்னதென்றும் அத்தியாசமா
கக்கொண்ட மயிமானதோஷத்தினால் அளவிறந்த ஜனனமரண
ங்களுண்டாயின - நிச்சமாய் விசாரித்தறியுமிடத்தில் சகலமு
ம் இந்தத் தேகேந்திரியாதிகளுக்கேயல்லாமல் ஏகமாய் நித்திய
மாயிருக்கப்பட்ட நானாகிய கூடஸ்தனுக் கில்லையென் றறிவதே
வேதாந்த சித்தார்த்தம், இதற்குதாரணம் வாசிட்டம்.

தெரித்தறியும்பொருளுக்கசிவவறிவதுவாகச்செப்பலாகும்
விரித்தபுலனனுபவித்துமனுபவியாமனமதுவாய்விளம்பலாகும்
டரித்தவுணர்வொளிநெஞ்சமுலகெலாந்தினைவதுவாய்ப் புகலலாகு
ம்—டரித்தொழில்செய்யினுங்கற் போலிருக்குநிலையதுவாய்ப்
பகரலாகும்—என்றும் * முடிவுகளைக்குஞான மில்லாத் துயிலது
வாமுமைமயாகி— யடர்தருஞானதருஞானசொரூபமெழுந்தொடுங்
குமிடமதுவேயாகுந்— திடவிசும்பகமாயிருந்தும் விசும்பானதி
லையதுவாஞ்சித்தம்பந்தி — படர்மனம்போய்த்தாபாவுள்ளதிவு
பெறிலொப்பாமப்பரசுரூபம்—என்றும் — உபநிடதம்.

தோற்றுமசத்தநித்தகலத்தொடர்பகலும்மெய்த்தெளிவித்தாலதேக
மாற்றதொழுந்தொழிலகறுமிந்திரியச்செயலகன்றால் வையநீங்
கு—பேறறுமகமேருவைபதைலருமவிடயம் ஏத்தை... ,
நிற்கும்-போர்முமித்தச் சிவவறி விழுந்தவிடம் புகல்பரிபூரணம
தாமே * மெய்மொழி * ஓசைகேட்டிடிக செவியறுசுவையுமுண்
டாவுடலுமறிக — வாசமூக்குமிர்ப்பவுருவுகண்காண மற்று
மெக்களுமருஞ்செய்க—வசுடைப்புலன்களனுபவித்திடினுமப்
பிக்குமிழனுமப்புவத்தின்—பாசமடைதீரிற் பற்றிலாததுபோற்
பற்றிலார்பரமயோகிகளே * பூரணப்பிரகாசம் * உடம்புடனிருந்
தேயுடம்பிலாவுண்மை புணர்ந்தவனைத்தொருக்காலும்—விடம்
பலகமெவ்வெளியேபோது விளம்பிம்பொருளெலாம்விளக்கு
மிடம்பக்கிரயாகாசமர்நிதுவே யிறப்பொடுபிறப்பிலாதெய்து
ந்—திடப்பபிப்பிரமமாவதுமாக்மா வாலதுந்தேநிசட்கெல்லா
ம் * சிவஞானசித்தியார் * சாக்கிரத்திலேயதீதத்தைப்பொருந்திடி
ன்மற்றவர் சகலசம்முடனிருந்துஞ்சங்கமிலாதவர்தம்—பாக்
கியத்தையின்னதெனப் பகர்வதுவென்றுயிரின் பற்றறுத்திட்டி
மையிலே பற்றற்றிருப்பா—ராக்கமுடிகவித்துலகாண்டரி
வையர்களுடனேயனுபவித்தக்கிருத்தியமைகப்பற்றற்றிருப்பர்
தோக்கியுடுபரிபாதோர்படப்பற்றுலன ஞானகம்பிரபமினில்
விளைநாடிட்டேவே * என்றும்—மன்னவன்றன் மகன்வேடரி
டத்தேதங்கி வளர்ந்தவனையறியாதுமயங்கிநிற்ப — பின்னவனு
மென்மகனீயென்றரசிற்பிரித்துப்பெருமையொடுதாகுபிப்ப

றுமாபோற் — றன்னிபவைம்புலவேடர்சுழவிற்பட்டுத் துணை
வனையுமறியாது துயருறுந்தொல்லுயிரை — மன்றுமருட்குரு
வாகிவந்தவரினீக்கி மலமகற்றித்தாளுக்கீழ்வைப்பான்.
என்றும்—சொரூபசாரம்— நன்விற்ற சேந்திரிய நாட்டியங்கள்
பார்ப்போங்-கனவின்மனக்கூத்தைகாண்போ-நனவிற்-சுழுத்தி
யிலேயில்லாத சூனியக்கூத்தாடி-விழுட்பொருளாய்நாமிருப்போ
மே—என்றும்—தத்துவராயர்-ஞானவினோதன்கலம்பகம் - ஆல
ராயினைசெய்யுமைம்புலன்காளெம்மறுபகையாங் - கலநாள்பலகு
ணங்காண்மலங்காள்கரணங்களென்னும்-பலகாளருட்சொருபான
ந்தனூர்பவளத்திருவாய் -மலராதளவுமன்றேயுங்களை டெங்கள்
வாழ்வுகளே—என்றும் - போதாத்துகரம்-கற்பிதப்பொருள்கட
ம்மைக் கடவுளாய்க்கருதித்தொல்லை - யுற்பவத்தன்னிலிற்றேயு
ழைந்தனைவோண்ணிய்காலத் -தற்பரம்பொருளாய்வந்ததம்பிரான்
றுடோராதே - புற்புதக்கனவிற் பொன்றும் பூஞ்செயக்கருதி
ம்மனே—என்றும் - அவிரோதவுந்தியார் - ஐசுறுதிக்கோளான்
றுலம்புலனூல்-மிசையுமேற்கேடெமக்குந்தீபற - வெங்கனமெ
ய்துமென்றுந்தீபற - என்றும், தத்துவராயர் அமிர்தசாரம் - சித்
தாகுலமனிதர் சீசிசெவிமுதலா-மைந்தாலுமீடழிபவல்லாரோவை
ந்திலொரு -வேட்கையசுணமிபம்விட்டின்மீன்வண்டிவைவன்-கே
ட்கைமுதலேலொன்றின்கேரி—என்றும்-திருவாய்மொழி - ஆவி
திகைக்கவைவர்குமைக்குஞ்சிற்றின்பப்-பாவியேனைப்பலநீகாட்டு
ப்படுப்பாயோ -தாவியவையங்கொண்ட தடந்தாமரைகட்கே-கூ
விக்கொள்ளுங்காலமின்னங் குறுகாதே - என்றும் திருவாசகம் *

அடற்கரிபோலைம்புலன்களுக்கஞ்சியழிந்தவென்னை *
விடற்கரியாய்விட்டிடுதிகண்டாய்விழுத் தொண்டர்க்கல்லாற் *
றொடற்கரியாய்சுடர்மாமணியேசுடுதீச்சுழலக் *
கடற்கரிதாயெழுநஞ்சமுதாக்குங்கறைக்கண்டனே —என்றும் *

கந்தரனுபூதி-கைவாய்கதிர்வேன்முருகன்கழல்பெற் -றுய்வாய்ம
னனே யொழிவாயொழிவாய்-மெய்வாய்விழி நாசியொடுஞ்செவி
யா - மைவாய்வழிசெல்லுமவாவினையே—என்றும் - நாலடியார்-
மெய்வாய்கண்மூக்குச்செவியெனப்பேர்பெற்ற -வைவாய்வேட்
கையவாவினைக்- கைவாய் - கலங்காமற்காத்துய்க்குமாற்றலுடை
யார்-விலங்காதவீடுபெறும்—என்றும் சிவஞானசித்தியார்- ஒரு
புலனுகரும்போதங் கொன்றிலொன்றிற்பாலும்-வருபயன்மா
றிமாறி வருந்திடுமெல்லாமாயு - மொருபொழுதணைகின்றிடாயி
லதிவ்வல்லல்வாழ்க்கை -மருள்கனவதுவும்போலாகாயுமின்மா

யமென்றே—என்றும் - தேவாரம் - வென்றிலேன் புலன்களைந்
தாம்வென்றவர்வினைகடந்தன் றாட்- சென்றிலேனதலாலேசெந்நெ
றிக்கந்தாந்செய்யே-னின்றளே நரும்புகின்றேனீசனேனீசனே
யே-யின்றிலேனாயிலேனெனெஞ்செய்வான்றோன்றினேனே
—என்றும் - பங்குழி-வ்வததக்க பண்டியைப்பெய்தவாற்றாற்
றெரிந்திம் மாயவாழ்க்கை கண்டொழுங்கேதகின்றேன்-மூமுகு
வார்தனாவர்மூர்க்கமாயவர்களோடு-மடியனேன்வாழமாட்டே
னூருமூலட்டனே - என்றும்- புள்ளுவரைவர்கள்வர்புனத்திடை
மைந்துநின்று-கள்ளுவர் கூறைகொள்வர் தூநெறிவிளையவொ
ட்டார் - முள்ளுடையிவர்கடம்மை முக்கணான்பாதநீழ - லுள்ளி
டைமறைந்துநின்றங் குணர்விலேலப்தலாமே—என்றும் - பொ
ய்யனைத்தையும்விட்டவர்பற்றிய-மெய்யனைச்சுடர் வெண்மழு
வேந்திய - கையனைக்கச்சியேகம்பமேவிய - வையனைத்தொழுவா
ர்க்கில்லையல்லலே—என்றும் -அழக்குவாய்செவிகண்ணுடலாகிவந்
தகநுகமவர்தம்மார்பைபலிழ்தர - நோக்குவானமை நோய்வி
னைவாராமே -காக்குநாயகன் கச்சியேகம்பனே—என்றும் - திரு
வாசகம் - மாறுபட்டஞ்சென்னைவஞ்சிப்பயானுன் மணிமலர்த்தா
ள் - வேறுபட்டேனைவிடுதிகண்டாய்வினையேன்மனத்தே - யூற
பட்டேயன்னு முத்தரகோசமங்கைக்கரசே - நீறுபட்டேயொளி
காட்டும் பொன்மேனிநெடுந்தகையே—என்றும் - இந்திரியவய
மயக்கி யிறப்பதற்கேகாரணமா - யந்தரமேதிரிந்துபோயருநர
கில்வீழ்வேற்குச் - சிந்தனையைத்தெளிவித்துச்சிவமாக்கியெனை
யாண்ட - வத்தமிலாவானந்த மணிகொடில்லைகண்டேனே—என்
றும் - பரிபூரணப்பிரகாசம் - பந்தப்பாசங்களொருமூன்றும்பரம
விடைமேயிருப்பதெனிற் - றெந்தப்புருடனொருக்காலு நசியா
னுரைத்தாஞ்சா - னந்தப்பரமனையலன்றுணதியானமேயினலப்ப
ரனைப் - பந்தப்படுமோர் சிவனெனப்பார்ப்பான் பவத்தேபதை
க்கின்றான்—என்றும - சொரூபசாரம் - கண்ணலாற்கண்டதுண்
டோ காதலாற்கேட்டதுண்டோ - விண்ணலாலேதம் விளைந்த
துண்டோ-வென்றூங்காற் - காலலாறேடிவரக்கண்டதபோற்
றெரித்தெனுந் - தானலாதுண்டோ சகம்—என்றும்- மேபாகம்பு
லம்பொருந்துமிடமெய்ருந் - தேகக்கரணந் திரியுமேயாகில
து - தன்னைநீயன்றதயங்காதே-நெஞ்சமே - நின்னை நீகண்டறி
ந்ததில—என்றும் - திருமந்திரம் - சிவனன்றுஞ்சிவனெய்ற
மெய்வதில - சிவனாசிவனுனையறிகிலார் - சிவனாசிவனானதறிந்த
பின் - சிவனாசிவனுமேயிருப்பரே—என்றும் - கடையவொழித்தி
டிருந்தகன்மை மடையவிழுஞ்சிய துவானவாறபோ - இடமி

ஒழிந்திட்டிருந்தசிவமுயி ரடையவிழுங்கியது வானவாறே—
என்றும் - தன்னையறியத் தனக்கொருகேடில்லை - தன்னையறியா
மற்றுமே கெடுகின்றார் - தன்னையறியுமறிவையறிந்தபின்— தன
ன்னைவிட்டென்னையினி துணர்ந்தேனே—என்றும் - எல்லாமறிவ
தறிவுதனைவிட்டே - யெல்லாமறிந்துமிலாபமிங்கொன்றில்லை —
யெல்லாமறிந்த வறிவினையானென்னின் - லெல்லாமறிந்த விறை
யென்னலாமே—என்றும் - பொல்லாவண்ணந்தந்தாறு - ஒழித்தே
ன்பிறப்பினை யூர்ந்தேனறவைமேபோக்கிற்றுள்ள-- மிழித்தேனு
டம்பினை யேல்ன்பிறரிடை யிம்மையும்—பழித்தேன் பழிய
விளக்கும்பஞ்சேந்திரியக் குஞ்சரமுந்— தெழித்தேன் சிவனடி
சேர்ந்தேனினியெத தெள்ளியனே—என்றும்— திருவம்மானை—
மெய்யானதொன்றுமே மெய்ம்மைகாணம்மானை—மெய்யன்றி
மற்றெலலா மித்தைகாணம்மானை—என்றும்—கூறப்பட்டிருக்
கின்றது.

வினா. இன்னுமெப்படியென்னில்.

விடை. சச்சிதானந்தசொரூபமாகியும் அகண்டத்துவமாகியும் அபரிச்சின்னத்துவமாகியும் சர்வவியாபகமாகியும் கால
பரிச்சேத தேசபரிச்சேத வஸ்துபரிச்சேத ரகிதமாகியும் நிராம
யமாகியுமிருப்பதே ஆத்மசொரூபமென்று சுருதிஸ்மிருதிகளு
ம் உபதிஷித்து மகாவாக்கியங்களும் குருவாக்கியமுங் கூறப்படு
கின்றது,

வினா. சத்தென்பதெப்படியென்னில்.

விடை. முற்பிறவிகளிற் செய்தநல்வினை தீவினைகளின்படி இந்த சரீரம்வந்ததென்று சொல்லுகையாலும் இப்போது
செய்கின்றவினைகளுக் கினிமேற் பிறவிவருமென்பது சர்வானு
பவமாய்க் கண்டிருப்பதினாலும் இப்படி திரிகாலங்களிலு முண்
டான சரீரமாத்திரமழிந்து தான்நித்தியமா யழிவற்றிருப்பதனா
லும் சத்தென்பதாயிற்று,

வினா சித்தென்பதெப்படியென்னில்.

விடை. பாலியாவஸ்தைமுதல் நடந்துவரும் விவகாரங்களிற்சி
றிது மறந்திருந்தாலும் மற்ற விருத்தாந்தமெல்லாம் அ
மாவாசையிருளும் மேகாந்தகாரமும் மழைதிசியுங்கூடியகாலத்
திலும் மூலைவீட்டில் முக்காடிட்டுக்கண்களைமூடிக் கவிழ்ந்துப
டுத்திருக்கிற பருடனுக்கும் சூரியசந்திராக்கினி மின்மினி நட்சத்
திரேந்திர சாதனங்களொன்றுமின்றியிருந்தும் இன்னதின்ன
தென்று பகுத்தறியப்படுகிறதினால் சித்தென்பதாயிற்று.

வினா. ஆனந்தமென்பதெப்படியென்னில்.

விடை. தனதாகிய தாரபுத்திரர்களால்வருஞ் சுகங்களை நெடுநா
ளாய் ஒருக்கால்போலப்பலகாலுமனுபவித்து அதுகளா
ல்வருஞ் சுகமெல்லாந் துக்கமாய்க்கைவிட்டுச் சுழுத்திசுகத்தை
யே சதாநாடுகிறபடியால் ஆனந்தமென்பதாயிற்று.

இதற்குதாரணம் கைவல்யநவநீதம்—செல்மாந்தாஞ் செய்த வி
னைகளுடனுருமெனிற் செல்காலமிவனுண்டலோ—ஏன்மானுபவ
நாகசொர்க்கமெனில் வருகின்றகாலத்து மிவனுண்டலோ—வுன்
மாதயாதனுவுடல்கடவுளுடன்மனுட வுடன்மாறிமாறிப்பழியுந்—
தன்மாட்வுடல்செடினு மிவனிருப்பதுகொண்டு சத்தெனப்படுமொ
க்குமகனே—என்றும் - இருளாகமூன்றுஞ் சுழுத்தியிலிராத்திரியிலி
ரவிகூடாற்றபொழுது—மருளாமலிருளையும் பொருளையுந்தெரி
கின்ற வகைகொண்டு சித்தாகுமே—பெருவாழ்வுமிக்கதானே தன்
னிடத்திலிற் பெயராதபிரியமதனு—லருகாதபிரியஞ்சுகத்தில்வரு
மாதலா லானந்தமாமைந்தனே—என்றும் - சத்தேசித்தாகுமய
லெனிலசத்தாமசத்தாகுஞ் சாட்சியெக்கே — சித்தேசத்தாகுமய
லெனிற் சடமாஞ்சடங்களுக்குந் திதியுமில்லை— யொத்தேதோ
ன்றியசத்துஞ் சித்துநல்லசுகமாகு மூடத்துக்கோர்—வித்தேய
ல்லியமாகிற் சடமசத்தாந்துகானுபவம்விளைந்திடாதே—என்று
ம் - வியாதத்துமனம்விளங்குவதுதன்னுமிலாவேறென்றுமிலா
—யாகிவெறெனிலதுவுமசத்தோசத்தோவசத்தேல்மலடிமை
ந்தன்—பெயகாரியஞ்செயுமோ வசத்தெனவிப்படி யதையும்
பிரித்துச்சொன்னு—லோயாதவவத்தையாங் குதர்க்கவிகற்பங்க
ளெவிட்டொழிந்திடாயே—என்றுங் - கூறப்பட்டிருக்கின்றது-
ஓரிவைகம் ப்ரேரிக்கனைக் குறித்து அகத்துள்ளிருப்பவன்போற்
கண்டமாயும் பரிச்சின்னமாயும் ஓர் தேகவியாபகமாத்திரமா
யிருப்பதால் இனி அகண்டமாயும் அபரிச்சின்னமாயும்
சர்வத்திலுமுள்ளும் புறநும் வியாபித்திருக்கும் சர்வவியாபகமா
யிருக்கின்ற தங்களுடைய சொரூபத்தையு மித்தப்படியே
விசாரித்தறியவேண்டியது.

வினா. அதெப்படியென்னில்.

விடை. அகண்டபரிபூரண வியாபகமாயும் அபரிச்சின்னமாயு
ம் எல்லாசசராசரபதார்த்தங்களிலுமிருப்பதே பிரம
சொரூபமென்று சுருதியுக்திகளிற் சொல்லுகின்றது.

வினா. ஆகாசத்திற்கும் இத்தன்மைகளிருக்கிறபடியால் அது
வே பிரமமென்று சொல்லலாமேயென்னில்.

விடை. ஆகாசமானது நான்குபூதங்களிலும் நிறைந்துசர்வவி
யாபகமாய் நிர்மலமாயிருந்தாலும் சிருஷ்டிகாலத்து

ண்டாகிப் பிரளயகாலத்திலழிந்துபோவதினால் காலபரிச்சேதம்வரும்.

வினா. காலமே பிரமமென்றுசொல்லலாமேயென்னில்:

விடை. காலமானது ஏகவியாபகமாய் நிரவயவமாய் எந்ததேசத்திலும் வியாபித்திருந்தாலும் தேசாசாரங்களால் காலக்கிரியைகளும் அதனாலுண்டாகும் பொருள்களுமாறி யழிவுவருகிறபடியால் காலத்திற்குந் தேசபரிச்சேதம்வரும்.

வினா. தேசமே பிரமமென்று சொல்லலாமேயென்னில்.

விடை. தேசமானது எங்கும்வியாபித்திருந்தாலும் ஒருதேசத்திலுள்ளவஸ்து ஒருதேசத்திலில்லாமையினால் தேசத்திற்கு வஸ்துபரிச்சேதம்வரும்.

வினா. வஸ்துவே பிரமமென்றுசொல்லலாமேயென்னில்.

விடை. வஸ்துவானது வியாபகமின்றிக் கண்டமாய் பரிச்சின்னமாய் அனித்தியமாயிருப்பதினால் வஸ்துபரிச்சேதமும் வரும் ஆகையால் காலத்தினால் ஆகாசத்திற்கும் தேசத்தினாற்காலத்திற்கும் வஸ்துவினால் தேசத்திற்கும் அழிவுவருகிறபடியால் இதுகள்பிரமசொரூபமாகமாட்டாது.

வினா. ஆனால்பிரமசொரூபமெவ்வகைப்பட்டதென்னில்.

விடை. தேகேந்திரியாதிகரணங்களும் அவற்றின்றொழில்களுமின்றிக் காலதேசவஸ்து பரிச்சேதரகிதமாய் அகண்டபரிபூரணமாய் அபரிச்சின்னமாய் சின்மாத்திரமாயிருக்கின்றஅறிவுவியாபகமேபிரமசொரூபம்.

வினா. பிரமத்திற்குத்திரிவிதபரிச்சேதமுமில்லையென்பதேதெனில்

விடை. எந்தக்காலத்திலும் எந்தத்தேசத்திலும் எந்தவஸ்துவினும் உள்ளும்புறமும் எள்ளிடவிடமின்றிச் சர்வவியாபகமாய் அறிவறிபாலமயற்ற ஜெகசித்திரபடம்போலும் பர்வதம்போலுமசைவற்ற நிஸ்சலனமாயிருக்கிறபடியால் திரிவிதபரிச்சேதமுமில்லையென்பதாமனிவு-இதற்குதாரணம்-மெய்ம்மொழி. பொன்னைத்தான்கண்டபேர்கள் பணியெனப்புகலார்போல — மன்னித்தானுடல்மயக்கு மாயதத்துவங்கள்ாய்ந்தே—புன்னைத்தானறியவின்பவுருவுசைதன்யமாகுந் — தன்னைத்தான்கண்டவர்க்குத்தானெனவேறுமுண்டோ— என்றும்- மூலகீதி - என்றுமெக்காலமெங்குமியாருளுமிறைவவிய —யின்றிமதத்ெறான்றமின்றியிருந்தவாறிருக்கவிங்ஙன் —பின்மைறமற்றளவாய்ப்பேணியிதயிசுப்ப்ப்த்தோதிச் — சென்றிடச்செய்ததேயவ் விச்சையென்செப்பிடாம்ப—என்றும் - மகாவாக்கியம்— இக்குணங்களுடைய

பரப்பிரமமே நாமாமே மெவ்வாறெனின்—னெக்ககருேயெண
ச்சனிப்புமரிப்பின்மையினு னித்யமானுேந்—தொக்குடம்புபோ
லமலத்தின்றுவக்கதின்மையினுற் சுத்தமானுே—மூட்காணபோ
னசிக்குமறிவுபெருமையிற்புத்த மூடைத்துநாமே — என்றும்-
அகங்காரவிருத்தியெனப் பந்தமிலாமையின்முத்த மானுேமிந்த
ச்—சகம்போலவிளக்கு மிந்திரசாலமிலாதிருக்கையினுஞ்சத்யமா
னுேந்—சுகங்காணிற்றன்னையலாற் சுகமிலையென்றேபரமானந்
தமானுே—மிருங்காலதேசவஸ்து வெனப்பிரியாவானந்தவேட
நாமே—என்றும்- தத்துவப்பிரகாசம் - முன்னேநற்சுருதியோதி
முடிவுநற்கரியதாக — வின்னமத்தேவர்மூவ ரொய்துதற்கிடரோ
மேத்—தன்னையிப்படியேகாணத் தானளித்தெனக்கோர்வாரீ
தை—சொன்னநற் சொரூபானந்த சோதியைத்தொழுதல்செய்
வாம்—என்றுங்கூறப்பட்டிருப்பதால் இதுவேபிரமாணசித்தம்.

வி௲. ஆத்மா விகாரமின்றி நிர்விகாரியாயிருக்கத் தேகேந்திரி
யாதிகள் தொழிற்படுவதாலுல் அதுகளுமோர் வஸ்து
வென்று துவிதவாதிகள் சங்கிப்பார்களேயெனில்.

விடை. காந்தகல்லானது அசைவற்றிருக்க அச்சந்நிதானபலத்
தினுல் சடமானவூசிசேஷ்டித்து அக்காந்தத்தைப்பாய்ந்
தடிப்பதுபோலும் சூரியனிச்சையின்றியிருக்க அச்சன்னிதா
னபலத்தினுல் சடமானசூரியகாந்தக்கல்லிலக்கினிஜெனித்து அத
னல் பாகக்கிரியைகள் நடப்பதுபோலும் ஆத்மப்பிரகாசத்தினு
ற்பிரதிபலித்த சாக்ஷியான துவிருத்திரூபமாய் சாக்கிரசொப்பன
ங்களிலுள்ள விடயங்களை இந்திரியாதிவழிகளாலறிந்து விவகரிக்கி
ன்றது சுழுத்தி மூர்ச்சைசமாதிகளில் விருத்தியின்மையால் ஒரு
அந்நிறும் விவகாரங்களுமில்லை ஆத்மசந்நிதானபலத்தாற்றெழி
ற்பட்டதன்றி யிந்திரியாதிகள்சடமேயாம்.

இதற்குதாரணம் சிவஞானபோதம்—-கடக்குஞ்சரம்பன்னியுன்
னின் றெருத்தன்மைபாதகன்னங் கன்மெட்போலியக்கு —
கிடக்கும்நடத்தாவிடத்தில் வுடம்புக்கிடக்கும் மொருத்தன்னட
த்தாவிடத்தே * என்றும் - திமற்பாவைகண்ணுடியிற் பாவைகள
ா — விமிர்க்கும்முடக்கும் மியவன்செய்யுமெல்லாத்— தொழிற்
பாலதாயிற்றவுடலஞ். செய்தொழிலுஞ் — சுடர்ஞானவடிவானவ
ன்செய்தொழிலே * என்றும் - கைவல்யநவநீதம் - செய்கையு
ஞ்செய்விக்கையுமற்றிருக்குங் காந்தச்சிலையிலுசூன் னிறும்புகள்
சேட்டிக்குமாபோற் — செய்கையுஞ்செய்விக்கையு மற்றிருக்கு
மென்முன்சடமானவுடலமெல்லாஞ் சேட்டைசெய்யு — மெய்
யைத்தவிர்த்திரியவிகார — விகாரவிருத்திக்கும் விருத்திதானுய்

— மெய்கலந்தசமாதிக்குஞ் சாட்சியேநான்வெயில்போலென்று
ரைத்தவனேவிபுமாகர்த்தன் * என்றுங்கூறியிருப்பதினுல் இது
வேபிரமாணசித்தம்.

வினு. இந்திரியாதிகள் தொழிற்படாது சடமாயிருந்தாலுந்து
விதமேயன்றி அத்துவிதமல்லவென்றுசொல்லுவார்களென்னில்.

விடை. தொண்ணூற்றாறு தத்துவமென்பது சகலமதத்துக்கும்
பொதுவென்றும் சைவர்களுக்கு (௩௰௬) வேதாந்திக்கு
(௨௮) மாயாவாதிக்கு (௨௫) வயிணவனுக்கு(௨௪)தத்துவங்களெ
ன்றும் பின்னும்பதினேழுதத்துவமென்னும் பத்தொன்பதுதத்
துவமென்றுஞ் சொல்வதெல்லாம் சொன்மாத்திரமேயன்றிப்ப
ஞ்சதன்மாத்திரையைத்தவிரக் காலத்திரயத்திலுமில்லை - எப்படி
யென்றால் சத்தமென்றறிகிறபோது சத்தமுஞ்சத்தமென்றறிந்த
வறிவுமாத்திரமன்றிச் சமானவாய்வு சுரோத்திரேந்திரியம் வாக்கி
ந்திரியம்வசனாதிவிடயங்களுமில்லை - பரிசமென்றறிகிறபோது ப
ரிசமும் பரிசமென்றறிந்த வறிவுமாத்திரமன்றி மனம் வியானவா
ய்வு தொக்கிந்திரியம் பாணீந்திரியம் தானாதிவிடயங்களுமில்லை -
ரூபமென்றறிகிறபோது ரூபமும் ரூபமென்றறிந்த வறிவுமாத்தி
ரமன்றி புத்தி உதானவாய்வு நேத்திரேந்திரியம் பாதேந்திரியம் க
மனாதிவிடயங்களுமில்லை - ரசமென்றறிகிறபோது ரசமும்ரசமெ
ன்றறிந்தவறிவுமாத்திரமன்றிச் சித்தம் அபானவாய்வு சிங்குவேந்
திரியம் உபஸ்தேந்திரியம் ஆனந்தவிடயங்களுமில்லை-கந்தமெ
ன்றறிகிறபோது கந்தமும் கந்தமென்றறிந்தவறிவுமாத்திரமன்
றி அகங்காரம் பிராணவாய்வு கிராணேந்திரியம் குதேந்திரியம் ம
லவிசர்க்காதிவிடயங்களுமில்லை இந்தப்படி தன்மாத்திரைகளைத்
தவிர வேறேதத்துவங்களில்லாமையாலும் தன்மாத்திரைகளைப்
பிரத்தியேகம் பிரத்தியேகமாய்ப்பிரித்துப்பார்க்க அதுகளுந்த
னியே ஒன்றைவிட்டொன்றில்லாமையினாலும் ஐந்துமொன்றாக
வேயிருப்பதினாலும் இதுகளுக்குக்காரணமானவிட்சேபசத்தியும்
விவேகித்தவிடத்திலில்லாதிருப்பதினாலும் அந்தவாவரணமுமொன்
றுந்தெரியவில்லை யென்றறிந்த வறிவுமாத்திரமாகி அறியனெ
ன்ற அஞ்ஞானம்நசித்துவிட்டது பின்னுந்தனக்குள்ளே சகலத
த்துவங்களுந்தோன்றி வளர்ந்து ஒடுக்குவதென்று கண்டவறி
வேமகாகாரணமான மூலப்பிரகிருதி அதுவுஞ் சொன்மாத்திர
மேயன்றி ஒருபொருளல்ல.

வினா. அதெப்படியென்னில்.

விடை. தன்னிடத்தோன்றஉண்டானாலல்லவோ இருக்கவேண்டும்
இருந்தாலல்லவோ லயிக்கவேண்டும் அப்படி உண்டாகு

வுமில்லை வளரவுமில்லை லயிக்கவுமில்லையென்றறிந்த வறிவுமாத்தி
ரமாயிருப்பதே மூலப்பிரகிருதிரகிதமான பிரமசொரூபம்.
இதற்குகாரணம் - தத்துவாதீதரூபம் - தத்துவப்பலவெனச்சா
ற்றுவாரசிலர் — பித்தர்களெனுமிடம் பேசவுண்டுமோ - வத்
துவின்வடிவலதன்றிநின்றதன் - னெத்தனைதத்துவ மின்னமின்
னமே * என்றும் - இந்தியமிருடதோ டீரிரண்டெனத் - தந்திர
மோதுவர் சார்ந்தமேலவர் - இந்திரியம்பலவென விசைத்தபேரொ
ல்லாம் - வந்ததுமயினமா மறுவிகாரமே * என்றும் - வேறு
கோடிதத்துவ மென்னிலுங்கோநிலா - நிமிதற்பர நின்றதுமற்ற
வை - யோடசித்துசித்தாகிடுமுண்மையிற் - பீடேறட்பலபேசல்பி
தற்றலே * என்றும் - போதாமிர்தம் - பன்னுவர்பலபலதத்துவ
ங்களை - மன்னி பாரபனாதமாற்தர்க - டன்னிலே தனையுணர்கி
ன்றபே நிலி - லன்னியமிதுவெனவறையலாவதே * என்றும் —
கோதுமாத்திரை றுறைகுமிழிகொள்ளைநீர் - வேலையிற் பிறிதெனவி
ளம்பலாவதோ - சாதுதத்துவம்பல சற்றுமாயினும் - மூலநற்
சிவமதே முடிவிறுள்ளதே * என்றும் - சிவப்பிரகாசதரிசனம் -
ஒன்றலதவதிடலாவதுமொன்றற - நின்றதத்துவ நின்மலபோத
மே - பின்றையொன்றள தென்றல்பெரும்பிழை - யென்றவேத
மியம்பியதல்லவோ * என்றும் - முதுமொழி - தத்துவத்தையு
ணர்ந்தவனை - யொத்ததப்பி லொருவனென்றள்குவார் - நித்
தத்துவநிர்மலனென்றனா - ரத்தனுருமவர்நரகெய்துவார் *
என்றும் - சமயருடாமணி - வடம்படகோத்தமணிறுறைமறாவி
போல்மன்றமிரக்கைகட்செல்லா - மிடம்படக்கோத்தநின்று
தவ்வொன்றேயெனுமிடமேமறைகள்பாரிற் - தடம்பலம்பரப்பட்
டமாத்திரமே கடத்திறுளாகாசப்போது - முடப்பிரிவிலாவினைப்
ப்பார்த்தபோதெல்லாமொருவனே யன்றிவேறுளதோ * என்
றும் - சொரூபசாரம் - பூதாதியவற்றும் பொறிபுலன்களெல்லா
ம்சித் - தோதியவற்றுமவை யெல்லாஞ்சித் - தோதரிய - தம்பனை
யுஞ்சித்தவைத்துங் காண்பானுங்காட்சியுஞ்சித் - தற்பரும்வேறில்
லாமையால் * என்றும் - பார்த்ததிசையெல்லாம் பரிபூரணசொ
ரூபந் - தீர்த்தமெல்லா மானந்த சிற்சொரூபஞ் சேர்ந்திருந்
தோத்திரங்களெல்லாஞ் சகசொரூபதம்மையலாம் - வேற்றுருவ
மேதாருமே * என்றும் - சிற்சொரூபத்தானே யேகசொரூபமா
னவிலாத் - தற்சொரூபசாரமாய்ச்சாற்றவே - பொற்சொருப -
டக்கருவம்போலவது வதவாய்த்தோற்றமொரு - சொச்சொரு
பத்தானே தனை * என்றும் - வாசிட்டம் - உவரிநீர்போதுலகெ
லா மொன்றுன வுணர்வுமாத்திரமதாதறுற்றபுத்தி - கவர்வுறா

தலாலசையுந்திரையு நீர்தான்கல்லோலத்தாலசையுங் கணக்கேபோ
லச் - சிவமுணர்வுமாத்திரமே பிரமமாகி சிகழ்பெயராய்ப்புகல்
பொருளைச் செகமென்றெண்ணித் - தவமறுபேதையர் காண்பது
திவுதானே சற்றசற்தமாத்திரத்திற் சருக்கமுண்டாம் * என்று
ம் - பெரும்பெரியவடிவான பிரமமேயாதலாற் பிறிதொன்றில்
லை - வரும்பொருளெல்லாம் பிறிவிங்கனதையாயிருந்தமையின்வி
வையமெல்லாங் - கரும்புயலேயதிவேயாங் கற்பனைவேறில்லையா
ற்காணப்பட்ட - வரும்பொருள்கடமிலதிவுகூடாதலின்றலதிபொ
ருளாமனைத்துமில்லை * என்றும் - அவதூதகீதை - சுல்லாசம் *
சர்வம்சூன்யம் மனஸ்சூன்யம் சத்தாசத்யவித்யதே - ஜோபர்
வாபாவிதம்புரோக்தம் சாஸ்த்ரசம்மதி பூர்வகம் - என்றுங் கூ
றப்படுகையாலிதுகனே பிராமாணசித்தம்.

வினா. இப்படி துவிதவஸ்துவின்றித் தானே தானாயிருக்கிறத
னிடத்தில் துவிதபாவனைகளான விபரீதங்களெப்படி
யுள்ளதாகத் தோற்றுகிறதென்னில்:

விடை. இல்லாதவற்றுக்கு அதோற்றமான புலன்வழிகளாகிய கால
த்திரயத்திலுமில்லாத சுத்தமித்தையான விபரீதபாவனைக
ள் இல்லாத கானற்சலம்போ லுள்ளதாகத் தோற்றுகிறது.

வினா. உள்ளவஸ்துவி லுள்ளது தோற்றமேயன்றி இல்லாது
தோற்றுதலெங்ஙனமென்னில்:

விடை. உள்ள இரும்பில் இது ஆயுதமெனத்தோற்றியது இல்லாத
ஆயுதந்தோற்றமாக உள்ள இரும்புதானே தோற்றினது.
உள்ளபொன்னில் இது ஆபரணமெனத்தோற்றியது இல்லாதஆ
பரணந்தோற்றமாக உள்ளபொன்தானே தோற்றினது, உள்ளமண்
ணில் இது கடமெனத்தோற்றியது இல்லாதகடந்தோற்றமாக உ
ள்ளமண்தானே தோற்றினது - உள்ள மரத்தில் இது பரிபாரிகளெ
னத்தோற்றியது இல்லாதபரிபாரிகள் தோற்றமாக உள்ளமரந்தா
னேதோற்றினது - உள்ளசமுத்திரத்தில் இது அலைநுரைகுமிழி
யெனத்தோற்றியது இல்லாத அலைநுரைகுமிழி தோற்றமாக உள்
ளசமுத்திரந்தானேதோற்றினது - உள்ளஆகாசத்தில் இது நீலபீ
தமெனத்தோற்றியது இல்லாதநீலபீத வர்ணங்கள்தோற்றமாக உ
ள்ளஆகாசமேதோற்றினது - உள்ள கட்டையில் இது கள்ளனெ
னத்தோற்றியது இல்லாதகள்ளன் தோற்றமாக உள்ளகட்டை
யேதோற்றினது - உள்ளபழுதையில் இது பாம்பெனத் தோற்றி
யது இல்லாதபாம்புதோற்றமாக உள்ளபழுதையே தோற்றினது
இத்தத்திஷ்டாந்தங்களைப்போல சச்சிதானந்தசொரூபமான தன்

விட்டில் இந்த நாமரூபமெனத்தோற்றியது உள்ளசச்சிதானந்தமே தோற்றினதல்லது காலத்திரயத்திலு நாமரூபந் தோற்றவேயில்லை.

வி௱. அதெப்படியென்னில்.

விடை. இருக்கின்றது சத்து அந்தச்சத்துதானே நாமரூபமான சித்தாய்த்தோற்றியது அந்தச்சித்தைவிட நாமரூபமென்பது காலத்திரயத்திலு மில்லாமையாலும் சத்தைவிடச்சித்தென்பது வேறேயில்லாமையாலும் இரண்டாம்வஸ்துவில்லை அந்தச்சத்துக்குஞ் சித்துக்குமிடையேயுள்ள ஆனந்தமான சுகந் தோற்றுமேயன்றி இல்லாதமாயையானது காலத்திரயத்திலுந் தோற்றமாட்டாது.

இதற்குதாரணம் - வாசிட்டம் - ஆகலிவலிதொன்றுஞ் செய்ததல்ல வந்தனன்பிச்சமில்லை யறிவுமட்டு - மேதகுசங்கற்பமே வேதாவாகு மெய்யாகவறிவன்றி வேறொன்றில்லைச் - சேதனமாத்திரத்துதித்த சிருட்டியந்தச் சேதனமே வடிவென்று செப்புவாரு - மோரியமெய்யோன் பொசிப்போனிரண்டுமல்ல வுருபவத்திரிமம்மே யுள்ளவெல்லாம் * என்றும் - பொருகடலிற்றிரைகளைப் பிறந்தவெல்லாம் புனலாகிவிளங்காமற் புழுதியாமோ — மொருவெருளாம் பிரமமாத்திரமேயல்லா துபயமெனுக்கதற்பவேப்போரன் றுமில்லை — பெரியிடத்திற்குமாத்திரமே யுலா விரண்டுக்கோவிவ்வகைபோ லென்றுமொன்றுஞ் — சரிவையியாகப்பரத்தின்முத்தி சாதனங்களிறைந்தவர்க்கேசாற்றல்வேண்டும் * என்றும் - அத்துவித வுண்மை - தங்கமொன்றேயணிகளிற் சாற்றும்விதங்கள்வெவ்வேறு — தங்கவிலக்கணமுமன்று தங்கத்தவிர வேறன்று — தங்கமழியாப்பணியழியிற் சாற்றுமித்தத்தனைமையே — லெங்குநிறைசச்சிதானந்தமிலக்குமிந்தவுலகமே * என்றும் - தங்கமொன்றே பணிகளிற் சாற்றும்விதயாய்விளங்குசவி — வங்கமுதலாஞ் சகங்களாயநிவேன் னாசமையதில்லை — இங்கக்கெனறேபங்கொன்று மில்லையகண்டமறிவொன்றே — தங்கவறிவுதோன்றளவுந் தோன்றுநாளுகிதேகம் * என்றும்-கைவல்யநவநீதம் - காலைவிரிகிளிஞ்சல்வெள்ளி கற்கர்ப்பதர்களுமூர் — வானமைந்திற்பாம்பு மலடியேய் முயலின்கோடு — மனமாத்திரமானிற் பிரபஞ்சமெல்லாம்பொய்யே — ஞானமெய்மகனேயுன்னை நம்மானைமறந்திடாயே * என்றும் - பிரமாணங்களிருப்பதினால் காலத்திரயத்திலும் மாயை தோற்றமாட்டாதென்பதே துணிவு.

வி௱. மித்தையான நாமரூபங்கள் காலத்திரயத்திலுமில்லாத அக

ண்டசச்சிதானந்த சொரூபமாத்திரமாயிருக்க இந்தச்சனனமரணமுதலான தாபத்திரயங்களும் ஜீவேசுரபேதங்களும் பந்தமோட்சங்களுமுள்ளதாகத் தோற்றியதெப்படியென்னில்.

விடை. ஆத்மாவே தேகேந்திரியாதிகளென்றும் தேகேந்திரியாதிகளே ஆத்மாவென்றும் விபரீதமாகக்கண்டதேயஞ்ஞானம் அவ்வஞ்ஞானத்தினால் ஆத்மாவாகியதன்னை அசத்தாகிய நாமரூபங்களாய்க்கண்டபோதே அத்துவிதமறைந்து துவிதபாவந்தோன்றியது.

வினா. அதெப்படியென்னில்.

விடை. மேகமசைவாம்போடச் சந்திரனசைவதுபோலும் சலமசைய நிச்சலமான சந்திரனசைவதுபோலும் ஓடமேறிப்போகிறவனுக்குக் கரையினிடத்துள்ளவைகளும் மரமுமோடிவருதல்போலும் பித்தமேறிய கட்கழுவினால் சுழலாத வீடுவாசல் சுழல்வதுபோலும் கொள்ளிக்கட்டை சுழற்றினால் சூரியவட்டமாய்த் தோற்றுவதுபோலும் காற்றாடிகளுருவிருந்தும் சக்கரமாய்த்தோற்றுவதுபோலும் கானலானது சலமாய்வருவதுபோலும். கண்ணாடியிலுள்ள ரசாரோபத்தினால் சலமிருக்குமிடஞ்சலமின்மையாகவும் சலமின்றியவிடஞ் சலமுள்ளதாகவுந் தோற்றுவதுபோலும் ரசக்கண்ணாடிக்கெதிரிருந்தவீடுவாசல்கள் பிம்புறந்தோற்றுவதுபோலும் அஞ்ஞானத்தினால் நாமரூபமான துவிதமாயத்தோற்றியது.

இதற்குதாரணம் - தீபமோட்சாத்மானுபவதீபிகை.

ஆன்மாவைத்தான்றேகமென்று மறிந்தார் பொன்னைப்பணியென்றார் — மானதிசமுண்டாய்த்தானே-மண்ணைக்கடமாய்நிச்சயித்தா — ரானதந்ததப்படமென்றே யறிச்சயித்தாரதுபோலுமானமூடமதனாலே யான்மாத்தேகமெனவறிந்தார் * என்றும்— அறியுமணியை நெருப்பென்று மறிந்தார்போல முகிலோடச்— செறிசந்திரன்றானோடுதல்போற் சலமேயசையச்சந்திரன்று— னறியவசையுந்தன்றுற்போ லஞ்ஞானத்தாலான்மாவைப் —பிரயாதேகமாயறிந்தார் பின்னமான் வவித்தையினால் * என்றும்— அவித்தையினாலேயான் மாவிடத்தினிற் றேகமென்று — நவித்தியவந்தியாச நாமரூபமுண்டாயிற்றென்றே — யவித்தைபோய் விவேகந்தன்னாலறியவே சீவான்மாவுந் — தவித்திடாப் பரமான்மாவு மயிக்கியந்தாவரங்கள் * என்றும் - கூறப்பட்டிருப்பதினாலும் இப்போதும் ஞானதிருஷ்டியாய்ப்பார்த்தவிடத்தில் பார்க்கிறவன் பார்க்கிறது பார்க்கும்பொருளாகிய மூன்றும் பஞ்சப்புலன்களோடழிந்து ஆதித்தப்பிரகாசத்தினுள் தீபப்பிரகாசமட

கிரணதைப்போலும் சூரியப்பிரகாசத்தினாற் பூதவிருளடங்கினது போலும் அஞ்ஞானமாகிய பெருங்கண்ணை மறைத்த ஆணவப்படலம்நீக்கும் அப்போது நாமரூபாத்மகமான சகலதேகாதிப்பிரபஞ்சங்களுந்தனக்குள்ளொடுங்கத் தானே நானென்று பெயர்த்து விளங்கும் இதற்குதாரணம் - அபரோட்சாநுபவ தீபிகை - பார்க்கிறவன் பார்க்கிறது பார்க்கப்படுகிறது — மேற்சொன்ன மூன்று மெய்விடத்திலில்லையோ — மார்க்குமவிடத்திதிட்டிதான் பண்ணுவதீதார்க்குஞ்சமதிட்டியாம், என்றிருப்பதுவே பிரமாணம்.

வினா. சலபிராரத்தபோகங்களிருக்கும்மென்றும் ஞானம்வந்தாலும் பொசித்துத்தான் ஒழிக்கவேண்டுமென்றும் சகலசுருதி ஸ்மிருதிகளுஞ் சொல்லுவதன்றி நமக்குமனுபவமாயிருக்க வஸ்துத்துவமில்லையென்றுஞ்சொல்லுவதெப்படியெனில்

விடை. பிராரத்தபோகம் அஞ்ஞானதிருஷ்டியினால் அப்பியாசகாலத்திலன்றி, தத்துவஞான வுதயத்திலில்லையென்றும் அப்பியாசிக்கே பிராரத்தமன்றி ஆரூடனுக்கில்லையென்றுஞ் சுருதிஸ்மிருதிகள் சொல்லுகின்றது நமதனுபவமு மப்படியேயாம்.

வினா. அதெப்படியென்னில்.

விடை. விழித்தவனுக்குச் சொப்பனமசத்தானதுபோல யதார்த்தருணத்தில் தேகாதிகளசத்தாய்ப் போகிறபடியால் ஆரூடனுக்குப்பிராரத்தமில்லை அவனுக்கு அதீதமாகிய பிரமப்பிரகாசமொன்றுமே யேகமாய்விளங்கும் ஆதலாலந்தச்சொரூபமே நீயாகுமென்பதிற் சந்தேகவிடமிதங்களின்றி அத்துவிதசின்மாத்திரமயிருப்பாயாக இதற்குதாரணம்.

அபரோக்ஷாத்மானுபவதீபிகை - ஞானம்வந்தாலுந்தானே நவில் பிராரத்துவத்தைத் - தானதுபொசித்தறத்திர வேண்டுமென்கின்றனாஸ்திரஞ் - சாதனமப்பியாசிக்கன்றித் தத்துவஞானிக்கில்லை - யானைதத்துவத்தோனா வுதயத்தேபிராரத்தங்கள் * என்றும் — உதயத்தேபிராரத்தமென்றொன்றில்லைதேகந்தானும்-மிதயசத்தாகையாலுமதெப்படியென்னிற்றூங்கே - ஞயத்தே விழித்தவர்க்குச்சொப்பனமசத்தாகுத்தே போ - லுதயத்தேபிராரத்தமொன்றுமாண்மாவுக்கில்லை-என்றும் — இல்லையேற்சொன்னகன்ம மில்லையோவென்னலாம்மா - வல்லையேஜென்மாதித ராலையாற்சென்மாந்தந்தின் - வல்லைபிராரத்தத்தால்வருகின்றஜென்மமும்பொய்யெல்லையிற்தேகஞ்சென்மமாக்குதேயென்றுற்றேதம்,என்றும் தேகமுமுயற்கொம்பைப்போற் றேற்றிடிக்கவில்கண்டா - யேகமாமாத்துமாவி னிடத்திற்சொப்பனதேகத்த - னாகவெப்படியா

ரோப மாச்சுகோவதுபோற்போமால் — தேகமுமாத்துமாவிற்
றேதிலாரோபமாகும் * என்றும் — வாசிட்டம் — அந்நமற்
றொன்றாய் விகற்பமற்றறிவா யழிவிலாப்பழம்பொரு ளிருக்கப்
— பந்தமுற்றவரார் முத்திபெற்றவரார் பாவனைவிகற்பமே யி
னைத்துமாந் — சிந்தனைவிரிவுபற்றமாமதனைத்தீர்த்திடன் முத்திய
மனத்தின் — றொந்தலீலையினாற்றாரமாமணித்தாந் தாரமுமன்
னிதாய்த்தோற்றும் * என்றும் - இவையெனுமனைத்துஞ் சிற்க
னமாகி யிறப்பிலாப்பிரமமேமென்று — நனைவுறமனமாங் கற்
பனையில்லை தாசனும்பிறவியுமென்று — நனைவெலாம்புவன மும்
ன்றினுமில்லை யறுவகைவிகாரமுமில்லைக் — கனவுறசமமாக்கு
றிபெறுமறிவு மாத்திரங்காணுமிவ் றுளதால் * என்றும் - அத்து
விதவுண்மை - இல்லாமாயைதக்கணிலை யாருந்திர்சவாம்மம —
பொல்லாப்பிறப்பிற் பட்டதுமாய்ப் பொசிப்பிசைவுந்தவிர்ந்தது
மாய் — நல்லாரிணக்கஞ் சேர்ந்ததுமாய் ஞானவிசாரமுதித்தது
மா — யெல்லாமாம்விடடைந்ததுமா யார்க்குங்காட்டிமறைத்
திடுமே * என்றுங் - கூறப்பட்டிருக்கின்றதால் இப்படி நானு
விளங்கிய நிலையிற்கிஞ்சித்தேனுமசம்பாவனை நேரிடுமானால் அவ்
வசம்பாவனையானது குருவினாலுஞ் சாஸ்திரங்களினாலுந் நீஙமா
ட்டாது இந்த அசம்பாவனைபூர்வவனை- சுவானுபவத்தினாலே நீங்
கம்பிறந்து தீர்க்கநிலைகொள்ளாமல் தவறுகையினால் ஆத்மத்து
ரோகியென்றும் பிரமத்துரோகியென்றுஞ் சொல்லுவதன்றி இ
தைப்போக்குதற்குபோலுபவமுஞ் சாத்திரங்களுமில்லாமையி
னால் இந்தத்துரோகமொழிவது நீக்கமாட்டாதென்று நானகு
உபநிஷத்துக்கள் சொல்லுகின்றது இதற்கு உடநிஷித்பிரமாணமை
ம் * சுலோகம் * சத்தியம்சத்யம் புனஸ்சத்தியம் சம்சயாசம்ச
யா கெதினாஸ்தி — அதோஅதோ சம்சயோகதி தேவதிந்தாநா
ஸ்திநாஸ்தி — சம்சயோகதிரவுரோப்பிரவுரேவோட்பிரவுரேவா
இகபரநாஸ்திநாஸ்தி — பிலாதபவவாக்கியோ சம்சயா த்தி
நாஸ்திநாஸ்தி * என்றுங் -கூறப்பட்டிருக்கின்றதால் அசம்பா
வனைகிடமாகிய இதரசாஸ்திரங்களைப் பார்க்கலாகாது பார்த்த
போதிலும் தனது யதார்த்தமாகிய சுவானுபவதிருஷ்டி விடாம
லிருந்து பூர்வபட்சமாயெண்ணிச் சாவதானமாய்ப் பார்த்தறிய
வேண்டியது * இதற்குதாரணம் - சிவஞானநிலயம் - தம்மெ
ஞானந்தனக்குச் சான்று வந்தத் தத்துவமன்றுனராதே — வம்
மெனஞ்சமனுங் கூடமேபா லோன்வஞ்சகக் கூற்றிலுங்கொடியோ
ன் — பன்னுசாலவன்றன்றரிசனம்பரிசம் பற்று துறந்திடல் வ
ழமாம் — புன்மைத்தாலவனும் போய்நரகெய்தப் பூமியுமளா

வீமேறுவல் * என்றும் - ஞானமாயிலிங்கர்தம்முளத்தின்றி. ஞா
னிகள்வேடமேமருவி — யூனதேவளர்த்தங் குலங்டிமைதனதி
ன் பொருட்டிறுமிழிதருபனற — வினைமாஞ்சோரஞானிகணிர
யமெய்தவமெய்தியாங்குறைந்தத் — தினைமாத்திரியக் கியோ
னிடோருஞ் செலிப்பதுமரிப்புதுமாவார் * என்றும் - ஞானசி
த்தி - மறைமுதற்கலைனிபாலையுமுணர்ந்து மாசறவுணாத்துமா
னொடிந்தான் — கறையுறம்பிடயக் கருவெறுங்கடலிற் கருத்த
முதறில்விழுமாகி — லறைகருமவனைகன்மசண்டாள னறிவறவி
ருடையுமிழந்து — பொறிபிலிபவனைப் போலும்பாதகரிப் புவி
யினிலொருவருமிலையே * என்றும் - சாதிசண்டாளன் கதிபெரு
ந்தருமம் வழுவிற்கன்மசண்டாள — ஞேதியவழிக ளொன்றி
லைகளிநா லுறநிடாவெனப்பதன்மையமேத — நீதியாங்கருமம்
விட்டுஞானதத்த நின்றவர்நின்பிறழ்ந்தவர்போற் — றீதறவொ
மூசுந் சோரமேயெனக்ரூற்றிக்கதியுமதேலோ நிடுமே * என்றும்-
ஞானசாரம் - வேதவாகமங்கண்மிருதிநூல்புராணமிக்கவெக்கலை
களும்பயின்று — போதமேசொல்லிப்போத மங்குணராப்புலை
யருங் கழுதையுநிகராங் — கோதிலாவாரங்குங்குமம்பளிதங்குல
வியடமூசைட்பொதிகள — கொகரேசுமந்த கழுதையிங்கிவனி
னெடுமாம்வருஞ்சம்பின்மையிலுல் * என்றும் - கீழுறு கருமமே
யயபதத்தோன் சேர்தவமேவன்பிபாக்கடையின் — வாழியங்குய
ர்த்தோனைமறையருத்து மற்றயவப்பதமழிபி — ஞாழியபரா
சமலநிலைபெறுமா லந்தவன் ஞச்சிரமமூற்றழிந்தோன் — ஞூழுறு
ம்பதிதறுந்திலனவன்பேர் சொல்லினும்பஞ்சபாதகமே * என்
றும் - மெய்ம்மொழி - கொலைமுதலைம்பாதகமுங் கோதறவேத
மையுணர்ந்தோர்க் குண்டெங்ககன்னிற் — சலமறு சேதனவடி
வைச் சடமாய்ப்பார்க்கலிற்கொலைதன்மயக்கங்கள்ளா — மலைம
னமாதிவெனதென்றிடல் கள்ளலைவசெய்த னென்றல்பொய்
யாம் — நிலையிது றவின்பமெனவைப்பாதகமுணர்ந்தோர்நி
த்தர்சுத்தர் * என்றும் - அமிர்தசாரம் - போதத்திறுண்மை யு
ணர்வந்திருந்பொருட்டா — லேகத்தினின்றே மெனவியப்பி
மோக - மனத்தவலமாற்றுத வல்லவர்தம்மை - நினைத்தவருங்
காணுநெறி * என்றக் கூறப்பட்டிருப்பதால் அசம்பாவனைசம்
சயபாவனை விபரீதபாவனைகளற்றுத் தானேதானாய்ச்சுயம்பிரகாச
மாய்ச்சொரூபமாய் நின்மலமாய் நித்தியதிருப்தியடைந்து
ஆத்மாநுபூதியுடையான சுகசமாதியுடையவர்களே சதாநிஷ்டர்
களாய் விளங்குகின்றவர்கள் இதிற்சற்றுமையமிலை சித்தம்.

இத்தாலது-உபசாந்திப்பிரகரணம் முற்றிற்று.

நிருவாணப் பிரகரணம்,

அவதாரிகை.

முற்பிரகரணங்கள் ஐந்தினாலுஞ் சர்வமுத்தனாய்விளங்குமுபசமனம் பெற்றுச் சீவன்முத்த சாக்ஷாத்காரத் துரியானுபவநிலைத்துள்ள சீடனுக்கு மேல், அசிபதலட்சியார்த்தமான அகண்டானந்தத் துரியாதீதசுவானுபூதி மாத்திரமாய் ரமித்திருக்கும் விதேகமுத்தி யனுபவஞ் சித்திக்கும்பொருட்டு நிருவாணப் பிரகரணங் கூறுகின்றார்.

(கவி.)

உள்ளாறுசைவம்பாசுபதங்காளாமுகத்தினோடு *
விள்ளுமாவிரதம்வாமம் வயிரவமிவையாறுகுந் *
தள்ளுமப்புறத்துலோகா யுதஞ்சமண்புத்தனோடு *
மன்னுமீமாம்சஞ்சொன்வயிணவன்மாயாவாதி *
வாதமீராறிலுள்ள மதங்களின் வகுத்தநூலா *
லோதுநிற்பிராந்தியல்லா லுளப்பிராந்தியைத்தான் தீர்க்கா *
தேதினுற்பிராந்திதானுந் தெளிவிக்குநூலதனன்றி *
லாதியாம்வேதாந்தத்தின்விசாரத்தாலறிவர்தாமே. *

இதன்பொருள்.

வினா. சமயவுண்மையில் நிலைத்துள்ளசமயிகளுக்கு முத்தியின்றோவென்னில்.

விடை. சைவம் பாசுபதம் காளாமுகம் மகாவிரதம் வாமம் வயிரவம் இவ்வாறும் அகச்சமயமென்றும் லோகாயுதம் மீமாம்சம் பௌத்தம் சமணம் பாஞ்சராத்திரம் மாயாவாதம் இவ்வாறும் புறச்சமயமென்றுஞ் சொல்லப்படும் அவற்றுள் உட்சமயத்தில் சைவமானது பேறிவாகிய சிவனறிவிக்கச்சீவனறிவானென்றும் ஆண்டவனுமடிமையுமா யிருக்கவேண்டுமென்றுஞ் சொல்லும். பாசுபதமானது — பரமாணுவுபாதானமாய்நின்று அதன் புணர்ச்சியேகாரணமா யுலகம்பண்ணப்பட்டதென்றும் இறை நிமித்தகாரணமாய் நிற்குமென்றும் உயிர்களெல்லாமலங்களாற்பிணிப்புண்டு கிடக்குமென்றுஞ் சொல்லுவதன்றி ஆகமத்தின்முறைமேய ஆவாகனப்பண்ணி யருச்சித்துப் பிணிப்பாகியபாசமறுத்து அணுவாகியசீவன் சிவனாகியபதியைக் கூடுமென்றுஞ் சொல்லும்-காளாமுகம்மகாவிரதமாகிய விரண்டும் அத்திபத்தஞ் சடைமுதலானவடையாளங்கொண்டு பத்தியோடுஞ் சிவனைவழிபட்டரு

சித்த நியமந்துலையாதிருந்தால் வினையுடல்விடும்போது சிவ
லோகத்தையடையலாம் அதுவேமோட்சமென்றுஞ் சொல்லும்.
வாமமானது - மதுமாமிசங்கொண்டு சத்தியான ஸ்திரீகளைப்பூ
சித்து அவர்களோடேமுட்கொண்டு அந்தப்பேரானந்தத் தி
ருப்பதே மோட்சமென்று சொல்லும். வயிரவமானது - மயா
னத்திருந்து எலும்புதரித்து சாம்பற்பூசி யபவாசமாயிருந்துமாவ
யிரவமென்னு மோமமூண்டாக்கி நரபலிகொடுத்து அந்நரமா
மிசமு மதலைக்கபாலத்தில் வைத்துத் தத்திலாகுதிபண்ணி அம்
மதுவு மாமிசமு மருந்தாக்கொண்டிந்த பாரணமென்றும் இப்படி
செய்து முடிந்தபிறகு நிருவாணவுடலென்றுஞ்சொல்லும். மீமாம்ச
மானது பசுபலியாகம்பண்ணி அந்தயாகபலத்தாலே தேவர்க
ளாய் சுவர்க்கத்திருப்பதே மோட்சமென்றும் வேதாத்தியாயன
ம்பண்ணுஞ் சப்தம் பிரமமென்றுஞ்சொல்லும். பௌத்தமான
து இந்திரியக்காட்சியறிவே ஞானமென்றும் பூதாகாசமே யாத்மா
வென்றுஞ்சொல்லும் - சமணமாவது இந்திரியநிக்கிரகியாய்க்கா
மக்ரோதகாம விரவுணவு - ரோமமுந்தது உடலையொறுத்துச் சி
லைபதித்திருப்பதே பொன்மையில்வட்டத் தருகருடன் சேர்வ
தென்றுசொல்லும். பாஞ்சராத்திரமானது - ஆதிமூலமான விஷ்
~~ணுவே [illegible] உலகுயிரெல்லாமுண்டாக்கினதென~~
றும் அந்தமாலையே பவருக்குவடிவமென்றும் சகலதேவர்முத
லான ஜீவர்களின் சமாராதனைத்தர்ந்தீவர்கள் பெத்தம்விட்டுப்ப
ரமபதம் பெறுவார்களென்றும் சொல்லும். மாயாவாதமானது
நானென்னுமகங்காரமே பிரமம் அவருக்கு ஒருவிகாரமுமில்லை
அவர் சத்திமாயையோடேசேர்ந்தால் மாயைசெடித்ததில் உலகுபிர
ண்டுசெய்கிறதென்றும் பந்தமோட்சமில்லையென்றுஞ்சொல்லும்.
இந்தப்படியிருக்கிறதன் பாஷாண்டம் விக்ஞானம் சாருவாகம் உ
பாசகம் க்ஷணிகவாதம் அத்தாளம் ஆகமம் நிசப்பரம் பிரபாக
ரம் தார்க்கிகம் பாட்டம் சாங்கியம் யோகம் பதஞ்சலியம் விசுவ
ரூபம் பிரசாபத்தியம் காருடத்திபம் கௌமாரகம பௌராணிக
மகர்மசாஸ்திரம் என்று சொல்லப்பட்ட அனேகமதங்களுண்டு
அவர்களெல்லாம் தங்கள்தங்கள் மதாபிமானமே மேற்கொண்டு
மந்திரவாதம் ரசவாதமுதலிய சாஸ்திரங்களைத்தொடுத்து நின்று
பிராந்தர்களாயலைந்து போனார்களென்று பஞ்சதசப்பிரகரணத்
திற் சொன்னமைதிருவள்ளுவ பயபியிறல் சமயிகளுக்கு முத்தியில்லை.

வின. சிவனடியாருடனே சுவலாலாபிலேயும் பிராந்தர்களெ
ன்று சொல்லலாமோ வென்னில்.

விடை. சொப்பனத்திற் பிச்சைபெற்றுவெழும் அரசுபி

ருக்கிறவ னதிகமானாலும் விழித்தபிறகு இரண்டுசொப்பனமும் பொய்யானதுபோல இருவகைவாதிகளும் கற்பிதத்தில்தாரதம்மியமாயிருந்தாலும் ஞானம்வந்தவனைக்குறித்து இருவகைவாதிகளும் பிராந்தர்களென்றே சொல்லவேண்டும்.

வினா. இப்படிவேதாந்த விசாரத்தினால் வஸ்து நிர்ணயம்பண்ணுவதானால் அந்நவாதிகளுக்கெல்லாம் விரோதமல்லவோவென்னில்.

விடை. ஒன்றேபொருளென்ற வேதாந்திக்கும் அதைத்தானே குருடர் யானைகண்டதுபோற் கண்டிருக்கின்ற மதவாதிகளுக்கும் சற்றும்விரோதமில்லை,

வினா. ஒன்றேபொருளென்னும் வேதாந்தத்திற்கும் மற்றுள்ள மதங்களெல்லா மாயாமயமென்பதற்கும் பிரமாண முண்டோவென்னில்.

விடை. முப்பத்திரண்டு உபநிஷத்துமே பிரமாணமென்று பஞ்சதசப்பிரகரணத்தில் நிருபித்திருக்கின்றதே பிரமாணசித்தம்.

வினா. விசாரஞானத்தினால் வஸ்து நிர்ணயம்பண்ணுவதெப்படியென்னில்.

விடை, ஷட்லிங்கதாத்பரியங்கொண்டு வேதாந்தவிசாரம்பண்ணின சிரவணபலத்தினால்வஸ்துநிர்ணயம்பண்ணவேண்டும்.

வினா. அதெப்படியென்னில்.

விடை. உபக்கிரமம் உபசங்காரமென்கிறஒன்று அப்பியாசம் அபூர்வதை பலம் அர்த்தவாதம் உற்பத்திஎன்றறுவகைகளாம்

வினா, உபக்கிரமமாவதேதென்னில்.

விடை. அகண்டபரிபூரண சச்சிதானந்த பிரமத்தினிடத்தில் ரச்சுவிற் சற்பந்தோன்றினதுபோல சகலபிரமாண்டபிண்டங்களாகிய சகத்துண்டாயிற்று. இந்தச்சிருஷ்டிக்குமுன் பிரமஞ்சத்தாமாத்திரமாயிருந்ததென்று பிரதிவாதிக்கப்படுவதே உபக்கிரமம்,

வினா. உபசங்காரமாவதேதென்னில்.

விடை. உற்பத்தியான சகலசெகத்தும் அபவாதக்கிரமமாகவொடுங்குகையால் பிரமாண்டபிண்டங்களென்று மூபாதியிற்கூடஸ்தருக்கும் பிரமத்துக்குமுள்ள வுபாதிகளை யொழித்து ஏகத்துவஅயிக்கதைத் கூறப்படுவதே யுபசங்காரம் இவ்விரண்டுமொரோலிங்கமாம்.

வினா. அப்பியாசமாவதேதென்னில்.

விடை. பிரத்தியேகான்மாவாகிய நீயே பிரமமென்றெப்பது

பிரகாரமாக வுபதேசிப்பது அவ்வுபதேசம் சேதனனைச் சுட்டிச் சொல்வதினாலும் சேதனனுக்கே அச்சொரூப ஆத்தும தத்துவம் போதிப்பதினாலும் அஃது அட்பியாசம்.

வினா. அபூர்வதையாவதேதென்னில்.

விடை. அஷ்டப்பிரமாணங்களிலுள் உபநிஷத்பிரமாணத்தினாற் பிரத்தியேகாத்தும லக்ஷணத்தை யறியப்படுவதன்றி மற்றைப் பிரமாணங்களினா லறியப்படாதென்பது.

வினா. அஷ்டப்பிரமாணமாவதேதெனில்.

விடை. பிரத்தியட்சம் அநுமானம் உவமானம் ஆகமம் அருத்தாபத்தி ஐதிகம் சம்பவம் எல்லெட்டுவிதமுண்டு.

வினா. அவற்றுள் பிரத்தியட்சப்பிரமாணமேதென்னில்.

விடை. பிரத்தியட்சத்தில் சந்தேகப்பிரத்தியட்சம் விபரீதப் பிரத்தியட்சம் யதார்த்தப்பிரத்தியட்சமென்று மூன்றுவிதமாயிருக்கும். அவற்றிற் கட்டையைக்கண்டு கட்டையோ கள்ளனோவென்று சங்கற்பித்தது சந்தேகப்பிரத்தியட்சம்-கள்ளனென்றேவிகற்பித்தது விபரீதப்பிரத்தியட்சம்-கட்டையென்றறிந்தது யதார்த்தப்பிரத்தியட்சமென்று சொல்லப்படும்.

வினா இவற்றிற் சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. யதார்த்தப்பிரத்தியட்சத்திற் சொரூபிரமாணமும் வேண்டுவதின்று சந்தேகவிபரீதபுத்தி நிவிர்த்திக்கேபிரமாணங்கள்வேண்டுவதாகையால் ஆசிரியர் பிரஞ்ஞானப்பிரமமென்று இருக்குவேதமகாவாக்கியத்தை யுபதேசிக்கச் சீடனுக்கு அறிவே பிரத்தியட்சத்திற் பிரகாசிக்குமானாலதேகாதிசெகத்தெல்லாம்பிரத்தியட்சத்திற் காணப்படுகின்றதாகையால் நான்தேகமோ அறிவோ என்றதே சந்தேகப்பிரத்தியட்சம நான்தேகமென்றறிகொண்டதே விபரீதப் பிரத்தியட்சம் நான் பிரமமென்றறிந்ததே யதார்த்தப்பிரத்தியட்சம் இவ் யதார்த்தப்பிரத்தியட்சத்திற்கு வேறுபிரமாணங்கள் வேண்டுவதின்று சந்தேகவிபரீதபுத்திநிவிர்த்திக்கேஅநுமானப்பிரமாணமும்விசாரிக்கவேண்டும்

வினா, அநுமானப்பிரமாணமாவதேதென்னில்,

விடை. அநுமானத்தில் பிரதிக்கினை ஏது திருஷ்டாந்தமெனமூன்றுவிதமுண்டு அவற்றில் பர்வதங்களி லக்கினியுண்டென்பதுவே பிரதிக்கினை தூமமுள்ளது காரணமென்பதே ஏதுமகாயனசத்தி லக்கினியுண்டென்பதுவே திருஷ்டாந்தமாம்.

வினா. இவற்றுள்பிரதிக்கினையிற்சொரூபவபிப்பிராயமேதெனில்

விடை. பூதங்களானது தடித்து பவுதிகசராசரமான வோர்தேகத்தைக்குறித்த இவ்வுடம்பின் கண் ணுதிவாகிய பிரமி

ருக்குமென்று நிச்சயிப்பதேபிரதிக்கினை.

வினா. ஏதுவின் சொரூபவபிப்பிராயமேதெனனில்.

விடை. தேகேந்திரியாதிகளி லறிவுதிணாறு பகுக்கமுடியாதது தேகேந்திரியாதிகள் சடமாகையால் அறியச்சத்தியில்லை தேகேந்திரியாதிகளே யறிவதானல் சுழுத்தி மூர்ச்சை சமாதியிலிடத்து மறியவேண்டுமே அங்ஙனமறியாமையினால் இந்திரியங்களிற்பகுத்தறிவிருப்பதுகொண்டு இவ்வறிவுக்காதாரமானபிரமமொன்றிருக்குமென்பதேஏது,

வினா. திருஷ்டாந்தத்தின் சொரூபவபிப்பிராயமேதெனனில்.

விடை. ஒருகிருகத்தின் கண்ணறிவாகிய பிரமமிருப்பதினால் பஞ்சபூதவெளதிகமான சகலசராசரங்களிலுமுள்ளரும்அறிவாகிய பிரமமிருக்குமென்றறிவதேதிருஷ்டாந்தம்.

வினா. அனுமிதற்குமுக்கியப் பிரயோசனமேதெனனில்.

விடை. பிரத்தியட்சத்தி லெழும்பினபுகையைக்கண்டு அப்பிரத்தியட்சமான அக்கினியிருக்குமென்றறிந்ததுபோல தேகேந்திரியாதிகளினின்றறியுமறிவைப் பிரத்தியட்சத்திற்கண்டுயாவராலுமறியப்படாததாய் அவாங்மனகோசரமானபிரமமொன்றிருக்கிறதென்றறிவதே முக்கியப்பிரயோசனமென்று சொல்லப்படும். பூதபவுதிகசராசரங்களிலும். அறிவாகியபிரமமிருக்கிறதென் றனுமானத்திற்காணப்பட்டதன்றிப் பிரத்தியட்சத்திற் காணப்படவில்லை அஃதென்ன லட்சணமுடையதாயிருக்குமோவென்ற புத்திவிருத்தி பரிகரிக்கவேண்டிஉவமானப்பிரமாணமும்விசாரிக்கவேண்டும்.

வினா. உவமானப்பிரமாணமாவதேதெனனில்.

விடை. மரைமிருகமென்றொன்றுண்டென் றுகேள்விப்பட்டவன் அதைஅறியவேண்டிய ஆவலினாலறிந்தபேர்களை வினவ அவர்களுமேகதேசதிருஷ்டாந்தமாய் இந்தப்பசுப்போ லிருக்குமென்பது உவமானப்பிரமாணம்.

வினா. இதிற் சொரூபவபிப்பிராயமேதெனனில்.

விடை. பிரமத்தையறியவிரும்பினவன் பிரமசொரூபமெப்படியிருக்குமென்று பெரியோர்களை வணங்கிக்கேட்க அவர்கள் அதற்குருவமையினாலும் ஏகதேசதிருஷ்டாந்தத்தினாலுமறிவிக்கவேண்டியதினால் அந்தப் பிரமம் சச்சிதானந்தசொரூபலட்சணமாய் இந்தப்பூதாகாசம்போல வியாபகப்பட்டிருக்குமென்றுசொல்ல ஆகாசலட்சணமென்னவென்றுவினவ ஆகாசம் நான்குபூதங்களுக்குமாதாரமாய் தானொன்றிலும் பற்றிருக்கையாலும் நான்குபூதங்கட்கும் ஆகாசத்தைத்தவிர விருப்பிடமின்மை

யாலும் நான்குபூதமுமாகாசமே யாதாரமாயிருந்ததுகொண்டு
அந்த ஒருஆகாசத்தையே கடாகாசம் மடாகாசம் சலாகாசம் ம
காகாசமென்றுஉபாதிவசத்தாற்கண்டு கூறப்பட்டபோதும் அவ்
வாகாசத்திற்கு இந்நான்குபூதங்களைக்குறித்துவந்தவுபாதிகள் ச
ற்றுமின்றி இந்நான்குபூதங்களையுங் கவளீகரித்ததிக்கிரமித்து அ
வயவமின்றி நிரவயவமாயிருக்குமென்பதைக்கேட்டு அந்தப்பிரம
மும் இவ்விலக்கணமுடையதாயிருக்குமென்று பரோட்சமாயறி
ந்ததே அபிப்பிராயம் இவ்விலக்கணமுடைய பிரமமானது இரு
க்குமிடந்தெரிய வரவில்லையேயென்ற புத்திவிருத்தி பரிகரிக்க
வேண்டி ஆகமப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

வினா. ஆகமப்பிரமாணமாவதேதென்னில்.

விடை. சொர்க்கலோகத்தில் அமிர்தமிருக்கிறதென்றும் காசியில
ரிச்சந்திரன் மயானங்காத்த பரங்காலின்னமிருக்கிற
தென்று மாகமஞ்சொல்லக்கேட்டு அதில்நிச்சயபுத்திவ
ந்ததே ஆகமப்பிரமாணம்.

வினா. இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. ஏகமேவாத்விதீயம் பிரமமென்கிற சுருதிவாக்கியமும் மே
லிரிற் புறத்திறுள்ளின் மேலொடு கீழிற்றிக்கில் வானில்
வையகத்திலெங்கும் யானில்லாவிடமுமில்லையென்றவஸ் மிருதிவாக்
கியமும் சோதிரூபிருந்தாற் பிரமமதாமென்றவுபநிஷத் வாக்
கியமும் பிரமாணமாகச்சொல்லுஞ்சுரோத்திரவிடயமாய்க்கேள்வி
யுற்ற தன்னிடத்தில் அந்தச்சச்சிதானந்த சொரூபலட்சணமிரு
க்கிறதேயென்று விசாரிக்குமளவில் ஜென்மாந்தரகன்மத்தாலிந்த
ச்சரீரம் இப்போதுவந்ததென்றும் இப்போதுசெய்கிறகன்மத்
தின் விளைவருகாலத்திலும் தேவமனுஷ்யதிரியக்காதிஜென்மங்கள்வ
ருமென்றும் அநுபவமிருப்பதால் சத்தாச்சுது மேலும். திரிகா
லத்திலுமுண்டான சரீராதிகளழிவதும் அவற்றுள்வரும் சுகதுக்க
மாறுவமான ஹானிவிருத்திலாபாலாபங்களையும் அறிவாயிருந்த
றிகின்றதால் சித்தாச்சுது - மேலும். சத்துசித்துவேறென்
று பிரிக்கப்பார்க்கவிரண்டில்லாமையினுலானந்தமாச்சுது பி
ன்னும் அறிவானதுபற்றாயிருக்க தேகேந்திரியாதிகரணங்கட்கு
மவ்வறிவைத்தவிரவிருப்பிடமின்மையாலும் அறிவேயவைகட்கா
தாரமுமாயிருப்பதினாலும் இந்தத்தேகேந்திரியாதிகரணங்கட்கு
மவ்வறிவேயாதாரமாயிருந்ததுகொண்டு அவ்வறிவுதானே கூட
ஸ்தனென்றுஞ் சிவனென்று மீசனென்று முபாதிவசத்தினாலும்
பின்னமாகக்கண்டபோதும் பரிச்சின்னம்போலுங்காணப்பட்ட
விடத்திலும் அவ்வறிவேபிரமத்திற்குந்தேகேந்திரியாதிகளைக்

ருசித்துவருமுபாதிகளின்றித் தேகேந்திரியாதி காணசேவனையுஞ் சுளீகரித்தறிக்கிரமித்தும் அவயவமின்றி நிரவயமாயிருப்பதினுலும் முன்பரோட்சமாயறியப்பட்ட சச்சிதானந்தசொரூபத்தைத் தானென்று அபரோட்சமாயறிந்ததே ஆகமப்பிரமாணநிர்ணயம். முற்கூறியமூன்றுபிரமாணங்களினுலும் வஸ்துநிச்சயங்கூடாது. இந்தப்படி எப்போதுஞ் சச்சிதானந்தசுபாவமாயிருக்க முன் பெத்தத்திசையி லிந்தலட்சணமறியாமற் போனதென்னவென்று வருகிறபுத்திப்பிரமத்தைப் பரிகரிக்கும்பொருட்டு அருத்தாபத்திப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

வினு. அருத்தாபத்திப்பிரமாணமேதென்னில்.

விடை. திருஷ்ட வருத்தாபத்தியென்றுங் கேள்வியருத்தாபத்தியென்றுமிரண்டுவிதம் இதில் திவசத்தியுபவாசியென்றுபேரிட்டிருக்கிற ஒருவனது தேகபீனத்தைக்கண்டு இவனேகாந்தத்திற்போசிப்பனென்றறிகிறதே திருஷ்டவருத்தாபத்தி.

வினு. இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்,

விடை. முன் பெத்தத்திசையிலுஞ் சச்சிதானந்தமென்றறிந்துந் தன்னைத்தெரியவொட்டாமல் மறைத்ததே யருத்தாபத்தி-அதற்குச் சகலபிராணிகளுக்கு-மநுபவமாக நான் பூர்வஜென்மத்திற்செய்பாதிற புண்ணியபலத்தினுல் இந்தச் சென்மத்திலும் நல்லஜாதிகுலகோத்திர வருணதேகரூப ஐசுவரியமனைபுத்திரம்பத்துமுண்டாயிற்றென்றும் இப்போது செய்யும் புண்ணியகன்மத்தினுல் இனிமேலுந் தேவமனுடராய்ப் பிறப்பேனென்றும் முன்சென்மத்திற் பொழுத்துவைக்காத பாவியாகையால் இப்போதுந் தரித்திரனுயிருக்கிறேன் இந்தச்சென்மத்திலும் ஒருவருக்குங்கொடாத தரித்திரனுயிருப்பதினுல் வருஞ்சென்மத்திலுந் தரித்திரனுய்ப்பிறப்பேனென்றும் இன்னவருடம் இன்னமாதம் இன்னதினநட்சத்திர யோககரணவாரத்திற் பிறந்தேனென்றும் இத்தனைட்டுஞ் சவுக்கியத்தை யநுபவித்தேன் இனிபொல்லாத கஷ்டம் வரப்போகிறதென்றும் அந்தக்கஷ்டத்துக்குமே லிந்தச் சுகிதிக்காதென்றும் இப்படி திரிகாலங்களினு முண்டான ஆனிவிருத்தி சுகதுக்கலாபாலாபமானவமானங்களையு மறிந்திருக்கிறதினுல் தான் சச்சிதானந்த லட்சணமாயிருந்துந் தெரியவில்லை என்றதனாற் ஞானம், அதுவே யஞ்ஞானமானுல் தெரியவில்லையென்றறிவு வரக்கணக்கில்லை ஈதறிவானதென்றுல் அப்பேயென்றுமஞ்ஞானம் வரக்கணக்கில்லை ஆகையால் இந்த அருத்தாபத்தியே சுத்தயான தன்னைத்தெரியவொட்டாமறைத்த நிலைமைபெற்றவஞ்ஞானமா

நித்தியவுபவாசியென்பவனுடைய சரீரமிளையாததுகண்டு ரகசிய த்திற்போசிப்பனெனக்குறிவதுபோல நான்சச்சிதானந்த லட்சண மென்பது தோற்றுகிருந்தாலுந் தன்னனுபவத்திறனாலுஞ் விசா ரித்தறிந்தால் தாம்ஸச்சிதானந்தசொரூபமாவன் இதுவே திரு ஷ்டவருத்தபத்தி. இப்படி சச்சிதானந்தசொரூபமென்பது அ னுபவமாயறிந்திருந்தும் முன்போலவே நாமரூபாதிகள் தோற் றுவதன்றி அந்த லட்சணமிருந்தால்தோற்றுதாமென்று வருகிற புத்திவிருத்திபரிகரிக்கும்பொருட்டு கேள்வியருத்தாபத்திப் பிர மாணமும் விசாரிக்கவேண்டும்.

வினா கேள்வியருத்தாபத்தியாவதென்னவென்னில்.

விடை. ஓர்புருடன் அடுத்தகிராமத்திலிருக்கும் ஒருவனைக்காண வேண்டிவந்து அவன்மனைவாயிலின்று இந்தககிரகவாசி யிருக்கிறாராவென்று அம்மனையிலுள்ளவர்களைவினவ அவனில்லை யென்றுசொன்ன அபாவசத்தங்காதிற்கேட்டும் அவனிறந்துபோ கவில்லை அன்னியதானங்களிற் போயிருப்பானென் றறிந்துகொ ண்டதே கேள்வியருத்தாபத்தி.

வினா. இதிற் சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. [illegible] லையென்றறிந்த வறி வுமாத்திர மிச்சமாயிருக்கக்கண்டதேஇல்லையென்றகே ள்வியருத்தாபத்தியிற் பிரயோசனமாம். அறிவேவடிவாயிருப் பதாத்மாவாகும் அறிபொருளைக்குறித்தே யறிவென்றபேரிருக் கிறதாகையால் அறிபொருளாகிய ஈசுவரசகத்தும் அதன்கா ரணமானமாயையும் அறிவிபாயிருக்கவேண்டும் அப்போது அது களுக்கு நித்தியத்துவம் வருமேயென்னும் புத்திவிருத்தி பரிகரி க்கும்பொருட்டு அபாவப்பிரமாணமும் விசாரிக்கவேண்டும்.

வினா. அபாவப்பிரமாணமாவதேதென்னில்.

விடை. பிராகபாவம் பிரத்வம்சாபாவம் அன்னியோன்னியா பாவம் அத்தியந்தாபாவம் என நான்குவிதம்.

வினா. இவற்றள் பிராகபாவமாவதேதென்னில்.

விடை. குலாலன் சக்கிரத்திருக்குமிருத்திகாபிண்டத்தைப்பார்த் து இதிற்கடமில்லையென்றது பிராகபாவம்.

வினா. இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. கடமில்லையென்ற அபாவத்திற்குஅறிந்தவமனைத்தற் பக்கனாயிருந்தும் நித்தியத்துவஞ்சித்திக்கவில்லை. எப்ப டியென்றால் குலாலன் சக்கரத்தைச்சுற்றி மிருத்திகாபிண்டத்திற் கைவைத்தபோது முன்னில்லாதகடம் உற்பத்தியாயிற்று ஆகலா ல்முன்னில்லையென்றவபாவத்திற் குறித்துவமிருந்தும் அநித்தி

யத்துவஞ் சித்திச்சிறது அதுபோல மாயையு மதன்காரியமான சிலேசராசகத்தும் அநாதித்துவமென்று சிறிதுசாஸ்திரங்களிற் கூறப்பட்டிருந்தாலும் விசாரஞானமான விருத்திஞானத்தினாற்றகிக்கப்பட்டு அனித்தியமாய் விடுமென்பதே பிராகபாவப்பிரயோசனமாயிற்று. விருத்தியிற்பிரதிபலிக்கும் விருத்திஞானத்தினாற்றகிக்கப்பட்டமாயையும் அதன் காரியமான சிலேசராசகத்தும் விருத்திஞானமொழிந்தவிடத்து முன்போலப் பிரத்தியட்சமாய்த் தோற்றுமேயென்ற புத்திவிருத்தி பரிகரிக்கும்பொருட்டு பிரத்தொம்சாபாவமும் விசாரிக்கவேண்டியது.

வினா, பிரத்தொம்சாபாவமாவதேதென்னில்.

விடை. ஓர்தரித்திரனையாசகன் ஓர்கடமே ஆசத்தியாய்க்கொண்டு பாவவசத்தினால் மனைகடோறு மிரந்துண்ணுங்காலத்தில் அம்மனைகளிலுள்ளசிறுவர்கள் அஞ்ஞானசேஷ்டவுச்சாகத்தினால் கற்கொண்டெறிய அவ்விரப்பன் கடவாஞ்சையினால் அக்கல்லெறிகளைத்தும் தன்சரீரத்திற்றாங்கி மறித்துஞ் சகிக்கமாட்டாமல் அவனுக்கு விரத்திதோன்றி அக்கடத்தை ஓர்கற்பாறைபின்மோத அக்கடமுடைந்து சில்லுகளாய்ச் சிதறிவிட்டது பிறகு கடவாஞ்சையினால் அவன் பிராண்டுபுரண்டழுதாலும் உடைந்தகடம்வரமாட்டாதென்பதே பிரத்தொம்சாபாவம்.

வினா. இச்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. முன்விசாரஞானத்தாற் றகிக்கப்பட்டமாயையும் அதன் காரியமான சிலேசராசகத்தும் மீண்டு கற்பகாலத்திலும் உண்டாகமாட்டாதென்றறியவேதயபிப்பிராயம். கடமுடைத்தும் அதன்காரியமதைத்து காரணமாகாமல் கடவோடென்றகாரியவுபாதிகாண்பதுபோல விருத்திஞானத்தாலழிந்த மாயையும்அதன்காரியமானசிலேசராசகத்தும் காரணமானபிரமமாத்திரமாய்ப் போகாமல் மாயாகாரியமான சிலேசராசகத்தென்று அறிவிற்றோற்றக்கண்டிருப்பதால் அந்தமாயையும் வஸ்துத்துவயமாயிருக்கும் ஆகையால்பிரமத்தில்மாயையுண்டு மாயையிற்பிரமமிருக்குமென்ற புத்திவிருத்தி பரிகரிக்கும்பொருட்டு அந்நியோந்நியாபாவமும் விசாரிக்கவேண்டியது.

வினா. அந்நியோந்நியாபாவமாவதேதென்னில்.

விடை. படத்திற்கடமும் கடத்திற்படமுங் காலத்திரயத்திலுமில்லையென்றதுவதே அந்நியோந்நியாபாவம்.

வினா. இதிற்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. அத்துவிதம் அவிநாசம் உவமானரகிதம் அவாங்மனோகோசரம் மவுனநீதம் அத்தியாதிப்பிரியலட்சணம் ஆகி

யகுணங்களையுடையதே பிரமசொரூபம் - ஜடம் நிச்சயம்மன வாக்குக்கோசரம் அநிர்வசனம் ஆகிய குணங்களையுடையதே மாயாசொரூபம் அம்மாயாசொரூபத்தில் பிரமசொரூபமில்லை -பிரமசொரூபத்தில் மாயாசொரூபமில்லையென்றறிகிற திடம்வந்ததே யபிப்பிராயம். இந்த நாமரூபமென்றும் மாயையென்றும் நினைவில்தோற்றுகிறது அந்தமாயை யில்லாவிட்டால் நினைவில் தோற்றமாட்டாது ஆகையினால் மாயையுமிருக்குமென்றுவருகிற புத்திவிருத்தியைபரிகரிக்கும்பொருட்டு அத்தியந்தாபாவமும்விசாரிக்கவேண்டியது.

வினா. அத்தியந்தாபாவமாவதேதென்னில்.

விடை. ஒருவருடைய தலை சொப்பனத்தில் நாசமாகவும் தன்னைத்தகனஞ்செய்யவும் மறுநாள்காடாற்றி அஸ்தியெடுத்துக் கும்பத்திலடக்கிக் கங்கையில் விடவுங்கண்டுபிறகு விழித்த சாக்கிரத்தில் மனத்தால்நினைக்க வாக்கால்சொல்லவருமே; மெய்யாகாமற் பொய்யென்றறிவதே அத்தியந்தாபாவம்.

வினா. இந்தச்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. மாயையென்றும் பிரபஞ்சமென்றும் நாமரூபங்களாய்ச்சொன்னாலும் நினைத்தாலும் சுத்தமித்தைப்போல எப்படியென்றால் ஆகாசத்தில் தாமரைப்பூத்ததென்று நினைவில் தோற்றினாலும் அது எப்படியில்லையோ அதுபோல மாயையென்று நினைவில்வந்தாலும் காலத்திரயத்திலுமில்லையென்ற திடம்வந்ததே யபிப்பிராயம். மாயையென்பது காலத்திரயத்திலுமில்லாதிருக்கச் சகல தேகிகளுக்கும் நாளுமாய் பிரசித்தமாய் உண்டுபோலத் தோற்றுகிறதற்குக் காரணமேதென்று வருகிறபுத்திவிருத்தி பரிகரிக்கும்பொருட்டு ஐதிகப்பிரமாணமும்விசாரிக்கவேண்டியது.

வினா. ஐதிகப்பிரமாணமாவதேதென்னில்.

விடை. ஒருவனொரு ஆலமரத்திலேறி இலைபுசித்தும் தனக்குப் போதுமானமட்டும் பறித்துக்கொண்டு இறங்குஞ்சமயத்தில் வேறொருவன்வந்து ஆடா பயித்தியக்காரா இந்தமரத்தில் மகா பயங்கரமான பசாசிருக்கின்றதே இதனிடத்தில் ஒருவருஞ்சேருகிறதில்லையே நீ இதிற்காலைவைத்தேறலாமாவென்ற சத்தங்கேட்டமாத்திரத்தில் மனத்திற்பயமும் சரீரத்தில்நடுக்கமுமுண்டாய் பொடித்தவிறகும் பறித்த இலைகளையுமெறிந்துவிட்டுமரத்திலிருந்திறங்கக்காலெடுக்குமாறிக் கீழேவிழுந்து மூர்ச்சையாவதே ஐதிகப்பிரமாணம்.

வினா. இந்தச்சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. மாயையும்மாயாகாரியங்களும் காலத்திரயத்திலுமில்லாத

சுத்திமித்தையானாலும் பிரத்தியட்சமாய்க்காணுகை யசுடி விஷயம் அன்னியன்சொற்கேட்டமாத்திரத்தில் இருக்கிறதென்று சத்தியபரிவர்த்தனைபோல அந்தமாயாகாரியமான தேவையசகு திதுக்கள்பிரசித்தமாயுண்டுபோல அசம்பாவனையாகிய பிராந்தி மூலப்பிரமையால் தோற்றமென்றறிகிறதே யபிப்பிராயம். மாயையென்பதில்லையானால் மாயாகாரியமான நாமரூப சகத்தென்றும் சத்தபரிச ரூபரசகந்தகாரணமென்றும் அனேகவிபரீதங்கள் தோற்றுகிறதற்குக் காரணமேதென்றுவருகிற புத்திவிருத்திபரிகரிக்கும்பொருட்டு சம்பவப்பிரமாணமும் விசாரிக்கவேண்டியது

வினா. சம்பவப்பிரமாணமாவதேதென்னில்,

விடை. ஆயிரமென்னுங்கணக்கில் ஒன்று இரண்டு அஞ்சு பத்து நூறென்னுங்கணக்கு மிருக்கிறதென்றறியுமதே சம்பவப் பிரமாணம்.

வினா. இதிற் சொரூபவபிப்பிராயமேதென்னில்.

விடை. சத்தமென்றறியும்போது அவ்வறிவே சத்தரூபமாயிருக்குமன்றிப் பரிசரூபரசகந்தகாரண தேகங்களுமில்லை-பரிசமென்றறியும்போது அவ்வறிவே பரிசரூபமாயிருக்குமன்றிச்சத்தரூபரசகந்தகாரணதேகங்களுமில்லை - ரூபமென்றறியும்போது அவ்வறிவே ரூபமாயிருக்குமன்றிச் சத்தபரிசரசகந்த தேககாரணங்களுமில்லை - ரசமென்றறியும்போது அவ்வறிவே ரசரூபமாயிருக்குமன்றிச் சத்தபரிசரூபகந்தகாரண தேகங்களுமில்லை-கந்தமென்றறியும்போது அவ்வறிவே கந்தரூபமாயிருக்குமன்றிச்சத்தபரிசரூபரசகாரண தேகங்களுமில்லை ஆகையால் இந்திரியசபளிதமாய் சத்தபரிசரூபரசகந்தங்களாய்த் தோற்றினவெல்லாம் அவ்வறிவாகியபிரமமே யதுவதுவாகத்தோற்றியது ஆனபடியினால் அறிவாகியபிரமத்தில் அனேகம்போல் அறிவாகியதனக்கே தோற்றலாம் அன்றியும் தான்சர்வசத்திமானாகலின் அனேகருமிருக்கலாம் அப்படியிருக்கையால் சர்வாதாரபூரணநிருபாதிகப்பிரமமேயிருக்கிறதென்றறிகிறதே யபிப்பிராயம் இதுவேயபூர்வதை.

வினா. பலமாவதேதென்னில்.

விடை. இந்தச்சகவஸ்துக்களில் ஒருவஸ்துவையறிந்த மாத்திரத்தில் சகலமுமிப்படியே யிருக்குமென்றறிவதுபோல ஆத்மஞானமறிந்தமாத்திரத்தில் சகலபிரமாண்ட பிண்டங்களினுந் தானாய்விளங்கும் பிரமமேநாமென்றும் நாமே ஆசமசொரூபமாய் விளங்குவதென்றும் இந்தத்தேகேந்திரியாதி சகலசகத்தும் பிராரத்தமுள்ளமட்டும் மித்தையாய்த் தோற்றுகின்றதுபிரா

ரத்தநாசத்தில் சர்வாத்மகமாய்த்தோற்றுமல் அத்தொய்தாத்ம சொரூபமாத்திரமாய்ப் பிரகாசிக்குமென்றும் பிரதிவாதிக்கப்படுகிறதே பலம.

வினா. அர்த்தவாதமாவதேதென்னில்.

விடை. எந்தவஸ்துவைக்கேட்டமாத்திரத்தில் கேட்கப்படாதவஸ்து கேட்கப்படுகின்றது எந்தவஸ்துவை மனனம்பண்ணினமாத்திரத்தில் மனனம்பண்ணப்படாதவஸ்து மனனம்பண்ணப்படுகின்றது எந்தவஸ்துவையறிந்தமாத்திரத்தில் அறியப்படாதவஸ்து அறியப்படுகின்றது அதுவே பஞ்சகிர்த்தியங்கட்காதாரபூதமானகர்த்ருத்வமாய் விளங்குவதென்றும் பிரதிபாதிக்கின்றதே அர்த்தவாதம்.

வினா. உபபத்தியாவதேதென்னில்.

விடை. கடத்திற்குமண்ணும் தந்துவுக்கு லண்டும் ஆபரணங்களுக்கிரும்பும் காரணமாவதுபோல தோற்றப்பட்டநாமரூபசெகத்துக்குப்பிரமமே காரணமென்று செகத்துக்கும் பிரமத்துக்கும் அபின்னத்துவம்பிரதிபாதிக்கின்றதே உற்பத்தி இந்தஷட்பிரமாண ஷட்லிங்கதாற்பரியங்களைச் சற்குருசாஸ்திரமுகனிலேயறிந்துகொள்ளப்படுகிறதேசிரவணம்.

வினா. மனனமாவதேதென்னில்.

விடை. வேதாந்தசாஸ்திரங்களினாற் சிரவணம்பண்ணின அத்துவிதமான பிரத்தியகாத்மசொருபத்தை அனுகூலமானயுக்தி விருத்திபாவனைப்பட்டு நிச்சயிப்பதுமனனம்.

வினா. நிதித்தியாசனமாவதேதென்னில்.

விடை. விஷாதமயமான தேகேந்திரியாதிகளைச் சாக்ஷிகமான அகண்டாகாரவிருத்தியோடுகூட்டி மலையிறுச்சியிலிட்டதயிலதாரைபோல இடைவிடாமல் அகண்டாகாரவிருத்தியிலுத்சதாகிபாவித்திருக்கிறதே நிதித்தியாசனம், இப்படிஷட்லிங்கதாற்பரியத்துடன் கேள்விப்பட்ட சிரவணத்தில் ஒருவனுக்கு எதுவரையில் அஞ்ஞானபுத்திநீங்கவில்லையோ அதுவரையிலுஞ்சிரவணம்பண்ணவேண்டும். இப்படி சிரவணம்பண்ணிநிச்சயித்தபொருளில் எதுவரையில்சம்சயபுத்தி நீங்கவில்லையோ அதுவரையிலுமுயுக்திசாக்ஷியநுமானவுதவிகளால் மனனம்பண்ணவேண்டும். இப்படிமனனம்பண்ணித் திடங்கொண்டவறிவில் எதுவரையில்யானென்னும் விபரீதபுத்திநீங்கவில்லையோ அதுவரையிலும் மந்திரயோகமுதலியபலவகையோகப்பியாசவுதவிகளால் நிதித்தியாசனம் பண்ணவேண்டும்.

வினா. அர்த்தமென்னில்.

விடை. அபரோக்ஷ சாக்ஷாத்காரசிரவணத்தில் குதர்க்கங்களுட
ன்கூடியதிரிசயமானது எவ்வளவுகாலநாசப்படவில்லை
யோ அவ்வளவுகாலமும் மஞ்ஞானம்போகாது ஆகலால்மோக்ஷதா
கங்கொண்டவன்தியானசமாதிகளை பவிப்பண்ணவேண்டியது.

வினா. அந்தத்தியானசமாதிகளெத்தனை விதமென்னில்.

விடை. சவிகற்பசமாதியென்றும் நிருவிகற்ப சமாதியென்று
மிரண்டுவிதமாயிருக்கும்.

வினா. சவிகற்பசமாதியாவதேதென்னில்.

விடை. ஞாதுரு ஞானம் ஞேயம் என்னுந்திரிபுடிகளுண்டு அவ
ற்றுள் தேகமே தானென்பது அசுத்தஞாதுரு அகமேவ
தானென்பது சுத்தஞாதுரு இந்தஞாதுருவே ஞானமென்னும
னத்தோடுகூடி ஞானேந்திரிய வழிகளால் விருப்புவெறுப்பென்
றறிவது அசுத்தஞானம் - இந்திரியவழிகளினறிவாகிய அசுத்தஞா
னத்தைப் பொய்யறிவென்றறிந்ததே மெய்ஞ்ஞானமாகிய
சுத்தஞானம் - பூதங்களான துதடித்த பவுதிகங்களாய் எதிரோசத்
தாதிவிடயங்களாய்த்தோற்றுவது அசுத்தஞேயம். இந்தச்சத்தா
திவிடயங்களனைத்தையுஞ் சொருபமாத்திரமாய்க்காண்பதே சுத்த
ஞேயம்-ஆகலால்இவ்வசுத்தத்திரிபுடிகளைலயம்பண்ணிச்சுத்தத்தி
ரிபுடிகளுக்கு லயம்வராதபடி ஞேயமாயிருக்கிறகேவலப்பரப்பிர
மவஸ்துவினிடத்தில் மனம்நிலைத்துத் தான்பிரமாகாரமாயிருப்
பதேசவிகற்பசமாதி.

வினா. அதெப்படியென்னில்.

விடை. மண்ணுலாகிய பாண்டம் மண்ணாயிருந்தும் பார்க்கிறவ
ர்கண்களுக்குப் பாண்டமென்றெப்படிகாணப்படுகின்ற
தோ அதுபோலஞாதுருஞான ஞேயங்களான சுத்தத்திரிபுடியா
னமனமும் சத்தாகியசின்மாத்திரமான பிரமத்தினிடத்திலே சின்
மாத்திரமாகவேவிளங்குகின்றதாதலால் சவிகற்ப சமாதியென்
றுபெரியோர்கள்சொல்லுவார்கள்.

வினா. நிருவிகற்பசமாதியாவதேதென்னில்.

விடை. ஞாதுரு ஞானஞேயங்களான சுத்தத்திரிபுடியென்கிறம
னோவாசனையுநீக்கி ஞேயமாத்திரமான பரப்பிரமசொ
ரூபந்தானானதே நிருவிகற்பசமாதி.

வினா. அதெப்படியென்னில்.

விடை. அப்பிற்கரைந்தவுப்பானது உப்பென்றுவேறாகாமல்அப்
புமாத்திரமாயிருந்ததுபோல - பிரமாகாரமான மனம்
பிரமமாத்திரமாய்நிலைத்துத்திரிபுடிமுதலான சங்கற்பவிகற்பங்க
ளின்றிச்சன்மாத்திரமான பிரமசொருபமாய் விளங்குகின்றதா

ல் நிருவிகற்பசமாதியென்று பெரியோர்கள்சொல்லுவார்கள். இவ்விருவகைச்சமாதிகளில் மனோபேதமிருப்பினும் சமாதிசுழுத்தியிரண்டிலும் மனோநாசஞ்சமமாய்க் காணுகையாலும்சுழுத்தியில் அஞ்ஞானங்காணப்படுகையினாலும் சமாதியில் அஞ்ஞானங்காணப்படாமையினாலும் அஞ்ஞானமும் அஞ்ஞானகாரியமுஞ்சந்தேகவிபரீதமு மற்றப்பிரபஞ்சத்திற்கு ஒருவிக்கினமுமின்றிச்சதாசொருபானந்தமுண்டாகும்பேருண்டாகையாற்சமாதியானவன் அகப்புறமென்னும்பேதத்தால் அறுவகைப்பட்டிருக்கின்ற நிர்விகற்பசமாதிகளிலும் அதிகம்அப்பியாசப்படவேண்டும்.

வினா. அறுவிதசமாதிகளாவதேதெனில்.

விடை. அந்தர் திரிசயானுவித்தம் அந்தர்சத்தானுவித்தம் அந்தர்நிருவிகற்பம் பாகிய திரிசயானுவித்தம் பாகிய சத்தானுவித்தம் பாகியநிருவிகற்பம் என அறுவகைகளாம்.

வினா. அந்தர் திரிசயானுவித்தமாவதேதெனில்.

விடை. அறிவுதானே திரிசயங்களாகிய காமக்குரோதாதிவிருத்தியிற்கூடிஅவ்விருத்திகட்குச் சாட்சியாகத் தானேயிருக்கிறசொருபானுசந்தானம் பண்ணுகிறதே அந்தர்திரிசயானுவித்தம் மேலும் நானென்கிற அகங்காரக்குரோதாதிவிருத்திகளைத் தமதுவிருத்தியாற்படுகிறதோ அந்தத்திருக்குரூபமானவறிவுக்கு சங்காரமுதலியகாமாதிகளே திரிசயங்கள் இந்தக்காமாதிவிருத்திகளையும் அவிகாரியாகப்பார்க்கிறசாட்சியாகத் தன்னைப்பார்க்கிறவன் நிர்விகாரியனாகவேயிருப்பன் இந்தக்காமாதிவிருத்திகட்கெல்லாம் நான்சாட்சி என்றுமிந்தவிருத்திகள் காணப்படுகிறதென்றுதன்னைச்சாட்சியாயறிந்தவன் சாட்சியாகவேயிருப்பன் ஆதலாற்றிரிசயமாயிருக்கிறதேகாதிசகத்தையும் ஆத்மாவாயிருக்கிற தன்னிடத்திலே லயம்பண்ணவேண்டும்.

வினா. லயம்பண்ணுமனுபவமெப்படியெனில்.

விடை. நான்தேகமும்பிராணாதிவாயுக்களும் அகங்காரமும்மனமும்புத்தியுஞ்சித்தமும் ஞானேந்திரியங்களுங் கன்மேந்திரியங்களுமல்ல இவைகளுக்கெல்லாஞ்சாட்சியாயும் நித்தியமாயுமிருக்கிறபிரத்தியகாத்மசொருபமேநான் நானேஸ்தூலமுஞ்சூக்குமமும் வளர்ந்தவனும் குறைந்தவனும்பாலனும் யௌவனனும் விருத்தனுங்குருடனும் நொண்டியும் முடக்கனுமவந்தவனும்போனவனும் கொன்றவனும் கொல்லப்படாதவனுமசச்சாவுங்கேடாக்காவுஞ் செய்கிறவனுஞ் சொல்லப்படுகிறவனும் யோகியும் போகியுந் தியாகியும் ராகியும் விராகியும் காமியுங் க்ரோதியும் லோபியும்பத்தனும் முத்தனுமல்ல இது

க்களுக்கெல்லாஞ்சாட்சியாகிய நித்தியமாகியமிருக்கிற பிரத்தியே
காத்மசொரூபமேநான் - நானுடம்பிரசங்கியுமல்ல வெளிப்பிர
சித்தியனுமல்ல அறியப்படுகிறவனுமல்ல அறியப்படாதவனுமல்ல
இந்தத்தேகேந்திரியாதிகளுடைய கூட்டரவுமெனக்கில்லை புண்
ணியபாவங்களுமில்லை பசிதாகமுதலான ஷிராமிகளுக்குமப்பாற்
பட்ட சதாவிமுத்தமான கேவலசித்துருபமேநான் என்று தன்
சொரூபத்தைத் தானேகண்டுகொண்டு காணப்பட்ட திரிசயங்க
ளெல்லாம் தனக்குள் லயம்பண்ணிக்கொண்டிருக்கவேண்டும் பி
ராந்தியினாற் காணுகிறவிபரீதபாவனைகளை வர்ச்சிக்கிறீர்.

வினா. அதெப்படியென்னில்.

விடை. செகத்விபரீதபாவ நிவர்த்தியம்பிரகாசமான ஆத்மசொ
ரூபமானதே நானென்று கருதிக்கொண்டிருக்கவேண்டு
கின்றபடியால் சாதனைசெய்யவேண்டுகிறவனுக்கு இந்தச்சமாதி
சித்திக்கும் இல்லாவிட்டாற் சித்தியாகாது ஆகையாற்சாதனையை
யொடுக்கவேண்டும் இதுவன்றி இருந்தசீக்கிரத்திலும் பாவஷயி
லும் இந்த அகண்டசச்சிதானந்தசுரூபமுஞ் சித்திக்கமாட்டாது
அநுசித்திக்கும்பொருட்டு அத்தியாதேப்பிரியமானதன்னிடத்தில்
அகங்காராதிவிஷயங்கண்விகாரங்களையும் லயப்பண்ணவேண்டும்
எவனொருவன் ஆத்துமதத்துவத்தை யடைந்து பிரகிருதியை
நாசம்பண்ணுகிறானோ அவனேமுத்தன் அதுவல்லாமல் கொடுத்
ததுருமங்கள்பண்ணினாலும் முத்தனாகமாட்டானென்று வசர்வேதத்
தினும் சுவேதஸ்வதாவுபநிஷத்தினும் சொல்லியிருக்கிறது அத்திய
க்ஷாம்பிரகாசமானவாத்மாவையறிந்தவன் சகலஅஞ்ஞானபாவ
னைகளையுமறுத்து ஜனனமரணசம்சாரமான நிர்வாணத்தைவிட்
டொழியானென்று சகலவேதாந்தசாஸ்திரங்களுஞ்சொல்லுகிற
படியால் சகலநிலைகளையும் விட்டொழிந்த நிஷ்டையடைந்தி
ருந்து அதன்பின்பு பிறவாதமுத்தி.

வினா. நிலைசத்தமையொழிக்கும்விதமெப்படியென்னில்.

விடை. ஆத்மநிஷ்டையிலிருந்தொழிக்கவேண்டியமாகையால் மோட்
சதாரியானவன் சத்காலமு நிஷ்டைபண்ணவேண்டும்
சென்மவாசனையைத்தவிரப் பருப்பதுக்கு விசாரணையினா
ஆதலாற்சகலவாசனைகளும் சமாதிநிஷ்டையாகிய ஞானாக்கினியி
னாற் தகிக்கப்பட்டால்மீண்டுஞ்சென்மத்துக்கேதுவாகமாட்டாது

வினா. அதெப்படியென்னில்.

விடை. அக்கினியினாலறுப்பட்ட வித்து முளைக்கிறதற்கேதுவாகா
ததுபோல ஞானாக்கினியினாற்றகிக்கப்பட்ட வாசனாரூப
மானநினைவுகள் மறுசென்மத்துக்கேதுவாகமாட்டாது ஆகையா

க்ஷுமுமுக்ஷுவானவர்கள் அநேகவாசனாக்ஷயமும் விடாதபாவநிவிர்த்தியுண்டாகும்பொருட்டுப்பிரயத்தினம்பண்ணியானாலும் சதா ஞானசமாதியிற் பழகவேண்டியது இப்படிப்பட்ட ஞானநிஷ்டையுடையவனுக்குக் கன்மம்வேண்டுவதில்லை கன்மத்துக்கு ஞானநிஷ்டைக்குச்சமாலனைகூட்டாவுசிதியாது.

வினா அதெப்படியென்னில்.

விடை. தேகாத்மபுத்தியோடுகூடின கர்த்திருத்வபாவனையைக்கொடுப்பதுகன்மம் அந்தக்கர்த்திருத்வபாவனையைக் கெடுப்பதுஞானம் ஆதலாலொன்றுக்கொன்று விரோதமான ஞானகன்மங்களுக்கெப்படி ஐக்கியங்கூடும் தேஜஸ் திமிரங்களுக்கெப்படி கூட்டாவில்லையோ மேற்குமுகம்பார்க்கிறவனுக்கு கிழக்குமுகம்பார்க்கிறகண்ணிமைத்து விழிக்கிறதற்கெப்படி கூட்டாவில்லையோ அப்படியே அந்தர்முகதிருஷ்டியான ஞானநிஷ்டாபரனுக்குப்பஹிர்முகதிருஷ்டியாலகன்மங்களிற்கூட்டரவில்லை ஆதலால்நிஷ்டாபரனாயிருக்கிறவனுக்குக்கன்மதந்திரத்தொழிலவகாசமில்லை

வினா மற்றெதினாலென்னில்.

விடை. நிராசைதராற் சாதிக்கப்படுகிற கன்மங்களெல்லாமசத்தாகையாலந்தத்தைப்பெயலாற்று சகலநிச்சயங்களையுநீக்கிநிருக்கவேண்டிற் சொருபத்தில் நிலைத்திருப்பதால் அந்தநிஷ்டையே சத்தியபாவத்தனம் அதுவேயனுஷ்டானம் அதுவேவிரதம் அதுவே சகலாமிப்புமாகையால் சுத்தசத்துவமான பரமார்த்தத்தையடைந்திருக்கிற சற்புருஷனுக்குச் சகலமும் ஞானநிஷ்டையைத்தவிரவேறில்லை சகலமும்விட்டுத்துறந்த ஞானநிஷ்டாபராயிருக்கிற சந்நியாசிகளுக்குவேறே கிரியாசாதனங்களொன்றுமில்லை ஆதலால்கிரியாந்தரங்களான தொழில்களெல்லாமொழித்து நிஷ்டாபரனாயிருக்கவேண்டும் ஞானமேடையிலேறவேண்டியபேக்ஷிதிருக்கிற முமுக்ஷுவானவன் ஆத்மநிஷ்டையாகிற கன்மத்தைச்செய்துகொண்டு சஞ்சலரகிதமாய் சதாஆத்மபராயணனாய் ஆத்மசொருபத்தில் நிலைத்திருக்கவேண்டும் ஞானமேடையிலேறவேண்டிய பேக்ஷையுள்ளஅப்பியாசிக்கு ஞானநிஷ்டாசாதனங்களைக்கன்மங்கள் யோகமானமேடையிலேறும்வண்டினை முழுடையுக்கு யோகத்தைத்தவிர வேறுகிரியாந்தரங்களெள்ளளவுமில்லை ஒருவன்யோகியாயிருந்து வேறேகிரியாந்தரங்களைநினைத்தால் மரத்தின்மேலேறித் தவறினவனைப்படிக்கீழ்விழுவானே அப்படியே யோகநிலையில்விழுந்துவிடுவான். ஞானமேடையிலேறியிருக்கிறவிருத்தியனுக்கு விவேகத்தினொளியில் செய்காரியமொன்றுமில்லை இதுவே அந்தர்த்திருசியானுவித்தசவிகற்பசமாதி.

வினா. அந்தர்சத்தானுவித்தமாவதெதென்னில்.

விடை. சுத்தசின்மாத்திரமாய்ச் சேஷிடிக்கப்பட்டசத்தத்துடன் கூடிதான் அசங்கன் சுயம்பிரகாசன் அத்தொய்தனென்கி றசத்தங்களைப்பொருந்தி அந்தச்சத்தங்களைத் தானுகப்பாவித்த பாவனையெதுவோ அதுவே அந்தர்சத்தானுவித்தம்.

வினு. இதற்கனுபவமெப்படியென்னில்

விடை. நான்சுத்தன் சாந்தன் அனந்தன் முன்பின்னெறிறில்லாத வன் உள்ளும்புறனு நிறைந்தபரிபூரணன் ஆனந்தனுயிரு க்கிறவன் சௌஸமானமில்லாதவன் நித்தியானந்தமான அத்தொ ய்தன் என்றும் பிரத்தியகவயின்னமென்றும் அகண்டமென்று ம் சச்சிதாலந்தலட்சணமென்றும் சுத்தமென்றுஞ் சுருதிகளிற் சொல்லப்பட்ட பரஞ்சோதியான பிரமமெதுவோ அதுவேநா னென்னுஞ் சத்தமாத்திரமாயிருக்கிறவிருத்தியோடுகூடி சத்தசா சாமானியமான சத்தத்தைப்பொருந்தி சஞ்சலமில்லாமல் சமாதி திரிசயங்களைச் சொரூபத்திலேலயம்பண்ணி சத்தோதமுதலான சத்தங்களுடன் நிருவிகற்பமானபாவனையைச் சாதிக்கவே ண்டும். இதுவே அந்தர்சத்தானுவித்தசவிகற்பசமாதி.

வினு. அந்தர்நிருவிகற்பமாவதெதென்னில்.

விடை. திரிசயானுவித்த சத்தானுவித்த [illegible] டொழி ந்து மனோவியாபாரத்தையும் கட்டோடேவிட்டொழித் றமே அந்தர்நிருவிகற்பம் எவனொருவன்முன்சொன்ன சவிகற்ப சமாதியையன்புடன்கூடி யிடைவிடாமல் நெடுநாள் பழகுகிறு னோ அவனுக்கு வாசனுக்ஷயமுஞ் சித்தலயமுந் தடையற்றநிரதிசய வானந்தமுஞ்சித்திக்கும் இந்தலட்சணம்பொருந்தினயோகியானவ வன் உள்ளும்புறனுங்காணமல் ஆனந்தாமிர்தக் கடலிலமுழ்கினவ னுய் தன்னைவிடவன்னியமில்லாதவனுயிருப்பன் ஆதலால் நிருவிக ற்பமாகிய பரப்பிரமசொரூபநிஷ்டையைப்பொருந்தினவர்களே சீவன்முத்தர்கள் அவர்களே சித்தன்மைபொருந்தியும் பொருந் தாமலிருக்கிறவர்களென்றறிக, ஒருவன் இந்த ஷவிதசமாதியும் அகமுகத்திற் பழகினதுபோல பகிர்முகத்திலும் அவிமுதிவிர்த்தி யாகும்பொருட்டு பாகியதிரிசயானுவித்த சத்தானுவித்த நிரு விகற்பமென்னு ஷவிதசமாதிகளையும் பழகவேண்டும்.

வினு. பாகியதிரிசயானுவித்தமாவதேதென்னில்,

விடை. அந்தஷ்டானமாய்ச்சச்சிதானந்தமானபரப்பிரமவஸ்துவி ல்கற்பிதமாகநாமரூபாதிசகத்து விளங்குகிறதெப்படியென்று ல் சுவர்ணசீ வெண்மைமெறிஞ்சசிறதாகிவலையென்கிறபேருமொ ன்றுப்கூடின சலநதைதலையென்பதுபோல சச்சிதானந்தநாம ரூபங்களைந்து மொன்றுப்கூடினசொரூபத்தைப்பிரபஞ்சமெ னறு சொல்லப்படுகிறதன்று ஆரோபிதமான நாமரூபமிரண

டையுந்தன்னி அதிஷ்டானமான சச்சிதானந்தசொரூபமாத்திரமென்
றிக்காண்பதே திருசியானுவித்தம் பேதும் சச்சிதானந்தவி
ரமத்தைத்தவிர நாமரூபங்களில்லையென்று நாமரூபங்களை யொ
ழித்து அதிஷ்டானசொரூபத்தைப் பாவிக்கிறவிளைவுடன் னி
த்தியமாய் தயங்குதற்கு நேமமென்று சதாபழகிப் பண்ணவேண்டும்.
வினா. இதற்குபவமெப்படியென்னில்.
விடை. இந்தப்பிரபஞ்சங்களும் பஞ்சபூதகாரியங்களும் நானல்
லவென்னைச்செல்லாமதிஷ்டானமாகியும் விசுத்தமாகியும்
நிரந்தரமிச்சிரமப்பிரமமேதுரியா அதுவேநான் காணப்பட்ட
தாத்தரங்களும் ஜலைக்களும கிரியைகளுஞ் சாதியும் சத்தாதியுஞ்
சப்தாதிகளும் இந்திரியங்களும் பிராணனும் மனமும் புத்தியும்
அகங்காரமுங் நானலவென்கேச்சல்லாமதிஷ்டானமாகியும்
மயங்கிவுமேயு சதானந்தமும் பரமாத்மாவாயிருக்கிற
பிரமமேநான் திரிசியமான நாமரூபங்களெல்லாம்பொய் இதற்
கதிஷ்டானப்பிரமமே சதாசத்தமென்றுபாவித்து நடக்கும்போ
தும் இருக்கும்போதும் சதாதயானித்திருக்கவேண்டும் இது
வேபாவிய திருசியானுவித்தசவிகற்பசமாதி.
வினா. பாவியசத்தானுவித்தமாவதெப்படியென்னில்.
விடை. அதிஷ்டானமான சச்சிதானந்தத்தில் கற்பிதமானநாம
ரூபங்களை யெப்பவும் விடுத்து நிர்மலமாகியும் அத்விதீய
மாகியும் பரமானந்தமாகியுமிருக்கிறபிரமமே நானென்கிறபா
வனைப்பொருந்தியிருப்பது பாவியசத்தானுவித்தம்.
வினா. இதற்குதவமெப்படியென்னில்.
விடை. நிருவிகாரமாகியும் நிராகாரமாகியும் நிரஞ்சனமாகியும்
அருமையாகியும் அப்பிரமேயமாகியும் நித்தியமாகியும் சுத்தமா
கியும் புத்தமாகியும் முத்தமாகியும் பரமாகியும் பிரத்தியகாத்
மாவாகியும் அகண்டமாகியும் சொப்பிரகாசமாகியும் ஏகமா
மாகியும் சதானந்தகூடஸ்தமாகியும் நிருவிகற்பமாகியும் கேவல
மாகியும் பரமாத்மாவாகியுமிருக்கிறபிரமமே நானென்று சத்தங்
களில்லாமல் நிருவிகாரசத்தங்களுடன் கூடிச் சேவலமானவ
பெறலைப்பெறுதல மனசைநிறுத்தித் தியானிப்பதன்றே வேண்டும்
இதுவே பாவிய சத்தானுவித்தசவிகற்பசமாதி.
வினா. பாவிய நிருவிகற்பமாவதெப்படியென்னில்.
விடை. பிரமானந்தபாவனைதிருசியசத்தரூபத்தோடே பேதமாய்ச்ச
ஞ்சலமற்றுத் தீபசகலிகையைப்போலத் திச்சலமாயிருப்
பதேபாவிய நிருவிகற்பம் இப்படிப்பட்ட யோகியானவன் எழுந்
திருக்கும்போதும் இருக்கும்போது மனதையடக்கிப் பிராணாயாமம் பண்ணி
டனைச்சொலநானமாய் இந்தசமாதியை யுத்தியோடு செய்யவேண்டும்

வினா. எவ்வளவுகாலஞ்செய்யவேண்டுமென்னில்.
விடை. எவ்வளவுகாலம்விபரீதபாவனைபோகவில்லையோ அவ்வள
வுகாலஞ்செய்யவேண்டும் மேலும் மோட்சதாகியானவ
ன் அந்தர்பாகியமானவிட்விதசமாதிகளையும் ஒருக்காலுமறந்தி
ருக்கப்படாது மறப்பானானால் சூரியனில்லாதவிடத்திருள்மூடிய
துபோல சொரூபமானதற்பிரகாசத்தை மாயையாகிய இருள்மூ
டிக்கொள்ளும் ஆகலால் தடையற்றசொரூபானந்தப்பிரகாசமா
னது எவ்வளவுகாலஞ் சித்திக்கவில்லையோ அவ்வளவுகாலமும் இந்
தவறுவகைச்சமாதியில் நிரந்தரம்பொழுதுபோக்கவேண்டும்
பெரியோர்கள்ளனேர் சுவானுபவத்தைவிட்டு க்ஷணப்போதும்
பிரிந்திருப்பதில்லை சுவானுபவத்தைமறந்திருப்பதே மிருத்தியுவு
க்குவல்லாமல் வேறேயிருக்கிறதில்லையென்று சுருதியப்படிருநிகவித்
சொல்லுகின்றது ஆதலால் இந்த அறுவகைச்சமாதியிலும் எவன் ப
ழகுகிறானோ அவன்மனதிற்கொருவிகற்பமுமுண்டாகாது இந்த
அப்பியாசத்தினால் சர்வாத்மபாவஞ்சித்திக்கும் இதுவேகைவல்ய
ம், சர்வாத்மபாவம் பொருந்தினதே பிரமவித்தியாபலமென்று
பெரியோர்கள்சொல்லுவார்கள் ஜீவன்முத்தனுக்கு சகலமுந்தானா
யிருக்கிறஆனந்தானுபவம்பிரமபாவனம் [illegible] வனங்கு [illegible] த்தை
பதுமுதலாகிய அசத்தைக்கிரகிக்கிறதே இருதயக்கிரந்தி இந்த இரு
தயக்கிரந்தியானது சமாதியில்வாசனையோடு நசித்துப்போனால்
பிரமமேதானாயிருக்கிற சுவானுபவந்தடையற்றுவிளங்கும் அது
வேமோட்சத்திற்குநேரானவழியென்று பெரியோர்கள்சொல்லு
கிறார்கள் இது சுத்தஅந்தக்கரணனாயிருக்கிறவர்களுக்குச் சதாகா
லமுந்தோற்றும் மற்றபேருக்குத்தோற்றமாட்டாது ஆதலால்மு
முத்தியின்நிச்சதாகாலமும் அறுவகைச்சமாதிகளையும் நன்றாயப்
பியாசித்து இருதயக்கிரந்தியைஞானாக்கினியினால் தகித்துநிரந்த
ரப்பிரமானந்தாமிர்தசமுத்திரத்தில் அழுந்திவிளையாடிக்கொண்
டு சந்தோஷகரமாய் விருத்திசஞ்சலமின்றித்ததாகாரமாயிருக்கி
றதே நிருவிகற்பசமாதி. இந்தநிருவிகற்பசமாதியிலிருப்பவனே
குணத்திரயங்களையுங்கடந்தவன் இஃதில்லாதவன் யோகியாயிரு
ந்தாலும் குணத்திரயவசத்தனாய் சம்சாரத்திற் சுழன்றுதிரிவன்.
வினா. குணத்திரயங்களைக்கடப்பதெப்படியென்னில்.
விடை. தேகத்திரயங்கண்டமிருதபமான சாக்கிரசொப்பனசுழுத்தி
யாகியவவஸ்தாத்திரயவிலட்சணனாயிருப்பது இப்படிநு
ஞானீகமான சுகசமாதியானது ஜீவன்முத்தனுக்கே சித்திக்கும்
மற்றொருவருக்குஞ்சித்தியாது அசத்தாகியவிடயங்களை யனுச
ந்தானம் பண்ணுகிறவன்பத்தன் சத்தாயிருக்கிறவஸ்துசொரூப

த்தைபருசந்தானம் பண்ணுகிறவன் முத்தனென்று சுருதிகளிற் சொல்லுகின்றது ஆதலால்மோட்சதாகியானவன்பிரயாசைப்பட்டாகிலும்சதாபிரயத்தினம்பண்ணி நிருவிகற்பசமாதியடையவேண்டும்இதையடைந்தவனேபவபந்தச்சுழலினின்றுவிடுபட்டவன்.

வினா. பவபந்தமாவதேதென்னில்.

விடை. அவித்தை ஆகம் கன்மமாகியமூன்றும் சீவர்களுக்குப்பவபந்தமென்றுசொல்லப்படும் இது நிருவிகற்பசமாதியினாலன்றி வேறொன்றினாலும் நீங்காது இதற்குநான்குவிரோதமுண்டு.

வினா. நான்குவிரோதமாவதேதென்னில்.

விடை. லயம் விட்சேபம் காஷிபம்ரசாஸ்வாதம்என்பதுகளாம்.

வினா. லயமாவதேதென்னில்.

விடை. அகண்டாகாரவிருத்தி தமோகுணத்துடன்கூடி அகண்டவஸ்துவிற்கூடாமனித்திரைவருகிறதே லயம்.

வினா. இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்.

விடை. ஞானபுத்தியினால் லயத்தைப்போக்கிவிருத்தியைநிருமலம்பண்ணிப்பிரத்தியேகாத்ம அபிமுகமாய் நட்டவேண்டியது.

வினா. விட்சேபமாவதேதென்னில்.

விடை. அப்படிவஸ்துநிலையில்நாட்டுகிறபோது அகண்டாகாரவிருத்திராசதகுணதோஷத்தினால் அந்தநாட்டத்தில் நிலைக்காமல் விடயநாட்டத்திலபிமுகப்படுவதே விட்சேபம்.

வினா. இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்.

விடை. அகண்டாகார விருத்தியினால்நானே விடயங்களிலுள்ள தோஷிக்கினைபாவித்து அதைப்பிரத்தியேகாத்ம அபிமுகப்படுத்திநிற்கவேண்டும்.

வினா. காஷிபமாவதேதென்னில்.

விடை. அகண்டாகாரவிருத்தியானது ராசததாமதகுணங்களால் மூடப்பட்டுலட்சியமானபாதத்துவத்தினுட்டாம லபிரபஞ்சவிடயத்தையுநாடாமல் ஸ்தம்பம்போற்சுத்தமூடமாயிருக்கப்படுகிறதேகாஷிபம்.

வினா. இதற்குநிவிர்த்தியெப்படியென்னில்.

விடை. அகண்டவஸ்துவின் சுகத்தையும் அதன்மகிமையும்சொல்வதாகவும் நிரிசயக்கமெல்லாந்துச்சமென்று போதிப்பதாகவுமிருக்கிறவேதாந்த சாஸ்திரார்த்தங்களை யடிக்கடிவாசித்தேனுஞ்சொல்லவேண்டியது.

வினா. ரசாஸ்வாதமாவதேதென்னில்.

விடை. அகண்டாகாரவிருத்தியானது தான்வைத்த நாட்டத்தினிராமல் பூர்வவாசனையின்வசத்தினால் சுக விகற்பயாலவிஷயசுகங்களைப்போசிக்கப்போகிறதே ரசாஸ்வாதம்.

வினா. இதற்கு நிவிர்த்தியெப்படியென்னில்.

விடை. வயிராக்கியபுத்தியினால் விஷயங்களிலபிமுகப்பட்டவிருத்தியைத்திருப்பிப்பிரத்தியகாத்மவபிமுகமாய்நிறுத்தவேண்டும். இந்தவிரோதங்களன்றிப் பின்னும் பலவிரோதங்கள் வந்தாலும் தியானசமாதிகளால் அந்தவிக்கினங்களைப்போக்கிநிருவிகற்பசமாதியையே அப்பியாசிக்கவேண்டும். விடயங்களில் இந்திரியங்கள்செல்லாதபடி மனோநிக்கிரகம் பண்ணுகிறவனே தீரன் அவனே தீவிரதரமோட்சதாகியுஞ் சகல விருப்பு வெறுப்பற்றவனுமாயிருப்பன் - அவனைக்கண்டமாத்திரத்தில் குருபுத்திராதி சோகமோகங்களெல்லாம் பறந்தோடிப்போம். அப்பால் சகலவிக்கினங்களையும்போக்கி ரட்சிக்கிறவராயிருக்கின்ற பரமேஸ்வரன் அவனிடத்தில் எப்போதும் உன்மனியாய்நின்றுஅவனாலருச்சிக்கப்பட்டு விளங்குவர் ஆதலால்மோட்சதாகியானவன் சகலவிக்கினங்களையுமொழித்து ஈஸ்வரனைப் பரமாக வைத்துக்கொண்டு ஈஸ்வரசகாயத்தினால் நிருவிகற்பசமாதியைச் செய்யவேண்டும். இப்படிப்பட்ட ராஜயோகியானவன் உள்ளும் புறம்புஞ்சொரூபத்தைத்தவிர அன்னியமில்லாத பரப்பிரமசொரூபத்தானேயாய் சகலதொழிலுமற்றுச் சும்மாவிருப்பன் இதுவே முத்திசாதனநிலை இதைஉன்மனியாவஸ்தையென்றுசொல்லப்படும்.

வினா. உன்மனியாவஸ்தையாவதேதென்னில்.

விடை. நிருவிகற்பமாயிருக்கிற ஆத்மாவினிடத்தில் ஆத்மாகாரமாய் ஏகரூபமாயிருக்கிற அகண்டாகார விருத்திஞானமே யுன்மனியாவஸ்தையென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இந்தப்பிரகாரம் அத்வைதபரப்பிரமப்பிரகாசத்தினால் அஞ்ஞானாந்தகார நிவிர்த்தியாகித் தானே பரப்பிரம சாட்சாத்காரசொரூபமாய்விளங்கும்போது, தேகேந்திரியாதிகளில் நானெனதென்றெழுகிற இருதயக்கிரந்தியும் சொரூபத்தைத்தெரியவொட்டாமல் மறைத்திருந்த சம்சயங்களுஞ் சகலகன்மங்களுஞ் அஞ்ஞானதுக்கமாதலாலதைபடியேறு மரசம்பவினைவம்மை பிரமயித்து அவனேசிரேஷ்டன் அவனே சகலபந்தங்களுமொழிந்தவன் இந்த நிருவிகற்பசமாதியினால் தொய்ததோற்றங்கள் மேலெழுமில்லாமல் விட்டுக் கேவலசொரூபானந்தமாத்திரமாய் நினைப்பு மறப்பாகிய சுத்தத்திரிபுடியுந் தோற்றாதிருப்பதே அத்வைதசாட்சாத்காரநிலை இந்தச்சுவானுபூதியாகிய நிட்டைநிலையில் விடயமுமில்லை புசிப்பவனுமில்லை யாதலால் இதைத்தாழ்வபரிஞானமென்று பேரஞானமென்றுஞ் சொரூபஞானமென்றுஞ்சொல்லுவார்கள்.

வினா. இன்னம் பலவகையாகச்சொல்லுகின்ற முத்திநிச்சயங்களேதென்னில்.

விடை. அசைவறத்தெளிந்தவிடமே முத்தியென்றும் மும்மலந் நீங்கினவிடமே முத்தியென்றும் சாக்கிராதீதமே முத்தியென்றும் நினைப்பற நினைத்தழுந்திப் பரமாணுவாய்ப் பேரொளியாய்நின்றவிடமே முத்தியென்றும் முட்பாழுங் கடந்தவிடமே முத்தியென்றும் சுத்தத்திரிபுடி நீங்கினவிடமே முத்தியென்றும் சகலகேவலமாகிய நினைப்புமறப்பற்றவிடமே முத்தியென்றும்மெ ஞேயமானவிடமே முத்தியென்றும ஒப்ப நிதமே முத்தியென்றும் காமம்வெகுளிமயக்கமென்னு முக்குற்றங்களுநீங்கினவிடமே முத்தியென்றும் பலஞானசாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது இவைகளெல்லாம் அபரோட்சசாட்சாத்காரவனந்தானுபவத்திற் சமமாயிருக்கும். இதுவுமல்லாமல் வேறுபாடியமாகியப் பரமதங்களில் ஸ்திரிசையோகமே முத்தியென்றும் மந்திரமந்தமதிக்கேமுத்தியென்றும் நிரிகுணமடங்குவதே முத்தியென்றும் இருவினைக்கெடுகையே முத்தியென்றும் பாஷாணமாயிருப்பதே முத்தியென்றும் விவேகமுண்டாவதே முத்தியென்றும் சிவத்துவங்கெடுவதே முத்தியென்றும் பலவிதங்களாகச் சொல்லுவதெல்லாம்முத்தியல்லவென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அபரோட்சசொருபசாட்சாத்காரமாகிய பிரமானந்தபரவசத்தினுல் சொரூபவியாபகத்திலே போதமாய் பறந்துசகலதொழிலுமற்றநிச்சலானந்தமாயிருப்பதே மதுநிதியாய்விளங்கும் நிருவிகற்பமானநித்தமுத்தியென்றறியவேண்டியது - சித்தம். மோக்ஷவிருப்பங்கொண்ட அதிதீவிரபக்குவனானவொருவன் நிஷ்காமியமாய் சிவபுண்ணியங்களைச்செய்ய வசனையிருவினையொப்புண்டாகி மலபரிபாகம்பிறந்து அதனாற்சத்திநிபாதம்பிறந்து சற்குருதரிசனவபேட்சையுண்டானகாலத்தில் அவனுக்குயிர்க்குயிராய் நின்ற ஆனந்த நிர்மலபிரமமே கிருபையினுற் சரீரமெடுத்து ஆசிரியமூர்த்தமாயெழுந்தருளிவந்து பிரமோபதேசமான ஞானதீக்ஷைசெய்து ஞானசாஸ்திரார்த்தங்களைப் போதித்தருளும் அதைக்கேட்டுச் சிந்தித்துத்தெளிந்து ஞானநிஷ்டைகூடி நிருவிகற்பசமாதிபொருந்தி மோட்சசாந்தியடைந்து தான்பெற்றபேறு உலகம்பெறவேண்டுமென்னுங்கருத்தால் உலகத்தில் சதாநிஷ்டாபரனுகிய சிவன்முத்தனாய்ச் சிறந்திருப்பன் அந்தமகானுபவனுல் பின்னுள்ளப் [illegible] சமுதலானை துகளுண்டாம் இதிசந்தேக [illegible] பது. சித்தம்.

ஆறுவது நிருவாணப்பிரகரணமுற்றிற்று.

[illegible] சாரமுற்றும்.